
# விஷயானந்தம், பேரானந்தம், யோகானந்தம், பிரம்மானந்தம்.



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா





விஷயானந்தம், பேரானந்தம்,

யோகானந்தம், பிரம்மானந்தம்.

# பொருளடக்கம்


1. விஷயானந்தம் ---------------------------------------------------------------- 1
2. பேரானந்தம் ---------------------------------------------------------------- 3
3. யோகானந்தம் ---------------------------------------------------------------- 6
    அ. மனம் ---------------------------------------------------------------- 10
5. பிரம்மானந்தம் ---------------------------------------------------------------- 14
6. ஜாக்ரதா நிலை விளக்கம் ---------------------------------------------------------------- 26
7. ஸ்வப்னம் நிலை விளக்கம் ---------------------------------------------------------------- 30
8. சுஷுப்தி நிலை விளக்கம் ---------------------------------------------------------------- 36
9. தத்வ போதம்.
    அ. த்வம்பத லட்சியம் - விபரம் ---------------------------------------------------------------- 44
    ஆ. தத்பத லட்சியம் - விபரம் ---------------------------------------------------------------- 56
    இ. தத்வார்த்தங்கள் - விபரம் ---------------------------------------------------------------- 66
        1. பஞ்சபூதங்கள் ---------------------------------------------------------------- 66
        2. ஞானேந்திரியங்கள் ---------------------------------------------------------------- 68
        3. கர்மேந்திரியங்கள் ---------------------------------------------------------------- 70
        4. கோசங்கள் (இணைப்பு) ---------------------------------------------------------------- 72
            *i.* அன்னமயம் ---------------------------------------------------------------- 72
            *ii.* பிராணமயம் ---------------------------------------------------------------- 73
            *iii.* மனோமயம் ---------------------------------------------------------------- 75
            *iv.* விஞ்ஞானமயம் ---------------------------------------------------------------- 76
            *v.* ஆனந்தமயம் ---------------------------------------------------------------- 77
        5. அந்தக்கரணங்கள் ---------------------------------------------------------------- 78
            *i.* மனம் ---------------------------------------------------------------- 78
            *ii.* புத்தி ---------------------------------------------------------------- 79
            *iii.* சித்தம் ---------------------------------------------------------------- 80
            *iv.* அஹங்காரம் ---------------------------------------------------------------- 81
10. முடிவுரை ---------------------------------------------------------------- 84


எல்லாம் நீ! -



உ

யோகானந்தத்திற்கும், பிரம்மானந்தத்திற்கும்
உள்ள வித்தியாசம்!!

ஓம் அன்பின் அமுத ஸ்வரூபங்களே!

ஆனந்தம் நான்கு வகைப்படும் என்பார்கள் அவைகளாவன! 1 விஷயானந்தம், 2. பேரானந்தம் 3. யோகானந்தம், 4. பிரம்மானந்தம் என நான்காகும். பெரும்பாலும் விஷயானந்தத்திற்கும், பேரானந்தத்திற்கும் அனைவருக்கும் விளக்கம் தெரியும் இருந்தாலும் இந்த நான்கிற்குமே சற்று விளக்கம் தருகிறேன் உணர்க!

1 விஷயானந்தம் :- இது உலக விஷயாதிகளில் கிடைக்கும் ஆனந்தமாகும். இதில் ஓர் உண்மை என்னவென்றால் உலக விஷயங்களில் கிடைக்கும் ஆனந்தம், ஆனந்தமல்ல அது இன்பமாகும். ஆனந்தம் வேறு இன்பம் வேறு, ஆனந்தம் என்றால் ஆ + அந்தம் = ஆனந்தம், ஆ என்றால் பசுத் (ஜீவத்) தன்மையும் அதனால் உண்டான பாசத் தன்மையும் அந்தமாகி விட்டால் அதாவது முடிந்து விட்டால் கிடைப்பது தான் ஆனந்தம். விஷயாதிகளில் பற்று பாசம் கொண்ட ஜீவனுக்கு விஷயானந்தம் ஆகாது அது இன்பமாகும் ஆகவே இதை சிற்றின்பம் என சொல்லலாம், அதாவது இதை சிறிதளவில் இன்பமாகும். அதாவது விஷயானந்தத்தை சிற்றின்பம் என்றும் தெய்வீக (பக்தி) நிலையை பேரின்பம் அதாவது பேரானந்தம் எனவும் சொல்லலாம். இந்த சிற்றின்பமாவது அதாவது சிறிதளவு இன்பமாவது காண்பதில் இன்பம், கேட்பதில் இன்பம், நுகர்வதில் இன்பம், சுவைப்பதில் இன்பம், தொட்டு ஸ்பரிசிப்பதில் இன்பம் என ஐந்தாகும்

இவை விஷயாதிகள் அதாவது விஷயங்கள் அதாவது விஷங்கள் பற்றி விருப்பதனால் இவை சிற்றின்பமாகிறது.

விஷயாதிகள் :- உடல் உலக நாமரூபங்கள்.
விஷயங்கள் :- உடல் உலக நாமரூப சம்பந்த குணங்கள்.
விஷங்கள் :- உடல் உலக நாமரூப சம்பந்தம் கொண்ட குண் திசயங்களில் விடமுடியாமல் கிரீடிப்பது (கிரீடிப்பது = விளையாடுவது)



உ

உலக நாமரூபங்களை இந்த மனம் காண்பதால் விஷயாதிகள் தோன்றுகின்றன!
உலக நாமரூபங்களை இந்த மனமானது இனவேறுபாட்டுடன் பார்ப்பதால் விஷயங்கள் தோன்றுகின்றன.
இந்த மனமானது உலக நாமரூபங்களை இது இன்னது, இது இன்னது செய்யும், இதில் இது அடக்கம் எனபற்பல விதங்களாக கற்பனைகளை விரித்து விஷயங்களாகிய விஷங்களை தோற்றுவித்துக் கொள்கின்றது!

இதிலோர் ரகஸ்யம்!

விஷயாதிகளை, விஷயங்களாக்கி, அதை விஷமாகமாற்றியபார்த்தாலும் கூடபரவாயில்லை, அது அந்த பொருள்களோடு நின்று விடாது அவைகளை நான் செய்தேன் என்றும், என்னால் தான் முடியும் என்றும், நான் இல்லையானால் இது நடைபெறாது என்றும், நான் தேடியது என்னுடைமையென்றும், எங்கப்பன் தேடியது, என் தாத்தா தேடியது என்னுடையது என்றும் "அஹங்கார அபிமானங்களால்" சொந்தமும், அந்த சொந்தத்தால் பந்தமும், அந்த பந்தத்தால் பாசமும் அந்த பாசத்தினால் பிறப்பிறப்பென்கின்ற வினைகளையும் தாமே வலியவே இந்த ஜீவன் ஏற்றுக் கொள்கிறான்!

மேலே கூறிய பார்ப்பதிலும், கேட்பதிலும், நுகர்வதிலும், ருசிப்பதிலும், ஸ்பரிசிப்பதிலும் "நான் எனது" விடாமல் செய்து அதில் கிடைக்கும் இன்பத்தை சிற்றின்பமாக நுகர்ந்து அதை மறக்க முடியாமலும் அவைகளை விட முடியாமலும் விஷயானந்தத்தில் மூழ்கிய ஜீவன் இவைகளை விட்டமறு கணமே பேரின்பத்திற்கு அதாவது பேரானந்தத்திற்கு போகமுடியும். எங்கு நோக்கினும் விஷய போகத்தின் செயல்களாகிய சிற்றின்பமே. இதை முழுமையாக விட்டாலன்றி பேரின்பத்திற்கு வேறுமார்க்கமே இல்லை. இந்த கடுமையான கலியுகத்தில் இறைவனை முழுமையாக சரண்புகுவதல்லாது வேறுமார்க்கம் இல்லவே இல்லை! உலகம் அவன் சிருஷ்டி, உலகபொருள் அனைத்தும் அவனுடையதே! உறவு சுற்றம் அனைத்தும் அவனுடையதே "எல்லாம் நீயே" என சர்வார்ப்பணமாக அவனிடம் விட்டால் அதை அவன் ஏற்க தயாராக இருக்கிறான் ஆகவே இவை அனைத்தையும், விஷயாதிகளையும், விஷயங்களையும், அனைத்து விஷய போகங்களையும் விட்ட மறு கணம் நீங்கள் பேரின்பமாகிய பேரானந்தம் அடைக்கலாம்!



உ

௨. பேரானந்தம் :- இதை பேரானந்தம் அதாவது பெயரளவில் ஆனந்தமாகும் நிஜத்த ஆனந்தமாகாது. இது பேரின்பம் எனவும் சொல்வதுண்டு அதைப்போல பெயரளவில் இன்பமாகும். இந்த பேரானந்தத்தில் ஓர் ரகஸ்யம் அடங்கியிருக்கிறது!

அதாவது
“பெயரில் மட்டும் ஆனந்தம், பெயரில் மட்டும் இன்பம்!”

இதை நன்கு உணரவும்
**“பரம் ஒன்றே ஸத்யம்”**
மற்றும் அனைத்தும் ஸத்யத்தின் பிரதிபிம்பங்களே!

பரத்திலிருந்து தேவ தெய்வங்களும் அவைகளிலிருந்து அண்டபிண்ட சராசரங்களும் அவைகளை புசிப்பதற்காக அனைத்து ஜீவ வர்க்கங்களும் இவைகளை ஆழ்வதற்காக மனித வர்க்கங்களும் தோன்றின.
“மனிதன் ஆழவந்தவனே தவிர வாழ வரவில்லை, மாழவும் அதாவது சாகவும் வரவில்லை!”

ஆழவந்தவன்:- ஓர் சக்ரவர்த்தி எப்படி எதையும் கண்டுகொள்ளாமலும், கண்டிக்காமலும், தண்டிக்காமலும் அனைத்திற்கும் சாட்சியாக இருந்து கொண்டு அனைத்துக் காட்சிகளிலும் ஈடுபட்டு ஆகாமல் ஆனந்தமாக “ஆழ்கின்றானோ” (இறைஉணர்வோடு ஆழ்ந்து போகின்றானோ) அதைப்போல ஆழவந்தவனே! இங்கு அரசன் அப்படியல்ல தர்மாதர்மத்தைக் கண்டு நீதி பரிபாலனம் பண்ணப்பட்டவன்.
“சக்ரவர்த்தி என்றாலே சக்கரம் போல் எதிலும் பற்றற்று சுழல்பவன்” எனப் பொருள்படும்! இறைவன் கையில் உள்ள சக்கரம் அவன் விரலையே ஆதாரமாகக் கொண்டது. அது இறை அம்சம் கொண்டது!
இறை அம்சம் இல்லை. அதாவது சாப்பிடமட்டும் வரவில்லை!

இந்த பேரானந்தம் என்று சொல்லும் பேரின்பம் அதாவது இறைரூபம் நம் கற்பனையால் கொடுக்கப்பட்ட நாமரூபம் ஆகிறது. அதை நேசித்து உறுதியுடன் நம் நம் பக்தியினால் நாமரூபம் பெறுகிறது. நாமம் என்றாலே பெயர் பெயரும் வடிவமும் கொண்ட இறைவன் மேல் தீராத காதல் கொண்டு எப்படி எப்படி எல்லாம் ரசிக்க வேண்டுமோ அப்படி அப்படி எல்லாம் ரசித்து கொண்டாடலாம், கூத்தாடலாம், ஆடலாம், பாடலாம், கொஞ்சலாம், குலாவலாம், அனைத்து நிலைகளிலும் இரசிக்கலாம்.
“அப்படிப் பெயரோடு விளையாடி நம் ஆனந்தத்தை பெருக்குவதால் அது பெயரளவில் ஆனந்தம் என்றும் பேரானந்தம் என்றும் பேரின்பம் என்றும் சொல்லி ஆனந்திக்கிறோம்! பெயரில் ஆனந்தம் பேரானந்தம்!



ஆனால் இங்கு சிற்றின்பம் அதாவது விஷயங்களில் விஷம் என செலுத்தும் விஷயானந்தம் பேரின்பம் என்று சொல்லும் பேரானந்தத்திற்கு பொருந்தாது. ஆனால் இங்கு ஒற்றுமை வேற்றுமைகளை ஆராயுமிடத்து

சிற்றின்பம் :- பொன், பொருள், மண், மனைவி, மக்கள், உறவு சுற்றம் என

"பொருளோடு விளையாடுகின்றோம்!"

பேரின்பம் :- மாயா சம்பந்தம் இருந்தாலும் இறை நாமத்தை உண்டு பண்ணி பஜனை, நாமசங்கீர்த்தனை, நாமஸ்மரணையோடு கூடி

"பெயரோடு விளையாடுகின்றோம்"!

ஆனால் இந்த விளையாட்டு தேவையான ஒன்றாகி விட்டது! ஏன் என்றால்
உலகம் அதன் பொருள்களும் ஜடம், மூடம், அவித்தை!
அதை வித்தையாகவும், இன்பதுன்பமாகவும் மாற்றித் தருவது
மாயா சொரூபமான இறைவனாகும்!

இப்போது முழு ஜடமாகவும், மூடமாகவும், அவித்தையாகவும் இருந்த பிரயோஜனம் அற்ற ஒன்றை பிரயோஜனம் உள்ளதாக்கி தம நிலை (மனதை)யும் கொடுத்து பற்றச் செய்த அந்த மாயா சொரூப இறைவனிடம் கோடி நமஸ்காரம் செய்தும், வந்தனம் செய்தும், நன்றியை செலுத்தியும்

**"அவனிடம் அவன் பொருளை ஒப்படைக்க**
**அவனாகிய பேரானந்தம் தேவை!!!**

"இவ்வுலகம் அவித்தைக்கும் மாயைக்கும் நடைபெறும்
ஓர் மாபெரும் போராட்டமாகும்"!!

ஆனால் ஓர் உண்மையை உணர வேண்டும். உலகம் என்ற நாமரூபத்தோடும், அதன் விஷயங்களோடும் பின்னிப் பிணைந்து
"நீ இல்லாமல் நான் இல்லை என்றும் நான் இல்லாமல் நீ இல்லை"
என்றும் விளையாடிய ஜீவாத்மா என்ற ஜீவகளையை நாம் எங்கு விட வேண்டுமோ அங்கு விட்டு விட்டால்தான் நாம் ஆத்ம ஸ்வரூபம் பெற முடியும். ஆகவே இந்த சிற்றின்பம் முடிவு பெற அதாவது அது அழிய வேண்டுமானால் பேரின்பம் என்ற இறை சொரூபத்தை கை கொண்டு "சிற்றின்பத்தை பேரின்பத்தால் அழித்து" நான் ஆக வேண்டும் முடிவில் அவ்விரண்டையும் விட்டுவிடலாம்!



உ

குழந்தைகளே!

ஒன்றை நன்கு கவனிக்கவும்

சிற்றின்பத்தை துறக்க வேண்டுமானால் பேரின்பம் அவஸ்யம் தேவை! பேரின்பம் அனுபவிக்காமல் அதாவது பேரானந்தம் அனுபவிக்காமல், அதை சுவைத்துவிடாமல், அதை ஓர்படியாக மிதித்து ஏறாமல் பிரம்மானந்தம் கிட்டாது! இது உறுதி. இதுபரியந்தம் விஷயானந்தமாகிய சிற்றின்பத்திற்கும் பேரின்பமாகிய பேரானந்தத்திற்கும் விளக்கம் கொடுத்தோம். இனி யோகானந்தத்திற்கும் பிரம்மானந்தத்திற்கும் விளக்கம் தருகிறோம் உணர்க!

பேரானந்தத்திற்கும் விஷய இனிமைகளை அவஸ்யம் துறக்க வேண்டும். விஷய சுகம் அணுப்பிரமாணம் இருந்தாலும் பேரானந்தம் லபிதமாகாது. இந்த விஷய சுகத்தை விட வேண்டுமானால் **"பிரேம பக்தி"** அவஸ்யம் தேவை. இந்த பிரேமபக்திக்கு கதம்பம் இதழில் விளக்கம் தந்தோம்! அதன்படி பிரேமபக்தியினால் விஷய சுகத்தை கெடுத்து பேரானந்தம் அனுபவிக்க வேண்டும். இதுவரை பாடம் கேட்ட அன்பர்களே! இனி சற்று கவனமாக கேட்க வேண்டும்.

"இந்த பேரானந்தத்திலிருந்துதான் பாதை இரண்டாக பிரிந்து ஒன்று யோகானந்தத்திற்கும் ஒன்று பிரம்மானந்தத்திற்கும்" பிரிகிறது.

ஓர் விஷயம் முக்யம் :- யோகசாதனை கடுமையாக செய்து அதைப்பிடிக்க விஷய சுகத்தை அவஸ்யம் விட வேண்டும்! விஷய வாஸனைகளை இல்லாமல் அடியோடு நிக்ரஹம் செய்து பேரின்பமாகிய பேரானந்தம் (இறைஅருள்) பெறாமலேயே யோகானந்தம் பெற முடியும். இது மிக மிக மிக மிக மிக கடினம்.

1. பேரின்பமாகிய பேரானந்தத்தில் அனுபவித்து அந்த பகவான் கிருபை பெற்றும் போகலாம் யோகானந்தத்திற்கு!
2. விஷய சுகம் நிக்ரஹம் செய்து பேரானந்தம் பெறாமலும் அந்த யோகானந்தம் செல்லலாம்!
3. விஷய சுகம் நிக்ரஹித்து பேரானந்தமும் பரிபூரணமாக அனுபவிக்கும் போது யோகசாதனை செய்து "பக்தியையும் யோகத்தையும் இணைத்து" பிரம்மானு சந்தானம் செய்தால் பிரம்மானந்தம் அதிசுலபமாக கிடைக்கும்!





3. யோகானந்தம்:- குழந்தைகளே! இந்த யோகத்தை முறையாக தொடர்ந்து செய்து

“யோக சித்தி பெற்றால் அது அஷ்ட சித்தியாகும்”!!

“யோகத்தோடு கூடி (யோக சித்தி பெறுமவ்) ஞான விசாரணை செய்தால் அது பிரம்மானந்தமாகும்”!!

யோக சித்தி:- இது வாலிப நிலையாகும்!

பக்தி வைரம் அறியா குழந்தையாகும்!

ஆத்ம ஞானம் ஒன்றும் இல்லாத வயோதிக நிலை!

ஓர் ஸத்யமான பழமொழி:- யோகத்தை தொட்டவன் விட்டவன் கெட்டான்!!

அதாவது யோகம் தொடுவது மகா மகா கடினம். அதை தொட்டு பயிற்சி செய்தவன் அரை குறையில் விட்டுவிட்டால் அவன் நாசமடைவான்!

“குரு சந்நிதானம் இல்லாமல் புஸ்தகம் மட்டும் வைத்துக்கொண்டு யோக சாதனம் செய்யாதே”!!

அப்படி செய்தால் அழிவது அதாவது நாசமாவது திண்ணம்.

யோகம் அனுஷ்டித்தவர்கள் அனைவருமே முழு நிலை (யோகானந்தம்) பெற முடியாது. எங்கோ ஒரு சிலரே முழு நிலை பெறுகின்றனர். யோகத்தை முழுமையாக சித்தி செய்த ஆசானும் இந்த கலியுகத்தில் கிடைப்பது அருமையிலும் அருமை!

யோகாசனப் பயிற்சி வேறு:- இது ஆசனப் பயிற்சி!

யோகானந்த நிலை வேறு:- இது பிராணவாயுவை ஸ்தம்பனம் பண்ணி கருவி கரணங்களை ஒடுக்கி மனதை ஒருநிலைப்படுத்தி அந்த மனதையும் ஒழித்து வெட்டவெளியில் அதாவது சுத்த சூனியத்தில் மனதை கரைத்து இல்லாமல் செய்து சூனியமாய் இருப்பது. இந்த யோகானந்த நிலை கூடுபவனுக்கு

ஆத்ம விசாரத்துடன் சென்றால் பிரம்மானந்தம் அதாவது ஜீவன் முக்தி என்ற பிறவா நிலை சாத்தியமாகும்!!

ஆத்மவிசாரம் செய்யாமல் யோகத்தை மட்டும் செய்பவனின் ஜீவன் முக்தி இல்லை. யோகானந்தத்துடன் அஷ்ட சித்திகள் கைகூடும்.



2

அந்த யோக சாதனையானது ஏன் வாலிப பருவம் என
சொன்னேனென்றால் குருகிருபை உண்டு! இறைகிருபை இல்லை.
“யோக குரு” அகங்காரம் என்ற ஆணவத்துடன் தானிருக்க முடியும்.
நான் செய்கிறேன்; என்னால் முடியும்; என்ற வேகமான ஆற்ற
லுடன் தானிருப்பார். அதையே நம் இளைஞருக்கும் போதிப்பார்
“இறைவனை நம்புவதில்லை” ஆனால் “தம் பிராண வாயுவை நம்புவார்”.
வாயுவே (பிராணனே) அனைத்திற்கும் ஆதாரம் என்பார்!
பிராணனே ஆக்கத்திற்கும் அழிவுக்கும் காரணம் என்பார்!
உலகம் அனைத்தையும் இயக்குவது பிராணனே என்றும்; மனதை
அடக்குவதும் (அழிப்பதல்ல) பிராணன் என்றும், தமக்குள்
அடங்கிய மனதை வைத்துக்கொண்டு அசகாய சூர சக்திகளை
யெல்லாம் அதாவது திரிகர்த்தாக்களின் தொழிலையும் தானே
செய்யலாம் என்றும்; திரிகர்த்தாக்களையும் தமக்கு பணிபுரிய
வைக்கும் ஆற்றல் உண்டென்றும்
“அதிவேகத்தோடு கூடியவர் “யோக குரு” //

இவரை சித்தர் எனவும் சொல்லலாம் அஷ்டசித்திகளும்
இவருக்குள் அடங்கும்! இந்த யோக சாதனை செய்யும் சாதகன் தன்
பிராணவாயுவை ஸ்தம்பனம் பண்ணி மனதை தன் வசப்படு
த்த வேண்டும். ஒவ்வொரு மனிதனின் உள்ளும் உச்சி முதல்
உள்ளங்கால் வரை 96 (தொண்ணூற்றி ஆறு) தேவதைகள்
உண்டு; இவர்கள் அனைவரையும் அடக்கி தன் வசப்படுத்த
வேண்டும்! தம் யோக வலிமையினால் அத்தேவதைகளை அடக்கும்
போது அவர்களுடன் போராட வேண்டும்! இந்த யோக சாதனை
செய்பவர்களுக்கு “காமமும் கோபமும்” கூடாது. ஆகவே
இந்த சாதகர்களை மேலே சொன்ன இரண்டையும் வைத்து எப்படி அவர்களை
கெடுக்க வேண்டுமோ அப்படி தக்க தருணம் பார்த்து கெடுத்து அவர்கள்
தவ வலிமையை கெடுப்பார்கள் இந்த தேவர்கள்! ஆகவே இந்த
சாதகன் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவர்கள்
ஆத்ம விசாரம் செய்யாத் தன்மையினால் தாம் (யோக) சக்தியையே
நம்பி இருக்க வேண்டும். அப்படி இறைகிருபையை நம்பாமல் பிராண
வாயுவை நம்பி செயல்புரிவதால் இதை வாலிப பருவம் என்றோம்!



உ

குழந்தைகளே! "பக்தி" என்றால் ஓர் தாயின் கைகளில் அவளால் பற்றப்பட்டு தாயின் அரவணைப்பிலே நடந்து விளையாடும் ஓர் விபரம் அறியாத குழந்தையாகும். இது முழுசரணாகதியினால் பெறுவதாகும்!

"யோகம்" என்றால் வாலிப நிலையின் தான் எந்த உதவியும் நாடாமல் தானே இயங்குவதாகும். இங்கு நான் செய்கிறேன், என்னால் முடியும், என்ற அஹங்காரம் மிகுதியாக இருக்கும்! இங்கு சரணாகதி இல்லை!

"ஆத்மஞானம்" என்றால் எதுவும் இயலாத ஓர் வயோதிக தன்மையாகும். இங்கு இவனுக்கு ஓர் ஊன்றுகோல் அவஸ்யம் வேண்டும். இந்த ஊன்றுகோலே ஸ்ரீ சத்குருவாகும்! இங்கு தம் ஸத்குருவிடம் முழுமையான சரணாகதி உண்டு!

இங்கு யோக சாதனை செய்து அதன் பலன் அஷ்டசித்திகளில் ஏதாவது ஒன்றிரண்டை பெற்றுக் கொண்டு சித்த புருஷனாய் அஹங்கார ஆணவத்தோடு ஆனந்தம் அனுபவித்தவாகும். இதை யோகானந்தம் எனச்சொல்வதுண்டு!

ஆனால்!

இந்த கலியுகத்தில் இந்த யோகசாதனை முழுமையாக செய்யும் மஹான்களையும் காணோம்; சிஷ்யர்களையும் காணோம்! ஆனாலும் யோகசாதனை செய்கிறேன் என்று சொல்பவர்களை இக்கலியில் நிறையக் காண்கிறோம். அவர்கள் எவரிடமாவது அஹங்காரம் இருந்தாலும் பரவாயில்லை "தூல அபிமானம்" நிறைய இருக்கிறது! உடலில் அபிமானம், உடைமையில் அபிமானம், உறவில் அபிமானம், உரிமையில் அபிமானம் என இன்னும் பற்பல விதங்களில் **"என்னுடையது"** என்ற அபிமானம் நிறைய இருக்கிறது. ஆனால் அனேகரிடம் சித்துவேலைகள் எனச்சொல்லி "உருப்படாத செப்படிவித்தைகள்" அதாவது கண்கட்டி வித்தைகள், அதாவது குறளிவேலைகள், அதாவது மை வேலைகள் நிறைய இருக்கிறது. இதுவும் வியாபார நிமித்தமாகவும், விளம்பர நிமித்தமாகவும் இருக்கிறது



உ

ஆறவும்!!

யோக சாதனை முழுமையாக செய்ய வேண்டிய ஓர் சாதகன் யோக சாதனை செய்து முழுமையாக முதிர்ச்சி அடைந்த ஓர் குருவை அடைய வேண்டும்! அவரிடம் சேவை செய்ய வேண்டும் தாம் முழுநிலை பெறும்வரையிலும் அவன் தன் குருதேவரை விட்டு செல்லக் கூடாது! யோக சாதனையும் செய்து கொண்டு ஆத்ம விசாரமும் (உண்மை இன்மையை பிரித்தறிந்து இன்மையைத் தள்ளி உண்மையாக நிற்றல்) செய்து முன்னோர் அனுபவ நிலைப்படி வேதாந்தங்களையும், உண்மையின் சாஸ்திரங்களையும் கடைப் பிடித்து வருவானாயின் அவன் யோக சாதனை பயன் பெறும்! இது தேவ தெய்வங்களையும் எதிர்த்துப் போராடி அதில் வெற்றி பெற்றவர்களுக்கே இது கிட்டுகிறபடியால் இந்த சாதனை செய்ய "நல்ல யோகமும்" (அதிஷ்டமும்) வேண்டும். அதிஷ்டம் என்றாலே அது இஷ்டத்திற்கு நம்மை தேடி வர வேண்டும். நம் இஷ்டத்திற்கு அது வாராதபடியால்
"முன் ஜன்மாவில் தெய்வ கிருபையும் பூர்வ புண்ணியமும்"!!
அவஸ்யம் வேண்டும்! இருந்தால் இது சாத்தியமாகும்.

இந்த யோகானந்தத்தில் மூழ்கியவர்கள் பெரும்பாலும் அஷ்டசித்திகளுடன் கூடி "சித்தபுருஷர்களாகவே" இருப்பார்கள். அவர்கள் "முக்தபுருஷர்களாக" இருக்கமாட்டார்கள். இவர்கள் மனதை தம் நிலைக்கு ஒடுக்கி கடினத்தன்மையோடு கூடி பற்பல அசகாய சூரசக்திகளோடு இருப்பதால் இவர்களை தேவ தெய்வங்களுக்கும் அப்பாற்பட்ட நிலையில் இருப்பதாக கொள்ள வேண்டும். மஹான்கள் இவர்களைப் பற்றி சொல்வதுண்டு அதாவது மஹாப்பிரளயத்தில் திரிகர்த்தாக்களும் கூட முக்தி நிலை பெற்று பரத்தோடு கலந்துவிடுவார்கள் என்றும், இவர்கள் தம் சித்திகளின் வன்மையால்
"மனோவடிவ அதிருட்ப அதி சூட்சும"
வடிவமைத்து பரத்திலும் கரையாமல் தாம் ஒதுங்கி இருந்து அடுத்த யுகங்களில் தம்மைத்தாமே தோற்றுவித்துக் கொள்கிறார்கள் என சொல்வதுண்டு! இந்த மாயா மனதிற்கு எத்தனை வல்லமைகள் இருக்கிறது என தெரிகிறதல்லவா! மனதைப் பற்றிய ஒரு ரகசியங்களையும் தெரியப்படுத்துகிறேன் உணர்வீர்!



# மனம் !!!

1 மனதிற்கு வடிவம் உண்டு!
2. மனதிற்கு வடிவம் இல்லை!!
இப்படி இரண்டு நிலைகளில் சொல்கிறோமே என திகைப்பாக இருக்கிறதா! சற்று கீழே உற்று உணர்ந்து நோக்கவும்!

1. மனதிற்கு வடிவம் உண்டு:- உன்னை ஒன்று கேட்கிறோம் உனக்கு அம்மா அப்பா உண்டா எனக்கேட்டால் உண்டு எனத் தானே சொல்வாய்! யாம் இல்லையென்போம்!

நீ:- இது என்ன ஈன்ற அன்னையும் தந்தையும் என அவர்களை சுட்டிக் காட்டுவாய்!

யாம்:- இவை மாம்ஸ பிண்டம் தானே, இரு பதுமைகள் தானே இவைகளை எப்படி அன்னை தந்தையெனச் சொல்கிறாய்?

நீ:- அது உங்கள் ஞான திருஷ்டிக்கு அப்படிபடலாம். என் உலக சாஸ்திர நிலையில் உங்கள் அளவுக்கு வராத தன்மையில் என் நிலைக்கு அன்னை தந்தைதான் என அடித்துச் சொல்வாய்!

இப்போது இங்கு மனம் இரண்டாக செயல்படுவதைக் காணலாம்! உன்னிடம் உலக சாஸ்திர நிலையில் செயல்படும் போது அது மனம் என்ற பெயர் பெறுகிறது. எம் நிலையில் அறிவு பூர்வமாக நோக்கும் போது மனதைக் காணோம். அதுவே அறிவாக இருக்கிறது. இதைப்போலவே யாம் தேவ தெய்வங்கள் உண்டா எனக்கேட்டால் நீ உண்டு என்பாய். யாம் அறிவு நிலையில் உணர்ந்து தேவ தெய்வம் இல்லையென்போம்!

நன்கு கவனி!

மாதா பிதா தூல சொரூபம் அதை கண்களால் கண்டு உண்டு எனச் சொல்கிறாய். தேவ தெய்வங்கள் சூட்சும சொரூபம் அதை உன் மனம் கற்பனைக் கண்களால் உண்டு எனச் சொல்கிறாய். ஆக இந்த இரண்டையும் கண்கள் காட்சியையும் விட்டு மனமய கற்பனையையும் விட்டு "நிர்மலமாகப் பார்த்தால்" நிர்மலமாக உணர்ந்தால் அவ்விரண்டும் மனமயப்பிராந்தி (மயக்கம்) எனத் தெரியவரும்! இதிலிருந்து நீ என்ன உணர்கிறாய்??

மனம் உண்டு என்றால் மனம் உண்டு!
மனம் இல்லை என்றால் மனம் இல்லை!!
மனதை வைத்து தூல சொரூபங்களையும், மனம் தீட்சண்யமான இடத்தில் சூட்சும சொரூபங்களையும் உண்டென்றால் உண்டென நிரூபிக்க முடிகிறது!



மனதிற்கு வடிவமில்லை; மன உணர்விற்கு வடிவம் உண்டு
இதன் உண்மையாவது:- தூல வடிவங்களை உண்டு எனச் சொல்லும்
போது மனம் காரிய வடிவமாகிறது காரணம், அங்கு அனைத்துக்
காரியங்களையும் (புண்ணிய பாவங்களையும்) செய்யும் மனமானது
தூலவடிவில் பிரவேசிப்பதால் நாம ரூபங்களுடன் பின்னிப்
பிணைந்து விளையாடுகிறது!
சூட்சும வடிவங்களை உண்டு எனச் சொல்லும் போது
மனம் காரண வடிவமாக ஆகிறது. காரணம், அங்கு அனைத்தும்
இந்த தூலங்களை இயங்கவைக்கும் சூட்சுமமாக இருந்து
நாமரூப "குணங்களை" இயங்கவைத்து அந்த குணங்களுடன்
பின்னிப்பிணைந்து விளையாடுகிறது!
யோகாவில் சுத்த சூனியமாக இந்த மனம் இயங்கும் போது
மூலப்பிரகிருதியாக (சுத்தமாயையாக) இருந்து மஹா காரணமாக
ஆகிறது காரணம், மேலே கூறிய தூல சொரூபங்களையும்
சூட்சும சொரூபங்களையும் நாமரூப குணங்களை விட்டு அந்த
ஒன்றென்றே உணர்வோம் (இங்கு தற்போதம் அழிவதில்லை)
"நாம் கிரீடிக்காமல் அவைகளை கிரீடிக்க வைக்கிறது"!
ஸ்வயஞானானுபவத்தில் மனமும் இல்லை; அதன் ஆதார
மான சூனியமும் இல்லை. மஹா காரணமும் இல்லை; அங்கு எந்த
விளையாட்டுமே இல்லை; ஒன்றுண்டு என சொல்வதற்குமே
இல்லை. "**உண்டு ஆனால் இல்லை!!!**"

உ. மனதிற்கு வடிவம் இல்லை:- ஜடசொரூபங்களுக்கு வடிவம்
உண்டு; அந்தவடிவத்திற்கு பெயர் (நாமம்) சூட்டியது இந்தமனம்.
இந்தமனம் எப்படி வந்தது என கேட்கலாம். வெளிச்சமாகிய ஒளி
உண்டானால் இருளும் அவசியம் உண்டு! இந்த இருள் தானாம் தானே
உண்டானதில்லை. உண்டாகவும் முடியாது. ஒளியின் மறுபுறமே
(குறைவே) இருள். ஆகவே இந்த இருள் தானே உண்டாக முடியாது.
ஒளி இல்லையானால் இருள் உள்ளதென சொல்வதற்கில்லை. அதைப்
போல அந்த சுவாதீத ஒன்றை, நாம, ரூப, குணம், குறி கடந்த
தானே ஒன்று தம்மை எப்போது இருப்புடையதைப் போல் தோற்
றுவித்துக் கொண்டதோ அப்போதே மாயையாகிய இருளாகிய மனம்



இது மஹா மாயை அதாவது சுத்த மாயை அதாவது மஹத்தாகிய மனம்.
தோன்றிற்று. ஆனால் இங்கு இந்த மனதிற்கு வடிவம்
அதாவது தோற்றம் இல்லை. அந்த ஒன்றே திரிகர்த்தாக்
களாகி உலகை உண்டுபண்ணும் போது
"ரூபமும்" (வடிவமும்) அதற்கு ஓர் பெயரும் அதாவது "நாமமும்"
"இந்த ரூப நாமத்திற்கு காரணம் மஹாமாயை"
அதாவது மஹத்தாகிய மனம்.
இந்த கர்த்தாக்களோ தங்களிலிருந்து பிரித்தெடுத்ததே
"ஜீவாத்மா":- இவன் ஆரம்பத்தில் ஈசனாகிய ஆன்மாவே!
இவன் ஓர் ஒளியே! இவனிடம் தோன்றிய இருளே அசுத்த
(மலின) மாயை. இது மலினமனம்!

இந்த மலின மனதிற்கும் வடிவம் இல்லை. ஆனால்
திரிகர்த்தாக்களால் உண்டாக்கிய உலகை
இச்சையின் வடிவில் முதலில் ஓர் பெயரையும்,
நாமத்தையும், பின் ஓர் வடிவத்தையும், ரூபத்தையும்
"**தற்காலிகமாக**" உண்டுபண்ணி "நாமரூபமாக்கி"
அவைகளின் "இயக்கத்திற்காக" எண்ணமென்ற
குணங்களையும் (இது இருள் வடிவமே. ஆகவேதான் இந்த
எண்ணமாகிய குணத்தை அகற்ற முடியவில்லை) உண்டுபண்ணியது!
சற்று கவனி:- ரூபம் தோற்றமும், ரூபத்திற்குரிய நாமம் (பெயர்)
ஒலியே அதாவது சப்தார்த்தமே. ஒலியால் விளக்கம் கொடுத்
தால்தான் அதை கிரஹிக்க முடியும். அப்படியானால் ஜடமாகிய ரூபம்
இருந்தால் மட்டும் போதாது அதை விவகரிக்க (விளக்க) ஒலியும்
தேவைப்படுகிறது. இப்போது நாம ரூபம் மட்டும் இருந்து விளங்கி
னால் மட்டும் போதாது
"இது இத்தகையது; இது இன்னது செய்யும்; இதனிடம் இது உண்டு
இதால் இது ஆனது" என "**குணசம்பந்தத்தை**"!!
உண்டாக்கியது இந்த மலினமனமே!



2

ஆகவே உலகமும் அதன் நாமரூப பொருள்களும் மட்டும் இருந்தால் அது வெறும் ஜடமே! அவைகளில் "குண விசய தோஷங்களை" இந்த மலின மனம் வைத்துக் கொண்டு கொண்டாடி உலகை இருப்புடையது போல் செய்கிறது. அப்படியானால் இந்த குணதோஷமே மனம் என்று ஆகிவிட்டது. ஆகவே உலகமாகிய "நாமரூபத்திற்கு தற்காலிக இருப்பு உண்டு" அது இந்த தூலக்கண்களால் காண முடிகிறது. ஆனால் குண தோஷங்கள் தூலமல்ல அது சூட்சுமமே, அது ஒலியே, அது சப்தார்த்தமே; அது விகாரமே! அப்படியானால் குணம் தூலக்கண்களால் தோற்றத்தன்மையிரால் அது சூட்சுமமாக இருந்தாலும் அதை இல்லையென்றே சொல்லலாம்! அப்படியானால் மனதிற்கு வடிவம் இல்லை.

குழந்தைகளே!

மனம் ஓர் இனத்தை (பொருளை) வைத்து குணவடிவில் வெளிப்படுவதால் அந்த குணத்தையும் உண்மை இல்லை அது நம் கற்பனையே என தள்ளிவிட்டால் உலகம் ஜடமாகிவிடும்! அப்படியானால் நாமரூபத்திற்கும் அதன் குணவடிவ இயக்கத்திற்கும் முக்யத்துவம் கொடுக்காதிருங்கள். ஜடம் ஜடமாகவே ஆகிவிடும். அதை நீங்கள் சாட்சியாகவும் பார்க்க முடியும். எப்போது நீங்கள் உலகின் நிலையில் சாட்சி நிலை பெற்று விட்டீர்களோ, அடுத்து அதி துரிதமாக சர்வசாட்சி அதாவது அகண்டவிருத்தி நிலை பெற்று விடலாம். இந்த நிலைக்கு நீங்கள் வந்து விட்டால்

1. அவித்யா சொரூபன் ஜீவன்!
2. மாயா சொரூபன் ஈசன்!
3. இவை இரண்டிற்கும் காரணஸ்வரூபம் மூலமாயை!

இவை மூன்றும் நாம் அல்ல. இவை அனைத்தும் நம்மிடமே சிப்பியில் வெள்ளிபோல் வந்து இருந்து மறைந்துவிட்டன! நாம் அந்த காலாதீத ஒன்றே. "அதுவே நாம், நாமே அது"!! என்ற நிலை பெற்று விடலாம்.



2

4. பிரம்மானந்தம்:- இதை பிரம்மானந்தம் என்றும் பரமானந்தம் என்றும் சத்சிதானந்தம் என்றும் கைவல்யம் என்றும் ஜீவன்முக்தியென்றும் இன்னும் பற்பலவாக சொல்வார்கள்!

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா" என இறைவனை துதிப்பவர்களும் உண்டு பல கோடிக் கணக்கில் இன்பமும், பல ஆயிரக்கணக்கில் ஆனந்தங்களும் இருந்தாலும் இந்த பிரம்மானந்தத்திற்கு நிகர் ஆகாது! காரணம் மற்றும் அனைத்து இன்பங்களுக்கும், ஆனந்தங்களுக்கும் தோற்றம், இருப்பு, மறைவு ஆக இந்த மூன்றும் உண்டு. ஆனால் இந்த பிரம்மானந்தத்திற்கு மட்டும் அந்த மூன்றும் இல்லையெனச் சொல்லலாம். அந்த இன்பங்களையும் ஆனந்தங்களையும் தருவதற்காக 64. அறுபத்தி நான்கு கலைகளாக பிரித்து வைத்து அவைகளை குருகுலங்களில் போதித்து வந்தார்கள் நம் முன்னோர்களாகிய ரிஷிமார்கள். ஓர் பத்துப்பேர் நடந்து செல்லும் போது ஓர் ஐந்து பேர் தலையில் முண்டாசு அதாவது தலைப்பாகை கட்டிக்கொண்டு போனால் அந்த கூட்டத்தை பார்த்தவர்கள் அதோ தலைப்பாய்க் கூட்டம் போகிறது பார் என அக்கூட்டத்தை சுட்டிக்காட்டுவதுண்டு. அதில் தலைப்பாகை கட்டாமல் சென்ற ஐவரையும் சேர்த்தே தலைப்பாகை கூட்டம் என சொல்வது போல, இந்த 64 கலைகளில் ஓர் இருபது, முப்பது கலைகள் தெரிந்தாலும் அவரையும் "அறுபத்திநாலு கலைகளையும் கற்றவர் என்று" உபசாரமாக சொல்வதுண்டு.

மேலே சொன்னபடி அறுபத்தி நான்கு கலைகளையும் கற்றறிந்த மஹான்கள் தம் சிஷ்யர்களுக்கு போதிக்கும் போது தற்காப்புக்காக இரண்டு மூன்று கலைகளை மறைத்துக் கொள்வார்கள். இந்த அறுபத்தி நான்கு கலைகளில் ஒன்று தான் ஆத்ம வித்தை என்ற ஆத்ம ஞானம் இந்த ஆத்ம ஞானம் ஒன்று தான் பூரணமாகும்; அதுதான் பிரம்மானந்தமாகும் இதை பூரணமாக உணர்ந்தவர்கள் எங்கேயோ ஆயிரத்தில் ஒருவர், லட்சத்தில் ஒருவர்தான் இருக்கக் கூடும். மற்றும் வித்தைகள் அனைத்தும் உடலுக்கும், வாழ்க்கைக்கும், உயிருக்கும் பயன்படும் இந்த ஒன்று மட்டும் எந்த பலனும் தராது மேலே சொன்ன அனைத்தையும் பொய்யாக்கி அந்த ஒன்றையே மெய்யாக்கி அது ஆகச் செய்யும்!



உ

மற்றைய கலைகளை போதிக்கும் குரு தம்மை உயர்த்துவார் சிஷ்யர்களை தமக்கு கீழே தான் இருக்க வைக்க முடியும்! ஆனால் இந்த ஆத்மஞான குரு சிஷ்யர்களை உயர்த்துவார். அவர்கள் அந்த பிரம்மானந்தத்தை அனுபவிப்பதை தான் கீழே இருந்து சுவைத்து அனுபவிப்பார். ஏனைய கலைகள் அனைத்து அற்புத சக்திகளையும், சகல வல்லமைகளையும், ஏன் திரிகர்த்தாக்களையும் மிஞ்சிய சித்துக்களாகிய சக்திகளையும் கொடுக்கும். ஆனால் இந்த ஆத்மவித்தை தான் தானாய் இருக்கும். மேலும் எந்த சக்திகளையும் கொடாது அப்படி சக்தி இருந்தாலும் அவைகளை அழித்து நிர்மூலமாக்கிவிடும்.

இதற்கு முன் விஷயானந்தம் என்றும், பேரானந்தம் என்றும், யோகானந்தம் என்றும், மூன்று நிலைகளை சொன்னோம். ஆனால் இந்த பிரம்மானந்தத்தை விளக்குவதாக இருந்தால் அதை குறைபடுத்திய நிலையாகுமே தவிர சிறப்புபடுத்தியதாகாது. காரணம் ஒன்றை விளக்குவதாக இருந்தால்

"அதை விளக்கி அருள்பவன், அதை கேட்பவன், விளக்கும் பொருள் என மூன்று வேண்டும்"!!!

ஆனால் இந்த அத்வைதத்தை ஆத்மானந்தத்தை விளக்கக் கூடிய ஆசானும் கிடையாது. இதை கேட்கும் மாணவனும் கிடையாது. இந்த ஆத்மானந்தமும் தனியாக இல்லவே இல்லை!

அது தானும் தானாய் தனித்து இருப்பது!

அதற்கு ஒப்பு உவமை எதுவும் இல்லை!

அங்கு விளக்கும் வார்த்தைகளும் செல்வதில்லை!

பட்டினத்தடிகள் ஓர் இடத்தில் சொல்வதுண்டு

"காட்சிக் கெளியான் காண்; கண்டாலும்
காணான் காண்; மாட்சிமனம் வைத்தார்க்கு
மாணிக்கத்துள் உள் ஒளி காண்"!!! என்றார்!

இந்த அடியார் ஏன் நவரத்னங்களில் வேறு ஏதேனும் ஒன்றை சொல்லலாமே!! ஏன் மாணிக்கத்தை மட்டும் குறிப்பிடுகிறார் என்றால் மற்றும் எட்டு மணிகளும் வெளிப்பிரகாசம் உடையவை இந்த மாணிக்கம் ஒன்றே உள் ஒளி உடையது!

(அவர் ஒரு நவரத்ன வியாபாரி)



2

1. காட்சிக்கு எளியான் காண் :— அந்த காலாதீத ஒன்றின
பரசொரூபத்தை, நாமரூபமாக இறைவடிவமாக அறிவால்
உணர்ந்து மனதால் கண்டு (கண்களால் காணமுடியாது) பேரானந்
தம் அடைவது வெகு வெகு வெகு சுலபம். ஆச்சரியமாக இருக்கிறதா
உங்கள் அஹங்காரங்களையும் அபிமானங்களையும் விட்ட
மறுகணம் அதை தரிசிக்க முடியும். இந்த அஹங்கார அபி
மானங்கள் உங்கள் உறவினையும் உண்மைகளை என்னுடை
யது எனப்பற்றிக் கொள்வதினாலும் தான் உண்டாகிறது!
நீ பிறக்கும் போதும் எதுவும் கொண்டு வந்ததில்லை!
உன் தூலத்தை விடும் போதும் எதையும் கொண்டு போக முடியாது!
இது ஊரறிந்த விஷயம். உலகறிந்த விஷயம். மற்றவர்
களுக்கு மிக எளிதாக கூறியும் விடுகிறாய்!
நீ அதை ஏற்று கடைப்பிடிக்கிறாயா எனப்பார்த்தால் இல்லவே இல்லை!
உன் வாழ்க்கை ஆரம்பம் படிப்பு, பட்டம், பதவி, பணம், மனைவி
போகம், உறவினர்களை இழத்தலும் தவித்தலும் பின்
மரணமும் தானே!
உன் வாழ்வைத்தான் சற்று மாற்றிப்பாரேன்!
ஊர் வழக்கமே என்கிறாயா?
இந்த உலகம் நீ ஓகோ என வாழ்ந்தாலும் பழிக்கும், வாழ்த்தும்!
" " நீ ஆகா என வீழ்ந்தாலும் " "
நீ உனக்காக வாழ்கிறாயா? ஊருக்காக வாழ்கிறாயா??
உனக்காகத்தானே, பின் ஊர் உலகைப் பற்றிய கவலை
உனக்கு எதற்கு?
இறைவன் இவ்வுலகை உண்டுபண்ணி உன்னையும் உண்டுபண்ணி
அனைத்தையும் தற்காலிகமாக விளையாடக் கொடுத்தானே யன்றி
உரிமைபாராட்ட தரவில்லையே. அவன் கொடுத்த பொருள்களை
ஆசையோடு பார்க்கிறாய் அனுபவிக்கிறாய் அந்தப் பொருள்களை கொடுத்
தவனை ஏறிட்டும் பார்க்கமாட்டேன் என்கிறாயே?
இது என்ன நியாயம்? அவனைப் பார்த்து விட்டு அப்புறம்
அவன் கொடுத்த பொருளைப் பாரேன்!! அப்படி என்ன அவசரம்?



2

குழந்தாய்! கீதையில் எம் அண்ணலின் வாசகத்தை கவனி

1. கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருவோம்!
2. எங்கு நோக்கினும் எம்மை காணலாம்!
3. உங்கள் இடர் களைவதற்காகவே எம் கைகளில் கங்கணம் கட்டியிருக்கிறோம்!
4. எல்லா உள்ளங்களிலும் இதயவாசியாக அமர்ந்திருக்கிறோம் ஆகவே அனைத்தும் அறிவோம்!
5. யாம் சர்வாந்தர்யாமியாக இருப்பதால் உங்கள் தேவைகளையும் சுகதுக்கங்களையும் யாம் அறிவோம்!
6. யாம் இல்லாத இடம் இல்லை; யாம் அறியாத பொருளில்லை!
7. உங்களை விட்டு ஒருக்ஷணமும் யாம் பிரிந்ததில்லை; ஆனால் உங்கள் கண்ணெதிரே தோன்றும் பொருள் மோஹத்தால் எம்மை மறந்துவிட்டீர்!
8. உங்கள் முன் தோன்றும் பொருள்களில் யாம் நிறைந்திருப்பதால் அப்பொருள்கள் உங்களுக்குத் தோற்றுகின்றன; பொருள் மோஹத்தை விட்டால் யாம் அகப்படுவோம்!
9. எதையும் உண்டு என்றால் உண்டு; இல்லையென்றால் இல்லைதான் முழுநம்பிக்கையுடன் எம்மை நோக்குவீர், யாம் தென்படுவோம்!
10 அனைத்தையும் எமக்கு சர்வார்ப்பணமாக விட்டவனின் க்ஷேமலாபங்களை யாம் சிரத்தையுடன் கவனிக்கிறோம்!
11. உங்களுள்ளும் உங்கள் அருகே யாம் இருந்தும் எம்மை நோக்காமல் பொருள்களை மட்டும் நோக்கினால் இது யார் குற்றம்?
12. எம்மை விட எம் நாமா உங்களுக்கு உறுதுணையாயிருக்கும்.
13. உங்கள் நம்பிக்கையே எம் சொரூபம். சந்தேக கண்களோடு பார்த்தால் அங்கு இல்தான்.
14. எம்மை விட எம் மெய்யன்பர்கள் தான் முக்கியம். அவர்கள் மூலமாகவே யாம் அதிகம் வெளிப்படுவோம்!
15 எம்மை விட எம் மெய்யன்பர்களுக்கு சேவை செய்யுங்கள்; அச்சேவையினால் எம்மை காணலாம்!
16. அகில உலகமும் எம்முள் இருந்தாலும் யாம் உன்னுள் அடக்கம்!
17. யாம் உன்னுள் இருக்க வெளியே எதை தேடுகிறாய்? உன்னை அடக்கி உன்னுள் எம்மை உணர்.
18. எம்மை நம்பினோர் கெடுவதில்லை இது வேத வேதாந்த ரகஸ்யமாகும்!

எம் கீதையின் 18 அத்யாயங்களின் ஸாராம்சம் இதுவே. இதை உணர் எம்மை தரிசிக்கலாம், முடிவு யாம் நீ ஆகலாம்!



உ

குழந்தாய்! மேலே கூறியபடி நீ முயற்சி செய்தால் எம்மை நீ அவஸ்யம் தரிசிக்கவும் முடியும். உன் வியாபார பக்தி, விளம்பர பக்தி, படாடோப பக்தி உனக்கு வேண்டாம். இவை மூன்றும் கலிதோஷமாகும்! உன் கண்ணீரே உன் இதயத்தை கழுவும். உன் கண்ணீரே எமக்கு காணிக்கை. உன் கண்ணீரைத் தவிர் வேறு பொருள் வேண்டாம். உன் கண்ணீரை விட்டு அழுதால் உள்ளம் தூய்மையாகும் அங்கு யாம் அமர்வோம்; உன் கண்ணீரே மூவாசையையும் (மண், பொன், பெண்) போக்கி எம்மை உன்னிடம் இழுக்கும் சக்தி உள்ளதாகும்.

குழந்தாய்! இறை அருளையும், இறை காட்சியையும் அவனுடன் கூடிக் குலாவி மகிழ்வதையும் நீ பெற முடியும். "அழுதால் உன்னைப் பெறலாம்" என்னும் ஞானி அழும் பிள்ளைகட்கே வயிறு நிறையும் என்றும் நையாத மனிதற்கு உய்யாது கண்டு கொள்ள என்றும் என் கண்ணீரே காணிக்கை என்றும் அனுபவிக்க வாசகம் பொய்யாகாது ஆகவே நான் எம் பட்டினத்து அடிகளும் "காட்சிக்கு எளியான் காண்" எனச் சொன்னார்.

அடுத்து!

௨. கண்டாலும் காணேன் காண்:— அந்த இறை காட்சியின் நிலை அடைந்த பிறகு பெறும் பேறு என்ன என்பதை இந்த வாக்கியத்தால் உணர்த்துகிறோம். என்று உலக உடல், உறவு, பொருள், என நீ காண்கின்றாயோ அன்று தெய்வத்தை நினைக்கவோ, நெருங்கவோ, தரிசிக்கவோ முடியாது. என்று உலக உடல், உறவு, பொருள்களை தனதுடைமையாக உணராமல் அவை அனைத்தையும் அவனுடைமையாக உணர்கிறாயோ அன்று அவன் அருகில் நெருங்கி விட்டாய் என வைத்துக் கொள். பின் உன் சாதனையை அனுசரித்து முழுமையாக காண்பதோ, கேட்பதோ, நுகர்வதோ, புசிப்பதோ, பேசுவதோ, தொட்டு ஸ்பரிசிப்பதோ இவை அனைத்தும் "அவனே" என ஆகிவிட்டால் அவனை எந்தவிதமும் நீ காண முடியும், பேச முடியும், விளையாட முடியும், அளவளாவ முடியும் அந்த அளவுக்கு நீ பேரானந்தம் பெற முடியும்!

ஆனால் அந்தமட்டில் நீ நின்றுவிடாதே. அதில் உன்னை நீயே தோற்றுவித்து கொண்டு உன் பிரேமையில் நீயே மயங்கிருப்பாய் என ஆகிவிடும்.



அதாவது காண்பவன் எவன்? காட்சியில் எவன்??
என உன்னையே நீ உணர்ந்து பார்த்தால்

"ஓர் பேருண்மையை"!! அந்த இறைவனின்
பெயரின் (நாமாவின்) உண்மையை அதாவது ஓர் பெரிய மஹத்தான
உண்மையை அதாவது நீ பிறந்த பயனை சாதிக்கக் கூடிய ஓர்
ரகசிய உண்மையை

**அவசியம் உணர்வாய். அங்கு காணமாட்டாய்**

வெறும் ஜடத்தை மட்டும் கண்ட நீ அதனுள் கலந்திருக்கும்
அதி மதுரமான சர்க்கரையின் இருப்புத் தன்மையை உணர்வாய்.
இங்கு காட்சி இல்லை. சுவை உண்டு. சுவைத்தால் (அறிதுயில்)
தாக்கம் உண்டு; பின் தாவம் இல்லவே இல்லை!

மேலே சொன்ன வாசகத்தை சற்று உற்று நோக்கு!

கண்டாலும் காணான் காண் = நீ அவனைக் கண்டாலும் அவன்
உன்னைக் காணவில்லையே??
அவன் உன்னைக் காண வேண்டுமானால் காட்சி முக்கியமல்ல!
சாட்சி முக்கியம்! புரியவில்லையா?
நீ அவனை கண்டாய் அதற்கு தீர்க்கமான உன் மனமே சாட்சி!
அவன் உன்னைக் கண்டான் இதற்கு சாட்சி யார்??
இதற்கு சர்வசாட்சி அதாவது அகண்டாகார விருத்தி சாட்சி
முக்கியமாகும். இன்னமும் புரியவில்லையா?
"அது அதுவானது". "அது அவன் ஆனது". "அவன் நீ ஆனாய்"

"நீயே அனைத்தும் ஆனாய்"!!!

அதாவது:- காலாதீத ஒன்றே பிரம்ம விருத்தி ஆனது; பிரம்ம விருத்தியே திரிமூர்த்தியாக ஆனான்; அந்த இறைவனே நீ ஆனாய்; நீயே அனைத்தும் ஆனாய்! இங்கு நீ உலகம்; அவன் தெய்வம்; அது பிரம்மத்தை முடிந்த ஒன்று காலாதீத ஒன்று.



௨

உன்னிடமும் அவனிடமும் முறையே மனமும் மாயையும் செயல்படுவதால் இங்கு விவகாரம் (பிரச்சனை) இருந்தே தீரும். மேலும் இறுதியாகிய அதனிடத்தில் "சுத்தமாயை" ஒன்றே உள்ளது. அது உபாதை இல்லாதமானய; அது விவகரிக்க முடியாத ஒன்று. ஆகவே அது சர்வ சாட்சி ஆகவே அது "அகண்டாகார விருத்தி"

நீ அவன் ஆனதும் = நீ உலகை விட்டதும்;

அவன் நீ ஆனதும் = அவன் மாயையை விட்டு உன்னை ஏற்றுக் கொண்டதையும்;

மேலே சொன்ன இரண்டும் தம் அவித்தையையும் மாயையையும் விட்டு சர்வசாட்சியாக ஆகிவிட்டார்கள் என நிரூபிக்க அதுவாகிய அகண்டாகார விருத்தி வேண்டுமே??

அது சாட்சி சொல்லுமா? அது அசங்கன் ஆயிற்றே, அது சுத்தம் ஆயிற்றே; அது அசலம் ஆயிற்றே; அது நிர்விகாரி ஆயிற்றே அது எப்படி சாட்சி சொல்லும் என நீ கேட்கலாம்.

அதனால்தான்

அந்த வாக்கியத்தை அவர் கொடுத்தார் = "கண்டாலும் காணான் காண்" என்றார்! கண்டாலும் என்பது உபசார வசனம்;

காணான் என்பதும் காண்பதில்லை; ஆனாலும் அது காணும்!

உன் பாடவிளக்கத்திற்கு அது காணும்!

உன் சுய அனுபவ அறிவிற்கு அது காணாது!!

ஆகவே தான் கண்டாலும் காணான் காண் எனச் சொன்னார்!

௩. மாட்சிமனம் வைத்தார்க்கு மாணிக்கத்துள் உள் ஒளி காண்:—

குழந்தைகளே! மாட்சி மனம் என்றால் மேன்மை பொருந்திய மனம் என்றும், அளவற்ற பெருமை பொருந்திய மனம் என்றும் இன்னும் அனேக அடைமொழி (உபசாரவசனங்களை) களை கொடுக்கலாம். ஒரு இடத்தில் எம் வஷிஷ்டர் சொல்கிறார் "உஷ்ணம் அக்கினியை விட்டு நீங்காதது போல தாழ்வான, இழிவான, மோசமான செயல்களை செய்வதை விட்டு இந்த மனம் நீங்காது" என்றார். ஆதலால் இங்கு இவர் மாட்சிமை பொருந்திய மனம் என்கிறார்.



இந்த மனதை இப்படி போற்றி புகழவும் காரணம் இருக்கிறது.
உடல் உவகையும் பணச்செருக்கையும், பாசம்பிணைப்பையும்,
பெண் இன்பங்களையும் குலகுடும்ப உறவுகளையும் அந்த மனதை
வைத்துத்தான் அனுபவிக்கமுடியும்!

அதேபோல மேலே சொன்ன அசிங்கமான துர்க்குணங்
களையும் அனைத்தையும் விட்டு இறை சொரூபத்தின் காட்சிக்கு
ஏங்கி ஏககுணமாகிய சத்வ குணத்தைமட்டும் ஏற்றுக் கொண்டு
தெய்வீக நிலைக்கு இட்டுச்செல்வதும் இந்த மனம் தான்!

அதேபோல லௌகீகம், தெய்வீகம் ஆகிய இவ்விரண்டை
யும் ஒர்மித்து நம்முள் அடக்கி மஹா சாட்சி நிலையாகி அதாவது சர்
வாந்தர்யாமியாகிய மஹோராசம் என்று சொல்லக்கூடிய மனம்மறந்தா
ன நிலையில் இட்டுச் சென்று மனம் (நான்) அழிந்து தலைவனுடன்
நம்மை கரைத்து கலப்பதுவும் இந்த மனம் தான்!

“ஆகவேதான் மாட்சிமை பொருந்திய மனம்”!! என்றார்!

இதை கவனிக்கவும்!

குற்றம் குறைவற்ற, பூரண நிறைவான, அளவிடமுடியாத,
எங்கும் நிறைந்ததான, பார்க்கும் இடம் எங்கும் ஓர் நீக்கமற
நிறை ஒன்ற பரிபூரணானந்தமான

“அந்த ஒன்றிலிருந்துவந்து அந்த ஒன்றிலேயே”!!

கலந்துமயமானதால் இந்த மனதிற்கு மாட்சிமை பொருந்திய
மனம் என்பதை “மாட்சிமனம் வைத்தார்க்கு”/ என்கிறார்
சமுத்திர ஜலமே நீராவி ஆகி மலை உச்சிக்குச் சென்று அங்குமழை
யென வருடித்து பூமியில் நதியென பலநாமரூபம் எடுத்து தாம்
வந்த காரியத்தை காரணரூபமாகவே இருந்து அனைத்தையும்
முடித்துவிட்டு தம் யதாஸ்தானம் சேர்ந்தது போல இந்தமனமே
மூலப்பிரகிருதி (மஹாமாயை) யாகி பின் தேவதெய்வங்களாகி,
பின் ஜீவசொரூபங்களாகி பின் அனைத்து அண்டரண்டபிண்ட
பிரம்மாண்டங்களாகி

“இவைஅனைத்தையும் தம்எண்ணத்தாலேயே
முடித்து முடிவில் அந்த எண்ணமும் அற்று
தாம் தாமய் ஆனதினால்”!!!

மாட்சி மனம் வைத்தார்க்கு என்றார்!



2

நம் கற்பனை எண்ணத் திறல் பறந்து விரிந்து ஜகம் என தோற்றிய ஒன்று அந்த மனோ வாஸனையை நாசம் செய்து தெய்வீகமானது, அவித்தையையும் மாயையையும் விட்டு அகண்டாகார விருத்தியாகி அதாவது சர்வாந்தர்யாமியாய் ஆகி பின்

சர்வாந்தர்யாமித்துவத்தையும்
அதாவது சர்வசாட்சித் தன்மையையும் } இவை அனைத்தையும்
அதாவது அகண்டாகார விருத்தியையும்

அந்த நாமரூப குணம் குறி கடந்த காலாதீத ஒன்று தமக்குள் அடக்கி வைத்திருந்து அவைகளையும் இல்லாமல் பண்ணி தானும் இல்லாமல் ஆகி

"ஸ்வயமாய் தனித்திருந்ததனால்"

இங்கே உபசார வசனமாகச் சொன்னது

"மாணிக்கத்துள் உள் ஒளி" என்றார்!

மாணிக்கம்:-(நவமணிகளாவது = மாணிக்கம், மரகதம், கோமேதகம், புஷ்பராகம், வைரம், வைடூரியம், நீலம், முத்து, பவளம்) இவைகளில் மாணிக்கம் ஒன்றே உள் ஒளி பொருந்தியதாகும். மற்றும் எட்டும் வெளி ஒளி பொருந்தியதாகும். அதைப் போல இந்த ஆத்ம ஞான சாதகனுக்கு புறத்தோற்றமும், புறச் சின்னங்களும், புற உணர்வுகளும் எந்தமட்டும் குறைகிறதோ அந்தமட்டும் அக உணர்வாகிய அதாவது அக ஒளியானது தமக்குள்ளேயே ஸ்புரிக்கும். அதாவது மாணிக்கத்தைப் போன்று புறத்திலே ஜடம் (மடம்) என ஆவான். இதை பொதுவாக சொல்ல வேண்டுமென்றால்

"**எந்த எழுச்சியும்**" இராது!

எந்த குணங்களும் (சஞ்சல குணங்கள்) அவஸ்யம் இராது!
எந்தவிநாடியும் சாந்தி, அமைதி, திருப்தி ஆனந்தமுடன் இருப்பான்!
எந்த விநாடியும் தாம் அடங்கி இருப்பான்.
"**அதை**" தமக்குள் அடக்கிக் கொள்வான். (இது உபசார வசனம்)
இவனை உலகம் காணாது; உலகத்தை இவன் உணர்வான். (தானாக உணர்வான்)
இவனிடம் மனம் (கற்பனையான எண்ணம்) இராது!
ஆனால் இவன் பிறர் மனதை ஏற்கவும் முடியும், சாந்தி, அமைதி, திருப்தி, ஆனந்தமாக இவன் உள் ஒளியை வைத்து பிறர் அகஇருளை அகற்றவும் முடியும்!



உ

பிறர்மனதை ஏற்றலும் தமக்கு மனம் இல்லாத் தன்மையினால்
இவன் ஏந்தயாதியையும் அடையமாட்டான்!
சுகசொரூப ஆனந்தமயமாகவே இருப்பான்!
இந்தபிரம்மானந்தம் அடைந்தவனுக்கு தனியாக ஆனந்தம் உண்டு
என சொல்ல முடியாது சொல்லவும் கூடாது!
தம் ஆனந்தத்தை பிறருக்கு சொல்லவும் முடியாது; சொல்லவும்
தெரியாது; அது சொல்லும் பொருளுமல்ல!
வாய் நிறைய அல்வாவை வைத்திருப்பவனுக்கு எவன் அதுபற்றி
கேட்டாலும் ஆனந்தமாக தலையசைப்பானே தவிர பேச முடியுமா?
விளக்க முடியுமா? சப்தமிட்டு சிரிக்கத்தான் முடியுமா?
அந்த அல்வாவை வெளியில் உள்ளவன் காண முடியுமா? சற்று
தொடத்தான் முடியுமா? காரணம்!
அந்த அல்வாவை வாயில் வைத்தவுடன் தானே வாய் மூடிக்கொள்
ளும் அதாவது சுவையுடன் நின்று விடும். ஆகவே தான்
"அதை கண்டவன் விண்டதில்லை; விண்டவன் கண்டதில்லை"!!
என்றார்கள் யாம் உலகின் அல்வாவை சொல்லவில்லை,
**"அது தான் "அல்வா" அல்வா"!!**
இந்த பிரம்மானந்தம் அடைந்தவனை தேவர் மூவராலும் காண முடி
யாது! அவன் புண்ணிய பாப வினைக் கூட்டை காணலாம் அவனைக்
காண முடியாதே! காரணம்!
திரிமூர்த்திக்குள்ளும் பஞ்சபூதங்களுக்குள்ளும், அனைத்து ஜீவ கோடி
களுக்குள்ளும், அகிலபுவனங்களுக்குள்ளும் அவன் இருக்கிறானே
பின் அவனை எவன் காண்பான்?
"தம்மைக் கண்டவன் (உணர்ந்தவன்) பிறரை (புறத்தை) காணான்!
புறத்தைக் கண்டவன் தம்மைக் காணான்!" (உணரான்)
அந்த பரப்பிரம்மானந்தத்தைத்தான் எம் தாயுமானவர் சொன்னார்.
சந்ததமும் எம் சிந்தையிலே குடிகொண்ட
"**அறிவான**" தெய்வமே தேஜோமயானந்தமே!!
என்றார். இதன் உண்மை என்னவென்று?



உ

அன்பின் மழலைகளே!

அந்த காலாதீத ஒன்று எக்காலத்தும், முக்காலத்தும் ஓரியல்பான பரசொரூபமே!

அதுவே மூலப்பிரகிருதியாகி திரிமூர்த்தியாகி, தேவ தெய்வங்களாகி, அனைத்துலகமாகி, அனைத்து ஜீவ கோடிகளுமாகி,

"தன்னைத்தானே உண்டாக்கிக் கொண்டது"

என்று சொல்வதைவிட நாம் "எந்த காரண காரியத்தையும்" வேண்டாமல் எவ்வொன்றுக்காகவும் இல்லாமல்

"சூரியனின் கதிரியக்கம்"

போல் தம் பிரகாசத்தினால் தாம் அல்லாமல் ஆனால் தாமாய் தோற்றுவித்துக் கொண்டதென "உபசார வசனமாகச் சொல்லலாம்." "அது எது"

ஆனால் சித்சொரூபத்தையும் அறிவு சொரூபத்தையும் குறிப்பிடும் போது "எம் சித்த விசை" என்றார் இதன் காரணம் என்னவென்றால் வாசிஷ்டத்தில் எம் வசிஷ்டபிரான் சொன்னார்: "சமுத்திரத்தின் ஜலத்தைப் போல ஜகங்கள் அனைத்தும் ஏகமாகிய சின்மாத்திரமாகும்" (அதாவது நீர்த்திவலைகளினால் ஆனதாகும்) அந்த சித்தாகிய சின்மாத்திரமானது, (சமுத்திரம் பேரலைகளினால் அலைகின்ற தன்மை போல) சற்று அசைந்தவுடன் ஜக சிருஷ்டி உண்டாகும் என்றார். இதில் நாம் உணர்கிறோம் என்றால் அசைவில்லாமல் இருந்தால் சித் என்றும் சின்மாத்திரம் என்றும் அசைவோடு இருந்தால் ஜகமாகவும் வினையாகவும் அதன் விளையாட்டாகவும் சித்தமாகவும் இங்கு பேசப்படுகிறது! ஆனால் உண்மை இல்லை! இதை தன்னை உணர்ந்த ஞானி அசைவில்லாமல் சித்தாக பார்த்தான் தன்னை உணராத அஞ்ஞானி ஜகமாகவும் அசையும் ஜீவ கோடிகளாகவும் அதன் இன்ப துன்பத்தையும் கண்டு சஞ்சலத்துடன் நோக்கி அவைகளை திரும்ப திரும்ப காணும் நிமித்தமாக பிறப்பிறப்பென்னும் சுழலில் சுழல்கிறான். அது அசைவற்றிருக்கிறது!



உ

இதன் சுருக்கம் என்னவென்றால்.

ஸத் சித்தானது, சித் சித்தமென ஆனது; சித்தம் ஜகமென ஆனது. இனி நம் சித்தமானது அசைவற்று சித்தானால் சித்தமான ஜகத்தோற்றம் இல்லை; சித் ஸத் ஆகிவிட்டால் அங்கு விவகரிக்க வார்த்தைகளே இல்லை. ஆகவே தான் இப்பாடலில் "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" எனசொன்னார். அதாவது "தெய்வம் அறிவு சொரூபமே தவிர அஹங்கார சொரூபமல்ல" என உணர்த்துகிறார்.

"புத்தியாலே சலனமும் அஹங்காரமும் உண்டு"

"அறிவாலே சலனமில்லா தெய்வீகம் உண்டு"

**புத்தி = சலனம்** = லௌகீகம்!

**அறிவு = ஓர்மித்த முடிவு** = தெய்வீகம்!

ஆகவே!

இங்கேயே, இப்போதே, இந்த க்ஷணமே நீ அதுவாகத்தான் இருக்கிறாய்!
புத்தியை (சலனத்தை) விடு; அந்த க்ஷணமே நீ தெய்வமாவாய்!
தெய்வமயக்கத்தை விடு அந்த க்ஷணமே நீ அது ஆவாய்!

குழந்தைகளே!

கோடானுகோடி இன்பங்களையும்,
கோடானுகோடி ஆனந்தங்களையும் மறக்கப்பழகுங்கள்!
அவை அனைத்திற்கும் "கால அளவு" உண்டு. பின் இல்லாதொழியும்!
ஆனால் இந்த பிரம்மானந்தம் ஒன்றே

நித்தியமானது; ஸத்யமானது, ஒரே ஆனந்தமயமானது; ஸ்வயமானது, பரப்பிரத்யட்சமானது; சுயம் பிரகாசமானது; பரமானது; பராபரமானது, பூரணமானது, குறையாத நிறைவானது; சாந்தியானது, அமைதியானது; மஹா மௌனமானது, தான் தானானது; மஹா ரகஸ்யமானது; பரம்பொருளானது; தேஜோமயமானந்தமானது; விவகரிக்க முடியாதது; த்வைத விவகாரமும் அற்றது; **அது அதுவானது**

ஸத்தும் அதுவே! சித்தும் அதுவே!! அதன் ஆனந்தமும் அதுவே!!!

**அதுயாமே! அது நீயே!! அதுவே அனைத்தும்!!!**



உ

## ஜாக்ரதா, ஸ்வப்பனம், சுஷுப்தி நிலை விளக்கம்!

1 ஜாக்ரதா :- இது விழிப்பு நிலையாகும். ஜாக்ரதா என்றுவே ஜாக்ரதை எனப்பொருள், அதாவது விழிப்பு நிலையில் அதிக கவனமாக இரு என பொருள்படும்! இதை சுருக்கமாக சொல்வதென்றால் நீ வசிக்கும் வீட்டினுள் கருநாகம், கட்டுவிரியன் கொம்பேறி மூர்க்கன், கண்ணாடிவிரியன் முதலிய கொடிய சர்ப்பங்களும், தேள், நட்டுவாக்காலி, பூரான், சேடான், கருஞ்சிலந்தி முதலிய கொடிய விஷ ஜந்துக்களும் குடியிருக்கின்றன.

நீ அவைகளை தொடாதபட்சத்தில் அவைகளை மிதிக்காதபட்சத்தில் உனக்கு எந்த ஆபத்தும் இல்லை. அவைகளும் உன்னையும் தம்மைப் போலுள்ள ஓர் ஜீவன் என உன் அருகில் வரும் போகும், சிலசமயம் உன் உடலில் ஊர்ந்தோ சற்று ஏறியோ போகலாம், ஆனாலும் அவைகள் உன்னை தீண்டாது. இது பிரமாண உண்மை. நீ அதைத் தொட்டாலோ மிதித்துவிட்டாலோ அவைகள் உன்னைத் தீண்டியே தீரும்!

இதன் விளக்கம்!

குழந்தாய்!

உன்னிடம் காமம், குரோதம், லோபம், மோகம், வஞ்சினம், கபடம், சூழ்ச்சி, பொய், மது, வியாபாரம் (எதிர்பார்ப்பு) விளம்பரம் (புகழ், கீர்த்தி) பட்டாடோபம் (ஆடம்பரம், பட்டம், பதவி) இன்னமும் அநேக துர்க்குணங்களே மேலே சொன்ன விஷ ஜந்துக்கள், விஷ பூச்சிகள்.

"அவைகளின் நச்சுத்தன்மை தற்காப்புக்கே தவிர, நம்மை தாக்குவதற்கோ அழிப்பதற்கோ அல்ல என உணர்!!!

அவைகளை தீண்டாதே மிதித்துவிடாதே :- நீ தெய்வீக இயல்புடன் பொறுமை, அமைதி, சாந்தி, மௌனமுடன் அடங்கி நடந்தால் (அடக்குவதல்ல) "அவரவர் குணம் அவரவரிடம்" பாரபட்ச தோஷம் இல்லாமல் விகிதாச்சாரப்படி ஒழுங்காக இருக்கும். உன்னிடம் குண ஆட்சியானால் அங்கும் குண ஆட்சி உண்டாகும், குண ஆட்சியானால் மோதல் சண்டை அதனால் அழிவு தானே உண்டாகும்.



இருகைகள் அசைந்தால் ஒன்றுடன் ஒன்று மோதும் அதனால் சப்தம் உண்டாகும் அமைதிகெடும். ஒருகை அசைவதினால் மோதலும் இல்லை சப்தமும் இல்லை இது நேருக்கு நேர் காணும் அனுபவம். இதைப் போலவே மேலே சொன்ன விதிகளுக்கும் விளைவுகளும் (பொருந்தும்)

"சும்மா சிவனே என இருக்கும் போது நீதான் அதை தீண்டிப் பார்த்திருப்பாய்"

தெரியாமல் மிதித்தாலோ தீண்டினாலோ அவை உன்னைத் தாக்கும். தெரிந்தே மிதித்தாலோ தீண்டினாலோ அவை உன்னை தாக்கத்தான் செய்யும்.

உ.ம் :– ஒருவன் தெரிந்தோ தெரியாமலோ ஓர் தவறை செய்கிறான் என வைத்துக் கொள்; ஓர் தவறான வார்த்தையை பேசுகிறான் என வைத்து கொள். நீ அதை கண்டு கொள்ளாமலும் கண்டிக்காமலும் இருக்கலாமே. அதை இறைவன் செயலென்று இருக்கலாமே! அவ்வாறு அவன் செய்த தீவினையின் மூலகாரணம் என்றோ அவ்வது பின் விளைவுகளின் அஸ்திவாரம் என்றோ நீ அடங்கி இருக்கலாமே.

நீ இதைபடித்தவுடன் என்ன கேட்பாய்? அவன் அடங்கி பேசாமலோ செய்யாமலோ இருக்கலாமே என கேட்கலாம்.

இருந்தாய்! நீ சாதனை செய்து கொண்டிருப்பவன்.

நீ உடனே அவனும் சாதனை செய்பவன் தானே என கேட்கலாம்.

உன் சாதனை உன்மட்டில். அவன் சாதனை அவன்மட்டில்!!

உன் சாதனை அவனிடம் கூடாது. அவன் சாதனை உன்னிடம் கூடாது!! உன் சாதனையின் பலன் உனக்கே. அவன் சாதனையின் பலன் அவனுக்கே!! நீ அவனை திருத்துவதாலோ அவனை கண்டிப்பதாலோ நீதான் கெடுகின்றாய்! அதனால் உன் வினை விருத்தியாகிறது, அதற்கு நீயே பொறுப்பாகிறாய்! அதற்கு அவன் பொறுப்புமல்ல. அவன் வினையை அவன் விருத்தியாக்குகிறான்.

இதற்காகத்தான்!

"உன்னையே நீ காண் (உணர்) அவனை நீ காணாதே" அவன் உனக்கு பொறுப்பல்ல. நீ அவனை சீண்டும் போது அவன் விஷம் (வினை) உன்னைத் தாக்கி அழிக்கிறது. அவன் உன்னைச் சீண்டும் போது நீ அமைதிகாத்தால் அவன் விஷம் (வினை) உன்னைத் தாக்காது. அவனிடம் உள்ள விஷம் வெளியில் சிந்தி விரயமாகுமே தவிர அவனையும் பாதிக்காது ↔ உன்னையும் பாதிக்காது

உன் அமைதியால் சாந்தியால் அடக்கத்தால் இருவருமே ரட்சிக்கப்படுகிறீர்கள். ஆகவே

**நீ அடங்கு, அவனை அடக்காதே!!**



இன்றொன்றையும் கவனிப்பாயாக!
உன்வீடு எனச் சொன்னது உன் இதயமாகும். உன் இதயத்திலேயே அந்த விஷ ஜந்துக்களும், விஷப் பூச்சிகளும் இருக்கின்றன. அதைப் போலவே அவன் இதயத்திலும் உன்னிடம் உள்ள அனைத்தும் இருக்கின்றன என வைத்துக்கொள்.
உன்னிடம் உள்ளவைகள் எப்போதுமே எழாது!
அவனிடம் உள்ளவைகளும் எப்போதுமே எழுவதில்லை!
ஒருவர் காரியத்தை ஒருவர் காணும்போதும்; ஒருவர் வார்த்தைகளை ஒருவர் கேட்கும்போது தான் இந்த விஷ ஜந்துக்களும் விஷப்பூச்சிகளும் இருவருக்கும் எழும்!
“இருவரும் மோதினால் இருவர்க்கும் அழிவே!”
“ஒருவர் எழுச்சியினால் இருவர்க்கும் அழிவில்லை!!”

காரணம்

எவரிடம் அந்த ஜந்துக்களிலும் பூச்சிகளிலும் எழுச்சி உண்டாகின்றதோ அவருடைய விஷத்தன்மை வெளிப்பட்டு விரயமாகும். அவரும் பல முறை உன்னை சீண்டலாம், நீ அமைதியும், பொறுமையும், சாந்தியும் அமைதியும் காத்துவந்தால், அங்கு அவனிடம் ஒன்றுமில்லை. அவனிடம் கத்தி கத்தி நம் தொண்டை தான் வறண்டு போகிறது; நமக்குத்தான் கஷ்டமும் நஷ்டமும் தோன்றுகிறது அவன் சுகமாக சிரித்துக் கொண்டே ஆனந்தமாக இருக்கிறானே என சிந்தித்துவந்து விடுவான். பின் அவனும் உன் போன்று அமைதியும் பொறுமையும், சாந்தியும் காப்பதனால் அவனிடம் உள்ள விஷங்கள் அனைத்தும் காலக்ரமத்தில் அழிந்துவிடும்!

மேலும்! இந்த ஜாக்ராவஸ்தையில் நீ விழிப்புடன் இருப்பதென்பது

**இறை உறவு; குரு உணர்வும்** ஆகும்!

அதாவது, இறை உறவில் “அனைத்தும் அவனுடைமையே” என்றும் அனைத்தும் அவனே என்றும்; குரு உணர்வில் அனைத்தும் காலாதீத ஒன்றே; அங்கு எந்த சஞ்சலங்களுக்கும் இடமில்லை என்றும், அந்த “ஒன்றே நாம், நாமே அது” என்ற பேருணர்வோடு அதாவது மிகப் பெரிய உணர்வோடு இருப்பாயாக! ஆனால் சாதனை கடினம் தான். “முயற்சி திருவினையாக்கும்”
“முயற்சி உன்னுடையது, செயல் அவனுடையது”



உ

முயற்சி உன்னுடையது:- எல்லாம் நீயே என்ற நிலையில் சர்வார்ப்பணமாக விடுவதே உன் முயற்சி. விடுவதும் ஒர் முயற்சி தானே என்கிறாயா?

சும்மா இரு! சுகமாக இரு! அதற்கு எண்ணமில்லாமல் இரு!

எண்ணமில்லாமல் இருப்பதற்கும் முயற்சி வேண்டுமே என்கிறாயா? நீ சுத்த வாழைப்பழ சோம்பேறி எனத் தெரிகிறது. எப்படி எனக் கேட்கிறாயா? இரு சோம்பேறிகள் ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள். அவ்விருவரும் எண்ணினர்;

ஆமாம் இறைவன் கருணை உள்ளவன் அவனையே எண்ணிக் கொண்டு சும்மா இருந்தால் உணவும் கொணர்ந்து கொடுப்பான் என மஹான்கள் சொல்கிறார்களே நாமும் சும்மா இருப்போம் என இருவரும் இறை உணர்வோடு இறைக்காகப் படுத்து விட்டார்கள். மூன்று தினங்கள் இறைவன் இவர்களைப் பட்டினி போட்டுப் பார்த்தான். இவர்கள் தான் முழு சோம்பேறிகள் ஆயிற்றே! கருணைக்கடலான இறைவன் இவர்கள் மீது இரங்கி ஒரு தார் வாழைப்பழத்தை இவர்கள் தலைக்கு மேல் தொங்க விட்டு விட்டு எடுத்துச் சாப்பிடுவார்கள் என சற்று தூரத்தில் காத்திருந்தான். இவர்களும் சாப்பிடுவதாக காணோம்.

ஒருவன் சொன்னான் வாழைப்பழ தாரை நம் தலைக்கு மேல் தொங்கவிட்டால் அதை எடுத்துக் கொடுக்க வேண்டாமோ எனக் கேட்டான் மற்றவன் சொன்னான் அதை எடுத்துக் கொடுத்து நாம் என்ன செய்வது அதை உரித்துத் தர வேண்டாமோ என கேட்டான். வாழைப்பழத்தை உரித்தால் மட்டும் போதுமா அதை வாயில் "ஊட்டி விட்டால் தான் சுவைத்து சாப்பிடலாம்" எனச் சொன்னானும்!

அப்படிப்பட்ட சோம்பேறி என ஆகிவிடாதே!!!

எம் கருணைக்கடலான இறைவனும் அவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கி அந்த வாழைப்பழங்களையும் உரித்து அவர்கள் வாயில் ஊட்டப்போனானாம். ஒருவன் சொன்னான் "நாம் வாயை மூடிக் கொண்டால் எப்படி ஊட்டுவான்" என பார்க்கலாம் என இருவரும் தம் வாயை மூடிக் கொண்டார்களாம். இறைவனும் சிரித்துக் கொண்டே உங்களுக்கு அன்னம் ஊட்டுவது யார் என்றான். அவர்களும் "அம்மா" என வாயைத் திறந்தார்கள், திறந்த வாயில் பழங்களை ஊட்டினான் எம் இறைவன். அன்ன



௨

இது ஸத்ய வாசகமாகும் :— தொடுவது முயற்சியாகும், இங்கு எண்ணம், சொல், செயல் அவஸ்யம் வேண்டும்!
விடுவது முயற்சி இல்லை, இங்கு எண்ணம், சொல், செயல் இல்லவே இல்லை. ஆரம்ப முயற்சியில் உன் சாதனைக்காக இறை உறவையும் குரு உணர்வையும் பற்றுகிறாய், காரணம் விஷய இனிமையை விடுவதற்காக பற்றுகிறாய். உன் சாதனையின் முதிர்ச்சியில்
இறை உறவும், குரு உணர்வும் உன்னைப் பற்றிக் கொள்கிறது! இப்போது நீ சும்மா சுகமாக இருக்க முடியும்.

## இது நீ விட்ட நிலையாகும்!

அது என்னைப் பற்றிக் கொள்கிறது என்றால், புரியவில்லையே என கேட்கத் தோன்றுகிறதா?
அவை இரண்டும் உன்னைப் பற்றிக் கொண்டால் எந்த குணதோஷங்களும் உன்னைப் பற்றாது நீ ஆனந்தமாகவே இருப்பாய். அந்த ஆனந்தமும் விட்டு விட்டு வராது; தைலதாரை போல் இடைவிடாமல் உன்னிடம் இருக்கும். இதை விளக்க வார்த்தைகள் இல்லை. இவை உன் சுய அனுபவத்தில்தான் உணர முடியும்!

செயல் அவனுடையது :— "அவனன்றி அணுவும் அசையாது" என்ற நிலையும் "எல்லாம் ஈசன் செயலே" என்ற நிலையும் "நடப்பதெல்லாம் நாராயணன் செயலே" என்ற நிலையும் பெரியவர்கள் வாக்கு உனக்கு அனுபவமாயிருக்கும். எங்கு நோக்கினும் அவனைக் காணலாம். கேட்கும் ஒலிகள் அனைத்தும் அவன் ஓசையே என ஆனந்தமாக இருப்பாய்.

இங்கு தான்

விடுவதை விட்டால் படுவது தாமே படும்!

தொடுவதை தொட்டால் (நடுவன்) எமன் நாடான்!

எனவும் சொன்னார்கள். ஆகவே எம் செல்வமே! இந்த ஜாக்ரதா அவஸ்தையில் வெகு ஜாக்ரதையாக இருப்பாயாக!

௨. ஸ்வப்பனம் :— இதில் ஓர் வித்யாசம் என்னவென்றால்; "ஜாக்ரதையில் நீ பொருள்களை தேடி நாடி ஓடி செல்கிறாய்"! "ஸ்வப்பனத்தில் அந்த பொருள்கள் வாஸனா ரூபமாக உன்னை நாடி வருகிறது"! இந்த ஸ்வப்பனத்திற்கு மூலதனம் உன் எண்ணங்களாகும்! இந்த எண்ணங்கள் பொருள்களின் வாஸனைகளை அதாவது விஷேச குணங்களை வைத்தே வருகின்றன.



ஸ்வப்பனத்தில் ஒருவனிடம் 1000 ரூபாய் கடனைக் கொடுப்பது போல் கண்டது,
நனவில் சென்று அதை வாங்க முயற்சி செய்வதில்லை.
காரணம் அது கனவு தான் எனத் தெளிவாகிவிட்டன. கனவில்
யானை, குதிரை, ஒட்டகம், கார்கள், மலைகள் தெரியலாம் விழித்த
உடன் அவை பொய்யென உறுதி செய்கிறோம். மேலும் அந்த கனவில்
நாம் அங்கு செல்லவில்லை எனவும் தெரிகிறது. நம் உள்ளத்தில்
கண்டோம் என சொல்லவும் அதாவது அவை நம் உள்ளத்தில்
வந்து போயின என சொல்லவும் முடியாது. காரணம் "உள்ளங்
கை அகலமுள்ள இதயத்தில்" அவை வரவும் முடியாது தான்
பின் கண்டோமே அது வந்ததா நாம் சென்றோமா என பார்த்தால்
நாம் செல்லவும் இல்லை அவை வரவும் இல்லை என தெளிவாகும்.

"இதன் காரணம் எண்ண அலைகளே" என உறுதியாகிறது.
இந்த மனதிற்கு அத்தனை வன்மை இருக்கிறது. இந்த மனோ வன்மை
யால் கனவில் சொர்க்க லோகங்களுக்கும் அவஸ்தை தரும் நரக லோ
கங்களுக்கும் தேவ தெய்வ பத லோகங்களுக்கும், இந்த அண்டம் விட்டு
வேறு அண்டங்களுக்கும் சென்று அங்கு விதவிதமான ஜீவர்களையும்
பார்த்து வருகிறோம்.

"இது மனதின் செப்படுவித்தையாகும்".

மேலும் மேலும் இதற்கு விநோதமான விளக்கங்களும் தரலாம். அது
நமக்கு தேவையில்லை இதை பொய்யென உறுதி செய்ய வேண்டும்!

குழந்தாய்! இதை உணர் நனவில் தான் கடுமையாக உறங்
குகிறாய்! சொப்பனத்தில் இலேசான உறக்கம் தான் காரணம் கனவில்
கண்டதையும் அனுபவித்ததையும் விழித்தவுடன் பொய் என உணர்
ந்து விடுகிறாய். ஆனால் விழிப்பு நிலையில் என்ன தான் விழிப்பு பொய்
என்றும் கனவு என்றும் அறிவுறுத்தினாலும் அவை
"மாறுவதில்லை, மறைபடுவதில்லை, மறுக்கவும் முடியவில்லை"

காரணம்!

இந்த மனம் ஓர் தூலத்தை (வடிவத்தை) பற்றியே நிற்கும், விளையாடும்,
அனுபவிக்கும்! சு
இந்த மனம் சூட்சும சொரூபத்தை பற்ற முடியவில்லை, நினைக்கவும் இயலாது
அனுபவிக்கவும் முடியாது!

நனவில் இந்த மனம் காணும் பொருள்கள் அனைத்தும்

**"நாமரூப முள்ள தூலங்கள்"**

**"ஆனால் மனம் சூட்சுமம்"**

ஆகவே நனவில் உள்ள அறியாமை உறக்கத்திலிருந்து விழிக்க முடியவில்லை.



ஜடத்தை மண்ணாகவும், நாமரூப குணத்தை மனதின் கற்பனையாகவும்
உறுதி நிச்சயம் செய்துவிட்டால் நனவின் உறக்கத்திலிருந்து விழிக்கலாம்.

அதாவது

இதை நன்றாக கவனி:- இந்த சூட்சுமமான மனமானது அந்த
ஜகத்தை நாம ரூப குணமாக அனுபவிக்கிறது.

நாமரூபம் அதாவது அதன் பெயரும் தோற்றமும் ஜடமாம்
என உணர்ந்தால் இல்லையென்றாகிவிடும். அதுவும் சூட்சுமமே!
ஜகத்தின் எந்தரூபமும் அதாவது தோற்றமும் ஜடமே.

**“அது பிருதிவியே”**

அதாவது எந்த தோற்றமும் மண்ணுக்கன்னியமில்லை;
அந்த மண்ணில் தோன்றிய தோற்றம் எனக்கு இந்த பெயரிட்டு
அதை நான் இந்த வடிவத்தோடு தான் இருப்பேன். நான் இப்படி
தான் இயங்குவேன்: எனக்கு இந்த குணமெல்லாம் உண்டு என

“எது எதனிடம் சொல்லியது??? இல்லையே!

இது இந்த சூட்சுமமான மனதின் கற்பனையே! என தெளிவாகிறது.
இதிலிருந்து என்ன தெளிவாகிற தென்றால்
கதைக்கு விதவிதமாகச் சொல்லலாம்!
ஆனால் ஒர் உண்மை!

அந்த காலாதீத ஒன்றே மனதீதான மனமாகி ஈஸ்வராதிகளை
தோற்றுவித்துக் கொண்டு. மலினமனமாகி ஜீவர்களை
தோற்றுவித்துக் கொண்டு; கீழான குணமனமாகி உலகைத்
தோற்றுவித்துக்கொண்டு;

ஜடத்தை ஜகமாக பாவித்து!
குணத்தை பேதமாக பாவித்து!
தம்மை அதன் உயிராக பாவித்து!
விளையாடிக் கொண்டிருக்கிறது!!!

இதை மனதின் மயக்க மாயா விளையாட்டு என அறிவுபூர்வமாக என்று
உணர்கிறயோ அந்த கணமே,
மனப்பிடியிலிருந்தும் விலகலாம்; ஜாக்ரதா அறியாமை உறக்கத்தி
லிருந்தும் விழிக்கலாம்; அனைத்து குணதோஷங்களிலிருந்தும்
விடுபடலாம்; மரணபயம் என்ற காலபாசத்திலிருந்தும் விடுபடலாம்.
இது உறுதி!



உ

குழந்தாய்!

இந்த ஜகத்தை கனவென தள்ளுவதற்கு ஓர் சிறிய கதை சொல்கிறோம் இதைக்கதையாக நோக்காமல் கருத்துடன் உணர்க.

ஓர் உண்மையான பக்தனுக்கு விதிவசத்தால் பலகாலம் கழித்து ஓர் குழந்தை பிறந்தது. அவன் மனைவி சற்று லௌகீகத்தில் பிடிப்புடையவள். விதிவசத்தால் அக்குழந்தைக்கு ஓர் கொடுமையான நோய் கண்டது போலும்? அந்த கவலை இவனை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அவள் அதிகமாக துக்கித்தாள். தம் கணவனை ஓர் வைத்தியரிடம் மருந்து வாங்கி வரச்சொல்லி பக்கத்து கிராமத்துக்கு அனுப்பி வைத்தாள். அவனும் அடுத்த கிராமத்துக்கு வைத்தியரிடம் மருந்து வாங்கச்சென்றான். நல்ல வெய்யில் செல்லும் வழியில் ஓர் ஏரிக்கரையில் உள்ள ஆலமரநிழலில் படுத்தான் தூங்கிப் போனான். மாலை 5 மணி சுமாருக்கு எழுந்தான். அப்படி படுத்தவன் ஓர் அருமையான கனவு கண்டான் போலும்? அவன் மனதில் குழந்தை இனி பிழைக்காதென தோன்றியது போலும். அக்கிராமம் செல்லாமலேயே திரும்பிவிட்டான். வீட்டிற்கு வந்ததும் குழந்தை இறந்து போன செய்தி கேட்டான். அரற்றவில்லை அழவில்லை சோர்ந்து போகவில்லை அமைதியும் சாந்தியும் கொண்டு ஓர் ஓரமாக அமர்ந்துவிட்டான். இவனை மனைவி கவனித்தாள் கொஞ்சமும் மனகஷ்டமோ கவலையோ இல்லாமல் தம் கணவன் அமர்ந்திருப்பதை கவனித்தாள். அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது கணவனிடம் சென்றாள். வாயில் வந்தபடியெல்லாம் திட்டித் தீர்த்தாள் அதாவது:-

ஏமனுஷா! நீ ஓர் ஆம்பளை தானா? கொஞ்சமாவது ஈவு இரக்கம் இல்லையா? கடவுள் உன்னை இப்படி கல்லாவா படைச்சுட்டான் உனக்குமான ஈனம், சூடு, சுரணை எதுவுமே கிடையாதா? இப்படி ஓர் மரக்கட்டையை கட்டி அழ வைச்சுட்டானே நான் என்ன செய்வேன்? பலகாலம் தவம் இருந்து நாம் பெத்த குழந்தை சாகக் கிடக்கிறேன். நீ கொஞ்சம் கூட நெஞ்சில் ஈரம் இல்லாமல், வைத்தியரை பார்க்கப் போய், அவரையும் கூப்பிடாமல், மருந்தும் வாங்காமல் இப்படி இடிச்சபுளியாட்டமா வந்துட்டியே! உன் கண்ணிலிருந்து ஒரு சொட்டு கண்ணீராவது வருகிறதா? இப்படி மரமண்டையாய் போனியே உன்னை கட்டிக்கொண்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன். உழைச்சுப் போட்டரே பாசம் அனுவாவும் இல்லையே! என் மணியான ஒருபையனும் போயிட்டானே. அந்த கடவுளுக்கும் இப்படி கண் தெரியாமல் போச்சே. அந்த கடவுளை சொல்லியும் குத்தம் இல்லே, உன்னை சொல்லியும் குத்தமில்லே, என் தலைவிதியை நினைச்சுத்தான் அழணும். நான் இவ்வளவு தூரம் பேசுகிறேனே? உன் மனம் அந்த கல்லாய்



2

போச்சா? பெத்தவருக்குத் தெரியும் பிள்ளையோட அருமை, மத்த வங்களுக்கு என்ன தெரியும் பிள்ளையோட பெருமை? நீ மனுசனே இல்லே ஒரு மிருகம். இல்லே மிருகத்துக்கும் கேவலமா போனியே. உன்னைச் சொல்லி யாரிடம் அழ. என் தலை விதியை எண்ணி எண்ணி நான் தான் அழணும் என்றும் இன்னும் பற்பல விதங்களாக துக்கித்தும் அவனை தூஷித்தும் அழுத்துப் போனாள்! அவளால் அழவும் முடியவில்லை பேசவும் முடியவில்லை சோர்ந்து போனாள் அப் பேதைப் பெண்.

இவன் மெதுவாக எழுந்தான் அமர்ந்திருந்த மனைவி பக்கம் தானும் அமர்ந்தான். புன்முறுவலுடன் அவள் கண்ணீரை துடைத்தான் மெதுவாக அவள் கேசத்தை வருடி விட்டான்.

அம்மா ஆவரசியே! எம் கண்மணி அனைத்தையும் முடித்து விட்டாயா? இன்னமும் பாக்கியிருந்தால் அதையும் முடித்து விடு! "நீ குறைகளை சொல்லி அழக் கடமைப்பட்டவள்! யாம் அனைத்தையும் கேட்கக் கடமைப்பட்டவன்."

வைதீயரை காணச் சென்ற யாம் ஏரிக்கரையில் படுத்து விட்டோம். அது சமயம் ஓர் அருமையான கனவு கண்டோம் இதை சற்று கேள் இதைக் கேட்ட பிறகாவது உன் துக்கம் தணிகிறதா எனப் பார்ப்போம்.

எம் கனவில் ஓர் அழகு சுந்தரியான இளவரசியைத் திருமணம் செய்து கொண்டோம். பலவருஷம் போகமான வாழ்க்கை. யாமும் வரிசையாக ஒன்பது ஆண் குழந்தைகளை பெற்றெடுத்தோம். இராஜ போகமான வாழ்க்கை, அது உல்லாசபுரி, சொர்க்க போகத்தையே அனுபவித்தோம்! திடீரென ஓர் கொள்ளை நோய் ஏற்பட்டது. அதில் எம் செல்வக் கண்மணிகள் பீடிக்கப் பட்டார்கள். அதில் வாரம் ஓர் குழந்தையாக ஒன்பது வாரங்களில் ஒவ்வொரு குழந்தைகளாக அனைவரும் மாண்டனர். புத்திர சோகத்தினால் எம் அருமை மனைவியும் கதறி கதறி அழுது அவளும் இறந்து விட்டாள்.

"யாம் திடீரென விழித்தோம்! அனைத்தும் கனவென உணர்ந்தோம்"

யாம் வீட்டிற்கு வந்தோம் இங்கு இந்த ஒரு குழந்தையும் இறந்துவிட்டது

இப்போது உன்னை ஒன்று கேட்கிறோம்!!

"அந்த ஒன்பதை நினைத்து அழுவதா? இந்த ஒன்றை நினைத்து அழுவதா"?

இதன் உள் அர்த்தம் புரியவில்லையா?

நன்றாக உணர்!



உ

அவள் கண்ட கனவு:— வறுமையான வாழ்க்கை; நித்தம் கூலி வேலையின் பிழைப்பு; உண்ண உணவு சரியாக கிடைக்காமலும் உடுத்த வகையான துணி கிடைக்காமலும், அந்த பட்டினி பசியினோடு அந்த துன்பத்தையே ஏற்க வந்த ஓர் குழந்தை "கஷ்டத்திலும் மஹா கஷ்டமான வாழ்க்கைக் கனவு"!!

இவன் கண்ட கனவு:— ராஜ போகமான வாழ்க்கை; பொன்னும் மணியும் பொருளுமாக அவைகளிலேயே மூழ்கி இருக்கும் அமோகமான வாழ்க்கை; அரசு, தர்பார், ஆணை ஆகிய ஆடம்பரங்களிலும் அதிகாரம் செலுத்தும் வாழ்க்கை; மணி மணியான ஒன்பது குழந்தை செல்வங்கள் கும்மாளம் அடிக்கும் வாழ்க்கை; நினைத்த போதெல்லாம் தாரத்திற்கு சுகம் கொடுக்கும் சுந்தரி அமைந்த வாழ்க்கை "போகத்திலும் கரை காண முடியாத ராஜ போக வாழ்க்கை கனவு"!!

ஏ அற்ப மனிதா!

இவ்விரண்டும் கனவு தானே!

கழுதை வத்தியில் (மவத்தில்) முன் வத்தி பின் வத்தி என

**பேதம் உண்டா???**

ஒரு வருடம் முன்பு நடந்தது, ஒரு மாதம் முன்பு நடந்தது; ஒரு வாரம் முன்பு நடந்தது; நேற்று நடந்தது; இன்று நடந்தது; ஒரு மணி நேரத்திற்கு முன் நடந்தது, ஒரு நிமிஷத்திற்கு முன் நடந்தது; ஒரு வினாடியில் நடந்து முடிந்தது திரும்பவும்,

அதே நிலையில், அதே இடத்தில், அந்தந்த நாமரூபத்தோடு, அந்தந்த இன்ப துன்ப நிலையில் இனி நடைபெறுமா???

மேலே சொன்ன நிலையில் எப்போதாவது நடைபெறுமா???

அவஸ்யம் முடியாது!

அப்படியானால் அவை கனவு தானே? ஆனால் தூக்கத்தில் உன் கனவில் கண்டதை தூங்கி விழித்ததும் அதை கனவென தள்ள முடிகிறது. காரணம் அது சூட்சுமம் ஆனால் நனவில் நடந்ததை உடனே மறக்க முடியவில்லை காரணம் நாமரூப பொருள்களோடு அனுபவித்தல் அது ஸ்தூலம்! ஆகவே தான் கனவை விழித்தவுடன் இல்லையென்று முடிவு செய்து விடுகிறோம் நனவை என்ன தான் முயற்சித்தாலும் அதே நாமரூபம் தோற்றிக் கொண்டே இருப்பத னவு



உ

அவைகளையும் கனவென தள்ள முடியவில்லை. நன்கு சிந்தி!
பாலியத்தில் நடந்ததென்றும், பல காலங்களுக்குமுன் நடந்த
தென்றும் பல வருஷங்களுக்குமுன் நடந்ததென்றும் கூறும்
நிகழ்ச்சிகள் அனைத்தும் "ஒரு நொடியில்"
நடந்து கனவென முடிந்துவிட்டதென உணர்வாயாக.
இதைத்தான் எம் ரிபு முனிவன் அவன் பாடலில் சொன்னான்;

கனவில் நனவில்லை; நனவில் கனவில்லை
நனவு கனா இவ்விரண்டும் சுஷுப்தியில் இல்லை
நனவு கனா சுஷுப்தி இம்மூன்றும்
சுத்தத்தில் இவையே இல்லை! என்றான்!

மேலே சொன்ன கனவுக் கதையில்
"அவள் நனவைச் சொல்லி அழுகிறாள்"!
"அவன் கனவைச் சொல்லி சிரிக்கிறான்"!
அழுவதும், சிரிப்பதும் "ஓர் அவலம் தானே"!
அவ்வவலமும் "மனதின் விகாரம் தானே"!
அவ்விகாரமும் "கற்பனையின் எண்ணம் தானே"!
கற்பனையே மலின மாயை; அக்கற்பனையையும் அந்த ஒன்றென்று
தீர்மானித்துவிட்டால் அது சுத்தமாயையே; அதை இல்லையென
ஆக்கமுடியாது ஆனால் மஹாமௌனமாகிவிட்டால்
அது பரப்பிரம்மமே அது பிரம்மானந்தமே!

3. சுஷுப்தி:— இது ஆழ்ந்த உறக்கமாகும். இந்நிலையில்
தான் அறியாமையின் இந்த மலின மனமானது தற்காலிகமாக
செயலற்று தம் யதாஸ்தானத்தோடு (ஆத்மாவோடு) இணைகிறது.
இங்குதான் விகாரமான எண்ணம் இல்லை; எந்த வியவகாரங்களும்
பிரச்சனைகளும் இல்லை; பேதாபேதம் இல்லை. இங்குதான் உண்மை
யான அமைதி, சாந்தி, மௌனம் நிலவுகிறது. இங்கு தான் பிரம்மா
னந்தம் அனுபவிக்கிறோம் ஆனால் இன்னதென உணராமல் அனுபவிக்கி
றோம்;



உ

இந்த அனுபவத்தில் மன எண்ணங்கள் அடங்கியிருக்கிறதே
தவிர அழியவில்லை! அழிந்திருந்தால் தூங்கி விழித்ததும்
அதே பிரம்மானந்தத்தோடே இருப்போம்; அழியாத் தன்மை
யினால் அடங்கியிருந்த தன்மையினால்

மனிதன் மனிதனாகவே (குணங்களோடு) விழிக்கிறான்!
மிருகங்கள் மிருகமாகவே (குணங்களோடு) விழிக்கின்றன!
பறவைகள் பறவைகளாகவே (குணங்களோடு) விழிக்கின்றன!

விசாரணையில் மனம் அழிந்து மறைந்தாகிவிட்டால் அது இந்த
விழிப்பின் உறக்கமாக இருக்காது; அது அறிதுயிலாக அதாவது
அறிவின் சொரூபமாக அதாவது ஆத்ம சொரூபமாக அதாவது நாம்
நாமான பிரம்மானந்தமாகவே இருப்போம்.

ஓர் மனிதனின் தூக்க நிலையை சற்று விளக்குகிறேன் உணர்க.
ஒருவன் தரையிலோ, பாயிலோ, கட்டிலிலோ படுக்கிறான். தலைக்கும்
கால்களுக்கும் இருதலையணையை வைத்துக் கொள்கிறான். ஒருக்களித்து
ஒரு கையை தலைக்கு அணையாக வைத்துக் கொள்கிறான்.

முதலில் கர்மேந்திரியங்கள் ஓய்வெடுக்கின்றன. ஆனால்
மனம் ஓய்வெடுப்பதில்லை ஓர் எழுச்சியை உண்டுபண்ணி அங்கேயோ
இங்கேயோ அதைவாங்கு, இதைக்கொடு என கர்மாவை செய்யச்
சொல்லி தூண்டும் கைகளையும் கால்களையும்!

கைகளும் கால்களும் அலுத்துப் போனாலும் அப்புறம் பார்க்
கலாம் என மறுத்துவிடும்.

மனம் கண்களையும் காதுகளையும் தூண்டும் அதாவது உன் வீட்
டுக்கு வந்த விருந்தினரைப் பார் என்றோ, உன்னைப்பற்றி ஏதோ
பேசுகிறார்கள் அவைகளை உற்றுக் கேள் என்றோ பலவித உணர்வுகளை
இந்தமனம் தூண்டும்.

கண்களும் காதுகளும் சிரமமாக இருக்கிறது அப்புறம் பார்க்
கலாம் என மறுத்துவிடும்.

இந்தமனம் நாசியையும் வாயையும் தூண்டும் அதாவது அதோ
பார் நறுமணவாசனை வருகிறது ஏதோ ருசியான பலகாரம் செய்கிறார்
கள் போல் தெரிகிறது போய் ஒரு பிடி பிடித்துவிட்டு வந்து ஆனந்த
மாக தூங்கலாமே என எழுப்பிவிடும்.

நாசியும், வாயும் சாப்பிட்டது போதும் இப்போது ஓய்வு தேவை
அப்புறம் பார்க்கலாம் என மறுத்துவிடும்!



இந்த மனதிற்கு உபணிந்து எதுவும் வேலை செய்ய மறுத்து விட்டதால் எண்ணமே மனதின் வடிவமானதால் நடந்த ஒரு சம்பவங்களை எண்ணிப் பார்க்கும்

"அதில் நிலைத்து நிற்க முடியாது போகும்"

காரணம்

ஏதாவது ஓர் தூலத்தை பற்றித்தான் இந்த மனம் நிற்க முடியும்! காரணம் பகலில் அதாவது நனவில் உலகை கண்டும், கேட்டும், நுகர்ந்தும், ருசித்தும், பேசியும், ஸ்பரிசித்தும், கை கால்களால் தர்மாக்களை செய்தும் (இங்கு இத்தனையும் மனம் செய்யவில்லை)

"எண்ணத்தால் ஏவியது அதாவது வேலை வாங்கியது"!!!

அனைத்துக்கும் ஓய்வு நேரத்தில் மனதின் பிரயத்தனம் பலிக்கவில்லை!

ஆகவே

**சிவமேயான ஆன்மாவில் ஒடுங்கியது மனம்!!!**

கரையவில்லை, கலக்கவில்லை, மயமாகவில்லை.

இதை **மனஜீவ** ஒடுக்கமே தூக்கம் என சொல்லலாம்

இதை ஆன்றோர் மனதை சக்தியாகவும், ஜீவனை சிவமாகவும் பாவனை செய்வர். ஏன் இங்கு ஜீவன் என சொல் இருக்கும் என்றால் இங்கு ஜீவகளை களையப்படவில்லை. ஆத்மா ஜீவனாகவே இருக்கிறான். இதனாலேயே இறைவனுக்கு **பசுபதீஸ்வரர்** என்ற நாமம் வழங்குகிறது. காரணம் :- அனைத்தும் பதி (சிவ) சொரூபமே. பசு (உலகம்) என்ற பாசம் (ஆசை, அபிமானம், அஹங்காரம்) பிணைந்ததால் பசுபதி என்றும். ஏன் இதை பதிபசு எனப் போடவாமே என்றால், உலகால் பின்னப்பட்ட பதி இங்கு பாசமாக (பசுவாக) ரக்ஷிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே தான் இறைவனுக்கு இந்த பசுபதீஸ்வரர் என்ற நாமம் வழங்கலாயிற்று. எந்தவிதமும் பசுவாகிய இந்த ஜீவன் பாசமாகிய ஆசை-அபிமானம்-அஹங்காரத்தை விடுகிறதோ அந்த க்ஷணமே இது **பதியான்ற சிவமாகும்."**

இந்த நிலையில் இந்த கற்பனை எண்ணத்தாலான மனமானது ஆத்மாவில் இரண்டறகலக்காமல் ஒருங்கி இருந்து கர்ம விசேஷத்தால் விழிப்பு என்ற அறியாமையினால் திரும்பவும் இந்த ஆகத்திற்கு வருகிறான். இதுவே தூக்கம் என்ற சுஷுப்தியின் ரகஸ்யமாகும்!



இதை ஆன்றோர் **சிவ சக்தி** ஐக்யம் என்றும் சொல்வதுண்டு
ஏன் இதை சக்தி சிவ ஐக்யம் என சொல்வதில்லை யென்றால்
சிவம் என்ற அசைவற்ற ஒன்றை அசைப்பதே இந்த சக்தி தானே
ஆகவே தான் இதை சிவசக்தி ஐக்யம் என்றார்கள். இதுவே தெய்வீக
நிலையில் இருந்து வெளிக்கை நிலையில் பேசும் போது "ஜீவ சக்தி"
ஐக்கியம் என்றும் சொல்லவாம். காரணம் இங்கு "ஏகச்சி"
இல்லை கலக்கவில்லை ஐக்கியமாகி இருக்கிறது. அதாவது

"மனம் ஆத்மா ஒருக்க மேநாக்கம்"!!

ஓர் ஜீவன் இறைகிருபையினாலும், குருகிருபையினாலும்,
இவனுடைய சிரத்தையினாலும், ஆத்ம உணர்வை உணர்ந்து
"சுத்த சிவம்" எனவும் ஆகவாம்.
ஓர் ஜீவன் இறைகிருபையையும் குரு கிருபையையும் பெற
தன் முயற்சி செய்யாமல் அதாவது சிரத்தை இல்லாமல் கண்ட
தே காட்சி கொண்டதே கோலமென போக போக்கியங்களில்
உழன்று (சிவம் என்ற மஹா அர்த்தத்தின் 'ி' என்ற கொம்பை அகற்றிய
நிலையில்) "செத்த சவம்" எனவும் ஆகவாம்!

குழந்தைகளே!
தன்னை அறியும் அறிவே மெய்யறிவு என்றும்
உலகை அறியும் அறிவு பொய் அறிவு அதாவது பேய் அறிவு என்றும்
கூறுவர். இதைத்தான் எம் திருமூலர் சொன்னார்:

தன்னை அறிய தனக்கொரு கேடில்லை;
தன்னை அறியாமல் தானே கெடுகின்றார்;
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்;
தன்னை அர்ச்சிக்கத் தானிருந்தானே! என்றார்.

இதில் அனேகருக்கு சந்தேகமும் பயமும் தோன்றுகின்றது. எப்படி
என்றால் நாமே இறைவன் என்றும் நாமே அந்த காலாதீத பரவஸ்து
வென்றும் எப்படி ஆககூடியும்? நாம் அல்ப ஜீவன் தானே! இறைவன்
எத்தனை மஹத்வம் வாய்ந்தவன்! சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் திரோதனம்
அனுக்ரஹம் என பஞ்ச கிருத்யங்களை அனாயசமாக செய்கின்றானே



2

நம்மால் ஓர் சிறு துரும்பை அசைக்க முடியுமா? அந்த ஆற்றல் நமக்கேது? இது பொருந்தாதே என்ற சந்தேகமும் இது அபசாரமும் அனாசாரமும் ஆகிவிடுமே என்றும், தெய்வ நிந்தனை செய்த பழி பாவமும் நமக்கு வந்து சேருமே என்ற தவக்கம் பயம் உண்டாகும். இதற்காகவே எம்பட்டிணத்து அடிகள் ஆரணமாலையில் ஒரு பாடல் சொன்னார்!

"உன்னுக்குள்ளோ யாம் இருக்க எம்முள்ளோ நீ இருக்க (இந்த) "**மனக்கவலை**" தீரவரம் அருள்வாய் ஆரணமே" என்றார்.

மனக்கவலை :- இதை நன்கு உணரவும். கவலை என்றால் "**க**ன்று பசுத் தன்மையோடு கூடி "**பாசவலை**" என்ற பிணைப்பான பின்னலை வைத்து தம் மைந்தாலே பிணைத்துக் கொண்ட இந்த மனமானது "**எந்த க்ஷணம்**" அறுத்தெறிகின்றதோ அந்த க்ஷணமே இவை அனைத்தும் மாறி மறைந்து நீ இறை சொரூபம் ஆக முடியும் "**இது ஸத்யம்**" !!! **ஸத்யம்** !!! **ஸத்யம்** !!!

"**இது ஸ்வய அனுபவம்**" !!!

ஆனால் இது "அவன் அருளால் அவன் தாள் வணங்கி" என்ற நிலையில் தான் முடியும்!

"இதற்கு ஒரே வழி அவனை முற்றிலும் சார்ந்திரு" !!!

நன்கு கவனி :- தோற்றம் தானே சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரமாகிறது. தோற்றமும் இல்லை, மாற்றமும் இல்லை, மறைவும் இல்லை! இல்லையென்றால் இருமையே பிரத்யட்சமாக தோற்றுகிறதே; நான் காணாவிட்டாலும் மற்றவன் காண்கின்றானே, உலகோர் காண்கின்றனரே என கேட்கத் தோற்றுகிறதா? இவை அனைத்தும் உன் மனதின் கூத்து ஆகும். மனம் எழுச்சியானால் மேலே கூறிய மூன்றும் உண்டு; மனம் அமைதியும் நிறைவும் ஆனால் அவசியம் மேலே கூறிய மூன்றும் தோன்றாது.

இதற்கு!

இல்லை, இல்லை, இல்லையென உணர இறைவனின் மாயை விலக வேண்டும். அது அவன் அருளால் தான் (சார்ந்திருந்தால் தான்) சித்திக்கும்!

உண்டு, உண்டு, உண்டு "ஒன்றுண்டு" என உணரவும் இறைவனையும் இறைவனின் மாயையையும் ஜெயிப்பின் வெற்றியெனத் தன்னிலை அந்த ஒன்றின் அம்சமான "**குரு**" அருளால் தான் (நம்பிக்கை வைராக்யத்தால் தான்) சித்திக்கும்!



உ

நீவணங்கும் தேவ தெய்வங்களுக்கும், அனைத்து ஜீவகோடிகளுக்கும்

**"நீயேதான் ஆத்மாவாக இருக்கிறாய்"!!!**

ஆகவே இங்கு த்வேஷம் இல்லை; பேதம் இல்லை; பிரிவில்லை;
வேற்றுமை இல்லை. தூஷிக்கவில்லை. பழிக்கவில்லை.
பகைக்கவில்லை; விரோதிக்கவில்லை!

இது ஐக்கியமாகும் நிலையாகும்

"அது நீ, நீயே அது" என்பதை சற்று உற்றுணர்ந்து நோக்குவோமாக

1. காலாதீத ஒன்றான அந்த பரமே "மெயின் போர்டு" (சுவிச்)
2. மற்றும் T.V., கிரைண்டர், ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின், பேன்
லைட் மற்றும் அனைத்தும் தேவ தெய்வங்கள்"
3. மேலே கூறியவைகளின் அனைத்து இயக்கங்களிறல்
பெறும் பயன் "ஜீவகோடிகளின் உபயோகம்"!!

மேலே கூறிய அனைத்து கருவிகளும் (தேவதெய்வங்களும்)
மெயின்போர்டின் மின்சாரம் இல்லாமல் இயங்காது.
வெறுமனே மெயின்போர்டும் மின்சாரமும் மட்டும் இருந்தால்
பயன் இல்லை. "அது இருந்தும் இல்லாதது தான்"!
அதுபோல் அந்த பராபரம் தனித்து இருந்தால் எந்த பிர
யோஜனமும் இல்லை. வெறுமனே இயந்திரங்கள் மட்டும்
(தேவதெய்வங்கள் மட்டும்) இருந்தாலும் எந்த பயனும் இல்லை.
அதன் உபயோகமும் (உலகமும்) உபயோகிப்போரும்
(ஜீவர்களும்) இருந்தால் தான் பிரயோஜனம் உண்டு.

இதை உணர்!

நமக்குள் அந்த மின்சாரம் இருப்பதால் தான் கர்மாவின்
(உலகின்) இயக்கம் வெளிப்பாடாகிறது!
தேவதெய்வங்களுக்குள்ளும் அந்த மின்சாரம் இருப்பதால்
தான் அண்டரண்ட பகிரண்ட பிரம்மாண்டங்களையும் சிருஷ்டி
ஸ்திதி சம்ஹாரம் என வெகுஇலகுவில் முடிக்கிறது அது நமக்கு
அசகாய சூரசக்தி யெனத் தோற்றுகிறது!!



நமக்குள்ளும் அந்த மின்சாரம் இருக்கிறது அது கர்மா
விஷேசத்தால் திரவமாகத் தோற்றப்படுகிறது
தேவ தெய்வங்களுக்குள்ளும் அந்த மின்சாரம்தான்
இருக்கிறது. அது நம் கர்மாவை நிறைவேற்றுவதற்காக
கூடுதலான "பவர் சக்தி" அதன் வடிவங்கள் நமக்காக
கர்மா இயக்கத்திற்காக சூட்சுமமாக அமைக்கப்பட்டிருக்
கிறது. இங்கே நம் கர்மா இயக்க விஷேசத்தை அதாவது
"ஜீவத்துவத்தை" விட்டால் அந்த தேவ தெய்வங்களின்
சூட்சும வடிவங்களையும் (முக்தி அல்ல) அறிவு ஆர்வமாக
(காணமுடியாது) உணரமுடியும்!

**"நமக்குள் இருப்பது சிறு சக்தி!"**

**"தேவதெய்வங்களுக்குள் இருப்பது/மஹத் சக்தி!"**

நம் தாவத்திலுள்ளும் மிக்ஸி, கிரைண்டர், T.V., போன், ஒலி
பெருக்கி, பேன், பல்பு, ட்ரீவர், பளுதூக்கும் இயந்திரம்
மேலும் ஏதேதோ இருக்கிறது இவை அனைத்தையும் இறைவன்
ரிமோட்டை வைத்து நம் பவரை வைத்து இயக்குகிறான்.
மேலே சொன்ன இயக்கங்களை "அவன் இயக்குகிறான்" என
மெய் உணர்வினால் நீ உணர்ந்து விட்டால் அவனையும் அவன்
ஆற்றலையும் நீ உணரமுடியும். அவனுக்கும், நமக்கும்,
அனைத்துக்கும் அந்த ஒன்றே "பவர் ஸ்டேஷன்" என
உணர்ந்து விட்டால்

**அவனே நீ ஆகலாம்!**

**அவன் நீ ஆக இரண்டும் அது ஆகலாம்!!**



1. "பவர்ஸ்டேஷனின் 2) மூலப்பிரகிருதி"!
மெயின் போர்டு சுவிட்ச் என்பது (சுத்தமாயை)

2. அதன் இயக்கங்களாகிய பல்பு, பேன், TV, கிரைண்டர், மிக்ஸி, வாஷிங்மெஷின், கம்ப்யூட்டர் ஆகியவை
**தேவதெய்வ வடிவங்கள்** (அசுத்தமாயை)
இவை சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதனம், அனுக்ரஹம் என்ற பஞ்ச கிருத்தியங்களின் ஆதாரம்!

3. மேலே கூறிய இயக்கங்களால் பயன் பெறும் ஜீவகோடிகளின் புண்ணியபாப கர்மா விசேஷத்தின்
**குணாதிசயங்கள்**!!!

1. இல்லை, இல்லை, இல்லை, இல்லை, என்பது "**அது**"!

2. உண்டு, உண்டு, உண்டு, உண்டு, என்பது **இது**!
(இது மூலப்பிரகிருதியாகிய சுத்தமாயை)

3. உண்டென்றால் உண்டு இல்லையென்றால் இல்லை என்பது
"**தேவதெய்வ வடிவங்கள்**" (மலினமாயை)

4. மேலே கூறிய இயக்கங்களால் **தற்காலிகமாக**
"மாயை கற்பனையினால்" புண்ணிய பாப கர்மா விசேஷத்தால் தோன்றிய "**குணாதிசயங்கள்**" இல்லவே இல்லையென தீர்க்கமாக முடிவு பண்ணினால்
"**அது நீ, நீயே அது**"
என ஆகமுடியும்! இது ஸத்யம்! ஸத்யம்!! ஸத்யம்!!!



ஓம்

25-2-2003
செவ்வாய்
காலை 9-30

# "தத்வ போதம்"

தத்வபோதம் என்றால் தற்பதலட்சியார்த்தமான பரமாத்மாவையும், த்வம்பதலட்சியார்த்தமான ஜீவாத்மாவையும் **"ஜீவ கனி கனிந்து"** ஒன்றாக இணைப்பதாகும்! அதுவே அஸிபதலட்சியார்த்தமான பரம்பொருள் எனச் சொல்லப்படும்!

ஆத்மபோதம் என்றால் ஆத்மாவையும், பரமாத்மாவையும் பிணைப்படுத்திக் கூறி அஸிபத லட்சியார்த்தமான பரம்பொருளுடன் இணைத்து இம்மூன்றையும் அந்த காலாதீத ஒன்றென உணர்த்தி அமைதியுறைக்கும் **மஹாசாந்தி** நிலையாகும். போதம் என்றால் தீர்க்கமான முடிந்தமுடிவான அறிவு சொரூபமாகும்!

## த்வம்பத லட்சியம் விபரம்!

1. அன்பின் சொரூபங்களே! மனோநலம் பெறுக.

ஆத்ம சுகம் பெறுக! மனோநலம் என்பது சொந்தபந்த பாச பிணைப்புக்குள் இந்த மனம் சிக்குண்டு பவரோகப்பிணியால் அவதியுறுவதால் இந்தப்பிணியாகிய வியாதி நீங்கினால் மனம் நலம் பெறும்!

2. ஆத்ம சுகம் என்பது ஆத்மா சுகவீனமாக ஆவதும் இல்லை, சுகப்படுவதும் இல்லை. பகலில் சூரியனை மேகம் மறைத்து பிரகாசம் சற்று மங்குவது போன்று, இந்த ஆத்மாவை அறியாமை என்ற, அஞ்ஞானம் என்ற, கவனக்குறைவு என்ற ஓர் திரை மூடி



உ

இருப்பதால் அதை வாக்கியத்திற்காக சுகவீனம் எனச்
சொல்ல வேண்டியதாய் இருக்கிறது. இது உண்மையல்ல;
ஆனாலும் போத பாடத்தின் நிமித்தம் ஆத்மா சுகம் பெற
வேண்டும் என சொல்ல வேண்டியதாய் இருக்கிறது!

3. இந்த ஆத்மா சித்சொரூபமாக இருந்தாலும்
சித்தத்துடன் சம்பந்தம் கொண்டு ஆபாசப் பட்டிருப்பதால்
(பிணைந்திருப்பதால்) சிதாபாசன் என்றும் அதுவே ஜீவாத்
மா என்றும் உணர்வால் மயங்கியதால் ஜீவன் என்றும்
சொல்ல வேண்டி இருக்கிறது!

4. இந்த உலகை உலகாகக் கண்டால் மயக்கம் பயம்
சந்தேகம் இல்லை. அதாவது நாமரூபமாக கண்டால் சந்தேகமோ
கலக்கமோ பயமோ தோன்றாது குணநிசயங்களாக கண்டால்
தான் சந்தேகம் கலக்கம் பயம் முதலியன தோன்றும்!

5. ரூபத்தை வைத்துக்கொண்டு இது இதிலிருந்து
தான் வந்தது, இது இதற்கன்னியமில்லை என உணர்வு
பூர்வமுடன் உணர்ந்தால் அங்கு சந்தேகம், கலக்கம்,
பயம் முதலிய விபரீத எண்ணம் தோன்றாது!

6. நாமரூபத்தில் மனம் மலினப்படவில்லை. அதை
குண சம்பந்தமாக பிரித்து பிரித்து காண்பதால் தான்
மனம் மலினப்பட்டு அதாவது துவைத பான்மையே தோன்றி
பயம் கலக்கம் சந்தேகம் உண்டாகிறது!

7. சிருஷ்டியில் பேதம் இல்லை திருஷ்டியில் தான்
பேதமே உண்டாகிறது. அதாவது மண்ணுக்கன்னியம் இல்லை
என உறுதியுடன் உணர்ந்தால் அங்கு சிருஷ்டியில் தான்
பேதமேது? திருஷ்டியில் தான் பேதமேது? அங்கு குணதோஷம்
எப்படி ஏற்பட முடியும்?



உ

8. இயற்கையே அதனதன் கர்மாவை ஒழுங்காகச் செய்கிறதென்று உணர்ந்தால் அங்கு ஸத்கர்மா, அஸத்கர்மா என பேதம் எப்படி உண்டாகும்? இது ஏன்? எப்படி வந்தது? என கேள்வி எழும்பினால் தானே பேதமும் அதனால் களங்கமும் அதனால் கலக்கமும் பயமும் ஏற்படும்!!

9. இயற்கையின் கர்மாவை நான் செய்கிறேன் என்றும், என்னால் முடியும் என்றும், என்னுடையது என்றும் பாவனை பண்ணியதால் இந்த ஜீவன் மீட்சி இல்லாமல் தவிக்கிறான். இயற்கையையும் நாமாக பாவனை பண்ணி அனைத்தும் நாமே என்றும் அனைத்தும் நம்முடையதே என்றும் பாவனையை மாற்றினால் இந்த ஜீவனுக்கு பந்தமும் இல்லை, மோட்சமும் இல்லை தாம் தாமாக (ஆத்மாவாக) இருப்பான்.

10. சிறைப்பறவை போல் இந்த கூட்டுக்குள் (தாவத்துள்) நான் எனது எனப் பந்தப்பட்டதனால் இந்த ஜீவனாகிய ஆத்மா கூடஸ்தபிரம்மம் என ஆகிறான். நாம் நமது என அனைத்தையும் ஒன்றாக்கி பந்த நிவர்த்தி செய்து கொண்டால் இவன் சுதந்திர பறவையே!

11. நான் எனது என்று, அழியும் தாவத்தை காட்டி கர்மாவை பெருக்கிக் கொள்வதை விட, நாம் நம்முடையதே என இயற்கையையும் இணைத்துக் கொள்வதனால் ஜீவப்பிணைப்பும் நீங்கிவிடுகிறது, அதனால் இயற்கையோடு ஒன்றி அதன் மூலமாகிய அந்த ஒன்றுடன் இணைய முடிகிறது!

12. புண்ணிய பாப சம்பந்தமான உடலாக இருந்தாலும் நாம் நமது என்று இயற்கையையும் இணைத்துக் கொள்வதனால் பிராரப்தமான உடல் இருக்கும் கர்மாவை மட்டும் அனுபவித்து முடித்து விடும்! மேலும் கர்மாவை ஏற்க இடம் இல்லை! ஆகையினால் மறுபிறவியும் இல்லை!



உ

13. இயற்கையை செயற்கை ஆக்கியது குற்றம் தான்; இருந்தாலும், அந்த செயற்கையின் நாம ரூப குணத்துடன் மயங்குவது தான், கடுமையான குற்றம்; அந்த மயக்கத்தாலேயே கர்மா பின்னிக் கொள்கிறது! ஈரவஸ்திரத்தில் தூசி வேகமாக படிவது போல் நான் எனது என்ற ஆசைவசப்பட்ட மோஹத்தால் கர்மா அதி வேகமாக ஒட்டிக் கொள்கிறது.

14. நீ உண்மையை கற்பனையால் செயற்கை ஆக்கிய உலகை, உன் ஞானேந்திரிய ஐந்தினாலும் தீண்டும் போது அதிஜாக்ரதையாக அதன் மூலமாகிய இயற்கையாக உணர், அங்கு வேகம் மோஹம் குறையும்.

15. இயற்கை ஈசன் சிருஷ்டியாகவும், செயற்கை ஜீவன் சிருஷ்டியாகவும் இருப்பதால் ஈசன் சிருஷ்டியில் மோஹம் இல்லை, ஜீவன் சிருஷ்டியில் தான் மோஹம் அதிகமாக இருக்கிறது. காரணம் நம் மனமே அதை உண்டு பண்ணியதால் அதன் அனுபவ சுவையே, மோஹமாக மாறிவிடுகிறது.

16. மண்மய சிருஷ்டி மஹேசன் சிருஷ்டி என்றும், மனோமய சிருஷ்டி மனதின் சிருஷ்டியாகவும் இருப்பதால், மண்ணை மண்ணாகவே உறுதிசெய்யப் பழகிக் கொண்டால், மனதின் சிருஷ்டிக்கு வலிமை இராது.

17. "யத்பாவம் தத்பவதி" என்பது போல மலினப்பட்டு அதாவது ஆசைவசப்பட்டு கெட்டுப் போனதும் இந்த மனமே; எதையும் உயர்வாக கருதி உயர் நிலைப்பட்டு, ஆசையைக் கெடவைப்பதும் இந்த மனமே!

18. மனோவசத்தாலும் வினைவசத்தாலும் உலகம் என்ற இலந்தைமுள் செடியில் இந்த மனமாகிய மெல்லிய வஸ்திரம் விழுந்து மாட்டிக் கொண்டது, ஆனாலும் கவலை பயம் சந்தேகம் இல்லாமல், வெகு நிதானமாக இந்த மனதை பிரித்தெடுத்தால் வஸ்திரம் (மனம்) சேதம் இல்லாமல் எடுத்து விடலாம்.



உ

19. நான் எனது என்ற பந்தத்தால் எப்படி மாட்டிக் கொண்டாயோ, அதேபோல் நாம் நமது என்ற பண்மை எண்ணத்தால் பந்த நிவர்த்தி அவஸ்யம் கிடைக்கும், காரணம் இயற்கை அனைத்தையும் தம்மோடு இணைத்துக் கொண்டு செயற்கைக்கு இடம் இல்லாமல் செய்து விடும்!

20. இயற்கை மூலமாயையாகவும் செயற்கை மலின மாயையாகவும் இருப்பதால், இயற்கை செயற்கையை தம்முள் இழுத்துக் கொள்ள முடியும். அதாவது ஒட்டுதலோ விடுதலோ இந்த மனதிடம் தான் இருக்கிறது. இயற்கையிடமும் செயற்கையிடமும் இல்லவே இல்லை.

21. உலகத்திற்கோ அங்குள்ள உயிர்களுக்கோ பாடம் இல்லை, பாடம் அனைத்தும் மனதிற்கே. மனம் படைத்த தன்மையினால் மனிதனானான், அதனால் நீசன் ஆனான் இதே மனம் மறைந்தாகி விட்டால் மனிதன் மனிதனல்ல, அவன் ஈசன் ஆவான்.

22. மூலப்பிரகிருதி (சுத்தமாயை) இலிருந்து தோன்றிய தேவ பஞ்ச கர்த்தாக்கள். இதில் மூவருக்கே ஆக்கல், காத்தல், அழித்தலென முத்தொழிலாகும். இவர்கள் உண்டாக்கிய சுத்த மாயையின் தோற்றங்கள் இயற்கையாகும். இவைகள் எந்த உபாதையும் பண்ணுவதில்லை. மலின மாயையின் அம்சமாயையின் மனமே அவஸ்தைக்கு காரணமாகிறது!

23. சுத்தமாயை தோற்றம் (நாமரூபம்) மட்டுமே. அதை செயற்கையாக்கி, ஆசையையும் அந்த ஆசையின் குணங்களையும் உண்டுபண்ணியது, இந்த மலின மாயையான மனமே. ஆசையை மட்டும் அதாவது குணங்களை மட்டும் நிறுத்தினால் இயற்கை இயற்கையாகவே இருந்து விடும். அங்கு மனதிற்கு அசைக்கும் வேலை இல்லாமல் போய் விடும்!

24. திரிகர்த்தாக்களாகிய இம் மூவரும் செயலற்று சிவமே என இருக்கிறார்கள். அவர்கள் நிழலாகிய மாயை மும்பெரும் சக்திகளாகி ஆக்கல், காத்தல், அழித்தல் என மும்பெரும் வேலைகளையும் தாம் செய்துவிட்டு, அதன் பழியை அந்த திரிகர்த்தாக்களிடம் போட்டுவிடுகின்றனர்.



உ

௨௫. அந்த இல்லாத மாயைக்கு இருப்புத் தன்மை கொடுத்தது இந்த மனமே! சுத்த மாயையின் பிரதிபிம்பமே, இந்த அசுத்த (மலின) மாயையின் மனமாகும். இந்த மனம் செயலற்று விட்டால் மலின மாயையும் இல்லை; இந்த மனத்தை அசைக்கும் குணங்களும் இல்லாமல் போய்விடும்.

௨௬. காட்சிகளிலோ, நிகழ்ச்சிகளிலோ, ஓசைகளிலோ இந்த மனம் விகாரம் அடையாமல் இருந்தால், அவஸ்யம் விவகாரம் (பிரச்சனை) இராது! விவகாரம் இல்லையானால் குணங்கள் கட்டுப்பட்டு இல்லா தொழியும். அதற்கு ஒரே வழி ஏன், எதற்கு எப்படி என வினா எழுப்பாமல் இருப்பதே வழியாகும்!

௨௭. அப்படி வினா எழுப்பாமல் இருப்பதற்கு ஒரே வழி, இவ்வுலகம் ஓர் ஜடம், ஓர் கூடம், ஓர் அவித்தை, இங்கு நடைபெறும் அனைத்தும் அவித்தைக்கும் மாயைக்கும் நடைபெறும் ஓர் வேடிக்கையான விளையாட்டு என நாம் அடங்கி (அடக்கக்கூடாது) இருந்து அமைதி காத்தலே வழியாகும்.

௨௮. அப்படி வினா எழுப்பாமல் இருப்பதற்கு மற்றொரு வழி, அனைத்தும் விகிதாச்சாரப்படி பாரபக்ஷ தோஷம் இல்லாமல், ஒழுங்காக நடைபெறுகிறது என்று மனதை சாந்தி செய்து அமைதி காத்தலே வழியாகும்.

௨௯. அனைத்து ஜீவ கோடிகளிலும் பரமாத்மாவே நிறைந்திருக்கிறது. அதற்கன்னியம் இல்லவே இல்லை என உன் மெய்யறிவால் உணர்ந்து, எங்கும் பேதம் காணாமல், விகாரமாக எண்ணாமல், விபரீதமாக உரையாமல், விவகாரம் (பிரச்சனை) பண்ணாமல் இருந்தால், மனம் அடங்கி, அடங்கி முழுமையான சாந்தி நிலையில் நின்று ஆத்மானுபூதி பெறுவோம்!



உ

30. இவ்வுலகில் படித்தவன் படிக்காதவன், உயர்ந்தவன் தாழ்ந்தவன், பிராமணன் சூத்திரன் என்ற பிரிவு இல்லவே இல்லை. உன் புத்தியின் கற்பனையால் அப்படி தோன்றுகிறது. உணர்ந்து அறிவு சொரூபத்தில் நின்று அனைவரையும் பரமாத்மாவே என உணர்வாயாக!

31. நாமரூபத்தை கண்டால் பேதம் தெரியும்; அக உணர்வாக உள் நோக்கி உணர்ந்தால் நாமரூபம் மறையும். அந்த அக உணர்வினால் ஆனந்தம் ஒன்றே தோன்றும். அந்த ஆனந்தம் நிலை பெற்று நிற்பதற்கு, அளவற்ற பொறுமை வேண்டும். உன் நம்பிக்கையே உன் நண்பன்.

32. அந்த சித்சொரூபமே சிறிது அசைந்தமாத்திரத்தில் சித்தமானது, (கற்பனையானது) அதுவே ஜகமானது. அதுவே தீமை செய்யக்கூடிய அஹங்காரமானது, ஆகவே காணும் பொருளாக இராதே; காண்பவனாக இரு; காட்சி மறையும், அவஸ்யம் நீ அவனாவாய்.

33. இந்த வஞ்சமனதின் செயலே செயலாகும். தூலத்தால் செய்வது செயல் (கர்மா) ஆகாது. இந்த மனமே புண்ணிய பாப வினைகளை கற்பனையாகக் கொண்டு அதை செய்யும் ஒரு வேலையாளாக சரீரத்தை பயன்படுத்திக் கொள்கிறது.

34. மனமயக்கத்தினால் இந்த ஜகம் தோன்றுகிறதே தவிர உண்மையில் மனமும் இல்லை. அது இயங்கும் உலகமும் இல்லை, சிப்பியில் வெள்ளி வந்ததும் இல்லை, அது மறைந்ததும் இல்லை, ஆனால் வந்ததே என்றால், உன் மனமே மருட்சியினால் வந்தது மனம் தெளிவடைந்தவுடன் அது இல்லவே இல்லை.

35. கண் காண்கிறது ஆனால் பேசுவதில்லை; காது கேட்கிறது ஆனால் பேசுவதில்லை; மூக்கு நுகர்கிறது ஆனால் பேசுவதில்லை; தூலமோ குறியோ ஸ்பரிசிக்கிறது ஆனால் பேசுவதில்லை ஆனால் இந்த நான்கிற்கும் விளக்கம் கொடுத்து விமர்சிப்பது வாக்கு ஒன்றே. ஆகவே இந்த வாக்கும் மௌனமானால் இந்த ஜகம் தோன்றாது. இருக்கும் பிரயோஜனமற்றிருக்கும்!



உ

௩௬. இந்த மனோஜயம் உனக்கு உண்டாகி அந்த பரமாத்ம நிலை பெறும் பரியந்தம், மேலே சொன்ன நான்கினையும் புருஷார்த்தனம் இல்லாமல், அக உணர்வாக த்வம்பதத்தையும் இறைவனே என உறுதிபண்ணி, உன் பாவத்தை ஒரு பதுமையாக்கக் கற்றுக் கொண்டால் ஜகம் தோன்றாது!

௩௭. உடல் உலகமாவன நெடுங்காலமாக பழகியதே துர்வாஸனை; அக உணர்வாக நடப்பதைத்தும் அவன் செயல் என சர்வார்ப்பணமாக விடுவது நற்கிரிய வாஸனை. இந்த நற்கிரிய வாஸனையை கொஞ்சம் கொஞ்சமாக ஏற்று பழைய பழக்க துர்வாஸனையை கெடுப்பாயாக.

௩௮. அந்த துர்வாஸனையின் காரணமாக மனம் விரிந்தால் அதுவே ஜகத்தாகவும், உயிரினங்களாகவும் தோன்றும். நற்கிரிய வாஸனையால் மனம் ஒடுங்கி ஒடுங்கி அழிந்து மறைந்தால் எங்கு நோக்கினும் பரமாத்மாவை உணரலாம்.

௩௯. இந்த அக உணர்வாகிய நற்கிரிய வாஸனை மேலும் மேலும் பெருகும்போது, உள்ளத்தில் ஆனந்தம் தோன்றி திருப்தி உண்டாகி ஆத்மஸாந்நித்யம் மனோ மௌனமும் உண்டாகும்!

௪௦. இப்படி செய்வது மனிதருக்கு ஒன்றும் கஷ்டமான காரியம் இல்லவே இல்லை. எண்ணத்தால் ஆனமனதை எண்ணத்தை வைத்தே சரி செய்யலாமே; வேறு எந்த ஸாதனையும் வேண்டியதில்லை. காரணம் துர்வாஸனையை பற்றிய மனம் அதை விட சற்று சிரமம் தான் ஆனால் இடைநாளில் பழகிவிட்டால் அந்த மனம் தாழ்ச்சிக்கு வரவே வராது!

௪௧. இவ்வுலகில் நீ கற்க வேண்டிய கல்வி இவ்வாத்மபோதம் ஒன்றே மற்றவும் அனைத்தும் பட்டம், பதவி, டம்பம், கௌரவம், என மேலே மேலே சென்று அறுந்து போய் அழிந்து போகும். இந்த ஆத்மபோதம் ஒன்று மட்டும் உனக்குள் அமர்ந்து உன்னை ஒளியுறக் காட்டும்.



உ

42. உடல் உலக நாமரூப பொருள்கள் தூலமாக தோன்றுவதால் மனம் அதைவிடமறுக்கிறது. அது இருப்பதைப் போலும், அதன் அசைவுகள் இன்பம் கொடுப்பதைப் போலும் தோன்றுவதால், அதன் சுவை அனுபவத்தை இந்த மனம் மறக்கிறதில்லை. அந்த சுவை அநுபவம் மாறி மாறி நினைப்பதால் உடலி உலகை மறக்க முடிகிறதில்லை.

43. ஆனால் ஆத்மானுபவத்தை ஆரம்ப நிலையில் தெய்வானுபவமாக, அனைத்தும் இறைவனுடையதே, அனைத்தும் இறைவனே என மாறிமாறி உணர்வூட்டி வந்தால் அவசியம் உடல் உலக நினைப்பிலிருந்து மீளலாம்.

44. நீ பாவங்களுக்கெல்லாம் கொடும் பாவம் பண்ணி இருந்தாலும் கவலை, பயம், சந்தேகம், வேண்டாம். அது உடம்பே தவிர நீ இல்லை, அது இருக்கும் உலகமும் உனதல்ல, என உறுதியுடன் இருந்தால், அவசியம் உணர்ந்து பக்தியும், அநுபவ ஞானமும் அவசியம் பெறுவாய்.

45. சிப்பியின் வெளிமயக்கம் வெள்ளியென நம்மை மயக்குகிறது, ஆனால் உண்மை அது அல்ல, இது கவனக் குறைவால் தோன்றும் தோற்றமாகும்; அதைபோலவே உலக தோற்றம், மாற்றம், மறைவு அனைத்தும் வெளிமயக்கமே என உணர்வாயாக. அதாவது அதை இயற்கையாக நீ பார்க்கபழகி விட்டால், செயற்கையின் வாசனை போய்விடும்.

46. இயற்கையே இறைசொரூபம், காரணம் ஒரு ஜீவனுடைய புண்ணிய பாப வினைகளை சரிபார்த்து ஒருபிடி கூட தவறாமல் இயற்கை அவனுக்கு உரிய பலனைக் கொடுத்துவிடுகிறது. அது இன்பதுன்பமாக மிளிர்கிறது. அதைஅப்படியே ஏற்றுக்கொள்ளத்தான் முடியுமே தவிர அதைவிலக்கவோ மாற்றவோ முடியாது.

47. ஒருவன் இயற்கையே இறைசொரூபம் என்றுணர்ந்து அதை மீறாமல் அடங்கிநடந்தால் நலம் அடைகிறான். ஒருவன் இயற்கையாகிய இறைசொரூபத்தை மீறி ஏதேனும் பரிகாரம் தேடினால் அதைவிட கேடும் அவஸ்தைக்குள்ளாவான்.



2

48. த்வம்பத லட்சியார்த்தம் என்பது கூடஸ்த பிரம்மம் எனச் சொன்னோம். அதை ஒரு நிலையில் முட்டாள்தனம் எனவும் சொல்லலாம், காரணம் ஆமை என்ற முட்டைக்குள்ளேயே சுற்றி சுற்றி வருகிறோமே தவிர அதை உடைத்து வெளியே வர இயலவில்லை என சொல்வதை விட வழிகாட்டிகள் சரியில்லை எனச் சொல்லலாம்.

49. ஆமையின் வெளியில் தானே இருக்கிறோம் எனக் கொள்ள வேண்டாம். ஆமையின் தூர்வாஸனை (சொந்த பந்த பாச உறவு) களுக்குள்ளேயே தான் இருக்கிறோம். அவைகளை உடைத்து சிதறடித்து வந்தாலல்லவோ நீ முட்டாளாக இருக்கமாட்டாய்!

50. இந்த சொந்த பந்தம் எப்படி வந்தது என சற்றுக் கவனித்தால் எனது என சொந்தம் கொண்டாடினாய்; அது பந்தமாக வந்தது; அந்த பந்தத்தில் விழுந்து நீ அதை எண்ணி எண்ணி பார்த்தாய் அது பாசவலையாக முடிந்தது.

51. இந்த பாசவலையிலிருந்து மீள்வதற்கு அரும்பாடு படுகிறாய், எப்படியென்றால் எண்ணங்களை கோடானு கோடி விரிக்கிறாய். அது உன்னை மேலும் மேலும் ஆழ்த்தி முடிவில் மரணவலை வரை கொண்டு போய்விடுகிறது. ஒரே வழி எண்ணங்களை குறை வார்த்தைகளை குறை நடந்ததை மறந்து பழகு பாசவலை அறுந்து பரவெளி தோன்றும்.

52. "எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாகச் செய்ததினி போதும் பராபரமே" எனக் கற்பனையை குறை, எண்ணத்தை குறை, எழுச்சியை குறை, வேகத்தை குறை, அவசரத்தை விடு, ஆவேசத்தை விடு அதிவிவேகமாக நடந்து கொள்.

53. அதிவிவேகம் என்றால் பொறுமை; பொறுமையின் லட்சணம் குற்றம் குறை காணாதிருத்தல் அப்படி கண்டாலும் அதை பாராட்டாமல் ஏதோ ஒரு நிலையில் கணக்கு முடிகிறது என அமைதி காத்தலும் அதை மறத்தலும், மன்னித்தலும், விட்டுக்கொடுக்கப் பழகுதலும் தான் அதிவிவேகம்.



உ

54. உன் வாக்கே உனக்கு துக்கமாகவும் நரகமாகவும் முடிவதால், கடுமையான வரை கடும், சுடும், பழி பாவமான வார்த்தை பேசாதே. கடுமையான வரை மிதமான, இதமான, அமிர்தமான, வார்த்தை பேசப் பழகு. அது உனக்கு நலத்தையும் மோட்சத்தையும் கொடுக்கும்!

55. உன் வாக்கை வைத்தே அனைத்து காரியங்களும் வெளிப்படுவதால் வார்த்தையில் அதிக கவனம் வேண்டும். லௌகீகத்திற்கும் வாக்கே; தெய்வீகத்திற்கும் வாக்கே. பாரமார்த்திகத்தில் உன் வாக்கு மௌனமாகிவிடும். ஆகவே மேலே சொன்ன இரண்டையும் கவனமாக பயன்படுத்தி மேலான பாரமார்த்திகம் செய்வாயாக!

56. நீ பந்தப்பட்ட ஜீவனும் அல்ல, நீ போகிக்கும் இந்த உலகமும் உனதல்ல. உலகமும் உடைமையும் எனதே என்று எண்ணியதால் உனக்கு பந்தம் உண்டானது. நான் ஜீவன் என எண்ணியதால் உனக்கு பிறவி உண்டானது. இவ்வுலகம் ஈசனுடையது உன்னுடையதல்ல நீ ஈசனுடையவன். அவன் நீ ஆக முடியாது; நீ அவனாகலாம்.

57. தகப்பன் சொத்து மகனுக்குரியதே இதற்கு விளக்கம் தேவையில்லை. நீ அவனுடைய பொருளாக வைத்து விளையாடு எனது என சொந்தம் கொண்டாடாதே. நீ அவனுடைய மகனாக இருந்தாலும் எனது என நீ சொந்தம் கொண்டாடினால் விளையாட்டு மோகத்திற்காக அடிக்கடி பிறந்தே ஆக வேண்டும்.

58. நீ இவ்வுலகை அவனுடைய தாசபாவனை செய்து விளையாடினால், சொந்தமும், பந்தமும், வராத்தன்மையினால் ஈசன் உலகை உனக்கு கொடுக்க இயலாது. நீயும் சுதந்திரமாக விளையாடிவிட்டு பின் அவனிடமே இவ்வுலகை விட்டுவிட்டு நீ சுதந்திர புருஷனாகவே போய்விடலாம்.

59. நீ இவ்வுலகை உனதாக பாவனை பண்ணினால் மேலதிகாரியாகிய ஈசன் உன்னிடம் பாசத்திற்கும் பந்தத்திற்கும் உரிய கேள்வி கேட்டு உன்னை இங்கேயே சிக்க வைத்து விடுவான். நீ உனதாக பாவனை பண்ணாமல் அவனுடைய தாசபாவனை பண்ணினால் உன்னிடம் சொந்த பந்த பாச கேள்வி கேட்க ஈசனிடம் வகையில்லாத்தன்மையினால், நீ மேலே சென்றுவிடலாம்.



உ

60. நீ ஜீவனல்ல ஈசனே. உலகையும் உடலையும் நான் என்னுடையது என்ற பாவனையை விட்ட மறுகணம் நீ ஈசனே. அதாவது நான், எனது என்பதை விடு. நீ உன்னுடையது என மாற்று. அல்லது ஈசனையும் உன்னுடன் இணைத்து நாம், நம்முடையது என மாற்று, அவனும் உன் "உடையாழியே" (உடையாழி = உன்னுடையவன் அதாவது உலக உடல் இன்பதுன்பத்திலும் லாப நஷ்டத்திலும் அவன் உன் பங்காளியே) இதை பணிந்து கேட்டுக் கொள்ள வேண்டும்!

61. ஈசன் கயிற்றின் சர்ப்பத்தைப் போல தம் மாயையால் இச்ஜகத்தை உண்டு பண்ணினான். நீ உன் மனதால் கானல் ஜலம் என மதித்து தாகசாந்தி செய்ய ஓடி ஓடி தேடி தேடி அலைகிறாய். நீ ஓடுவதாலும், தேடுவதாலும், தாகம் தான் அதிகரிக்குமே அன்றி தாக சாந்தி செய்ய முடியாது. மயக்குவது உன் வேலை என்னும் அதில் மயங்குவதும் ஆசை. ஆகவே எல்லாம் உனதே என்றோ அல்லது எல்லாம் நமதே என்றோ நீ மாறிவிட்டால் "நீ அவனே அவனே நீ."

62. உனதே என்றோ நமதே என்றோ எப்படி ஆகுமென்றால் மறக்கப் பழகு, மன்னிக்கப் பழகு, விட்டுக் கொடுக்கப் பழகு எதையும் ஏற்றுக்கொள்ளப் பழகு, எதிலும், எந்நிலையிலும், எக்காலத்தும் விகாரம் வேண்டாம், அங்கு விவகாரம் (பிரச்சனை) அவசியம் வராது. பின் அங்கு அனைத்தும் அவனுடையதாகவும், அவன் செயலாகவும், அவனையும் தாமே மாறும் அங்கு "நீ அவனே அவனே நீ."

63. உலகநிலையில் எக்காலத்திலும், எந்நிலையிலும், எந்த விஷயமும் மோகம் கொள்ளாதே, வெகுளாதே, சந்தேகியாதே, அஹம் கொள்ளாதே, குரோதம் கொள்ளாதே, பாசம் பற்று கொள்ளாதே, அன்பாகப் பார், அரவணைப்பாக இரு, ஒன்றுபடுத்திப் பார், கனிவாகப் பார், அமைதியாகப் பார், ஆனந்தமாகப் பார் அங்கு "நீ அவனே, அவனே நீ"

64. இவை அனைத்திற்கும் முதல் சாதனை யாவது **வாக்கை அடக்கு! பார்வையின் மோக வேகத்தை அடக்கு! கேட்கும் ஒலியின் அர்த்தத்தை மாற்றிப் பழகு!** எல்லாம் அவன் செயலே என்றும், அவனன்றி அணுவும் அசையாது என்றும் நீ உன் மனம் அசையாமல் இருக்கப் பழகினால் அங்கு "நீ அவனே அவனே நீ". இந்த 64ம் த்வம்பத லட்சியார்த்த விளக்கங்களையும் உணர்வாக உணரவும்.



உ

ஓம் ஆத்ம ஸ்வரூபங்களே!

இதுவரையில் 64 விதமாக த்வம்பத லட்சியார்த்த விளக்கங்களுக்கு விபரமாக பொருள் கொடுத்தோம். குறிப்பாக கலைகள் 16 ஆகும். ஒவ்வொரு கலையும் பிரிவில் நான்காகப் பிரிக்கப் படும் ஆக இந்த பதினாறு கலையும் நான்கால் பெருக்கினால் 16X4 = 64 அறுபத்தி நான்கு கலைகளாகச் சொல்வர் நம் முன்னோர். ஆகவே இந்த அத்யாயத்தில் த்வம் பத லட்சியார்த்த நிமித்தம் அறுபத்தி நான்காக விளக்கி விபரம் தந்தோம். இவை அனைத்தும் அறுபத்தி நான்கு தத்வங்களாகும்; இனி

## 2. **தத்பத லட்சியம்** விபரம்!

ஓம் ஆத்ம ஸ்வரூபங்களே!

1. அதுவே நீ, நீயே அது என அருக என ஆசி கூறுகிறோம். **அதுவே நீ** என்றால் இதற்கு முன் சொன்ன 64 தத்வங்களையும் நீ உனதாக ஆக்கி கடைப்பிடிக்கும் போது நீயே ஈசனாகிய பரமாத்மா ஆகிவிடுகிறாய். நீ பரமாத்மா ஆன "**ஸ்ரீ கிருஷ்ணன்**" "**அகிலபதமாகிய பரம்பொருளாகவே**" ஆகிவிடுகிறாய்.

2. காலாதீத அந்த ஒன்றுக்கு "எந்த இருப்புத்தன்மையும்" இல்லவே இல்லை. தமக்கோர் இருப்புத்தன்மையை உண்டு பண்ணுவதற்காக "**ஆதிசிவம்**" என்று தம்மை தானே (இங்கு மற்றொன்று இல்லவே இல்லை.) வகுத்துக் கொண்டது. இதை பின்பு நம் முன்னோர்கள் "**சதாசிவம்**" என அழைத்தனர் காரணம், இது என்றும், எக்காலத்தும், எந்நிலையிலும், எவ்விடத்தும் மாறாத, மறையாத, குறையாத, ஒரே இயல்புடையதாய் இருந்தது.



உ

3. இதற்கு சதாசிவம் என நாமகரணம் வைக்கக் காரணம் சர்வசதாவும், எங்கும், நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண தன்மை பெற்றதால் இதற்கு அந்த நாமம் பொருந்தியது என சித்தர்கள் சொல்வார்கள். இது வாக்கின் விளக்கத்திற்கே தவிர இது ஒரு வஸ்துவோ ரூபநாமமோ இல்லவே இல்லை.

4. இது வாக்குக்கு வந்தால் ஆக்கத்திற்கும் வந்தாக வேண்டுமே! ஆகையினால் இது தம்மைத் தானே "**மகேசன்**" எனவும் ஆக்கிக் கொண்டது. இவ்விரண்டிற்கும் ஆக்கம் என்னவென்றால், மகேசனுக்கு மறைத்தல் என்றும் சதாசிவத்திற்கு அருளல் என்றும் ஆக்கம் என்ற கிரிகையை மேற்கொண்டன.

5. வாக்கியார்த்தத்திற்காக இவ்விரண்டின் நிழல் (மாயை) எனச் சொல்லலாம். அதுவே "**மூலப்பிரகிருதி**" அதாவது அவ்யக்தம், அதாவது மூலமாயை, அதாவது சுத்தமாயை என உண்டாயிற்று என சித்தர்கள் சொல்வார்கள்.

6. அந்த சதாசிவத்திடமும் மகேசனிடமும் இருந்து **அதன் அம்சமாக** முறையாக **விஷ்ணு, பிரம்மா, சிவன்**, என திரிகர்த்தாக்களும் தோன்றினார்கள். இம்மூவரும் மூலமாயையின் அம்சமல்ல. சதாசிவம், மகேசனின் அம்சமாகும்!

7. இந்த திரிகர்த்தாக்களின் நிழலே (மாயையே) முறையே அலைமகள், கலைமகள், மலைமகளாகும். இம்மூவரும் மலின மாயையின் அம்சமாகவும் சொல்லலாம். மூலமாயையை சுத்தமாயை என்றும் இவை மூன்றையும் மலினமாயை என்றும் சொல்லலாம். காரணம் சுத்தமாயை உபாதை (அசைவு) இல்லாதது, ஆனால் மலினமாயை உபாதை (ஆசை) யோடு கூடியதாகும்!



உ

8. இந்த திரிகர்த்தாக்களையும் ஒன்றாக இணைக்கும்போது அது ஒரே வாக்கியத்தில் "**பரமாத்மா**" என அழைக்கலாம் அல்லது "**ஈசன்**" எனவும் சொல்லலாம். சிவன் வேறு, ஈசன் வேறு. சிவன் திரிகர்த்தாக்களில் ஒருவன்; ஆனால் ஈசனும் பரமாத்மாவும் ஒன்றே. அனைத்து ஜீவகோடிகளையும் தம்முள் ஈர்ஷித்து அனைத்து ஒன்றாக்கக் கூடியது. இதை மேலே சொன்ன சதாசிவம் மஹேசனுக்கு ஒப்பிட்டுச் சொல்லலாம்.

1. சதாசிவம்:— சர்வ சதாவும் அசைவற்ற ஆசையற்ற சுத்த சிவமாகும்.
2. மஹேசன்:— அனைத்து அண்ட பிரம்மாண்டங்களுக்கும் அதாவது இந்த மஹத்துக்கெல்லாம் ஈசனவான்.
3. பரமாத்மா, ஈசன்:— அனைத்து ஜீவகோடிகளையும் எந்த பேதமும் இன்றி தம்மோடு ஈர்ஷித்து அரவணைத்துக் கொள்பவன்.

9. இதை வழி முறையாக வகுத்துச் சொல்வதென்றால் 1. காலாதீதமான அந்த ஒன்றே **பராபரம்**! 2. சதாசிவம், மஹேசன், பரமாத்மா, ஈசன் ஆகிய இந்த நான்கும் ஒன்றே! 3. விஷ்ணு, பிரம்மா, சிவன் ஆகிய இந்த மூன்றும் ஒன்றே! இப்போது இந்த திரிகர்த்தாக்களாகிய மூவரும் தம் அம்சமாக மனித இனமான ஒன்றை பிரித்தெடுத்தார்கள், மற்றும் நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன ஆகிய நான்கு இனங்களையும், கண்ணுக்கு தெரியாத கிருமி கீடகங்களையும் தம் அம்சமாக தோற்றுவித்தார்கள்.

10. அந்த நான்கு ஜீவர்களிலும், கிருமி கீடகங்களிலும், தாம் அந்தர்யாமியாக இருந்துகொண்டு புண்ணிய பாப வினைகளை வைத்துக் கொண்டு ஆட்டுவிக்கிறார்கள். ஆனால் அங்கு "மனம் இல்லை" வினைகளின் அசைவே மனதாகத் தோற்றுகிறது!



உ

11. அந்த நான்கு அம்ஸதாவரங்களையும், கிருமி கீடகங்களையும், வினைக்குத் தக்கபடி ஆட்டுவித்து அங்கு புண்ணியம் அதிகரிக்கும் போது மனித ஜன்மா கொடுக்கப்படுகிறது. அந்த மனித ஜன்மாவில் புண்ணியம் அதிகரிக்கும் போது புனிதமான மனித ஜன்மா கிடைக்கும்; அங்கு தர்மம் அதிகரிக்கும் போது ஸத்யமான ஞானம் சாத்தியமாகும். அதனால் பிறவா நிலையாகிய ஜீவன் முக்தி பெறலாம்.

தர்மம்:— இங்கு ஸத்யம் பேசினால் தர்மம் நிலை பெறும்; தர்மம் நிலைபெற்றால் ஸத்யமாகிய பிறவா நிலை பெறலாம். பொருள் பற்று வரவு அனைத்துமே புண்ணிய பாபங்களாகும் அது தர்மமாகாது. புண்ணியம் அதிகம் மேவிட்டாலும் தர்மத்துக்கு வழி வகுத்துக்கொள்ளும் கொடுத்து வாங்கல் அனைத்துமே புண்ணிய பாபமே! ஸத்யம் பேசி தர்மம் நிலைபெற்று அது அதீதமாகி "ஆத்மஞானம்" பெற்றால் தான் பிறவா நிலையாகிய "ஜீவன்முக்தி" பெற முடியும்.

மனிதஇனத்திற்கு ஒன்றே மனம் உண்டு. மற்றும் அனைத்து ஜீவ கோடிகளுக்கும் மனம் இல்லவே இல்லை. ஆதலால் அதனால் தன் புண்ணியபாப அசைவுகள் மனதாக தோற்றும். எண்ணமே, கற்பனையே, நல்லது கெட்டதை பிரித்தறிதலே "மனமாகும்."

12.
திரிகர்த்தாக்களும் தங்கள் அம்ஸதாவரத்தையும் கொடுத்து மாயையில் பிரதிபலித்த மனதையும் கொடுத்ததால் தான் மனிதன் ஒருவனே நன்மை தீமையை பிரித்தறிந்து ஜீவன் முக்தி நிலை பெறுகிறான்.

13 சதாசிவமும், மகேசனும் அந்த காலாதீத ஒன்றின் கிருபையினால் இரு ஸத்கைங்கர்யங்களை (அது தொழிலல்ல) ஏற்றுக்கொண்டார்கள். அதாவது மகேசனுக்கு "**மறைத்தல்**" என்றும் சதாசிவத்திற்கு "**அருளுதல்**" என்றும் ஆகும்.



"**மகேசன்**"

2

மறைத்தல்:- இது மேலப்பிரகிருதியாகிய சுத்தமாயையாக இருப்பதால், ஆத்மசாதனை செய்து வரும் ஓர் பக்குவ ஆன்மா கர்மா, பக்தி, வைராக்யம், ஞானம் இவைகளை முறைப்படி அனுஷ்டித்து வரும் போது தூலவிருத்தி என்றும் சாட்சி விருத்தி என்றும் அகண்டவிருத்தி என்று மூன்று நிலைகள் முறையாக அனுபவித்து அகண்ட விருத்தியைத் தாண்டி அகண்டைக ரஸம் என்னும் பிரம்மானந்த சமுத்திரத்தில் இரண்டற கலந்தால் அதுவே பிறவா நிலை, அதுவே ஜீவன் முக்தி, அதுவே பரப்பிரம்மானந்தம் ஆகும். இங்கு அகண்டாகார விருத்தியே மறைத்தலாகும். காரணம் இது ஓர் ஆனந்த நிலையே தவிர முடிந்த முடிவாகாது. காரணம் இங்கு தற்போதம் நிறைந்திருக்கும். அதாவது

"நாம் அதுவாக இருக்கிறோம்"

என்ற ஓர் எண்ண விருத்தி மட்டும் உண்டு. இந்த எண்ண விருத்தியே மறைத்தலாகும்.

"**சதாசிவம்**"

அருள்தல்:— மேலே சொன்ன சாதனை முறைப்படி ஒழுகும் ஓர் பக்குவ ஆன்மா மேலே சொன்ன அகண்டாகார விருத்தியில் ஓர் மறைப்பு ஏற்படும் போது அந்த ஆன்மாவின் சாதனையைக் கருதி அந்த ஒன்றுமறைப்பான "நாம் அதுவாக" இருக்கிறோம் என்ற தற்போத உணர்வையும் கெடுத்து, "தாம் தாமான அகண்டைகரசத்தில்" (அதாவது பிரம்மானந்த சமுத்திரத்தில்) கரைத்து தம்மோடு ஏற்றுக் கொள்ளுதலே அருள்தலாகும்! இந்த சதாசிவமானது நாம் அதுவாக இருக்கிறோம் என்ற தற்போதத்தை (மறைப்பான நிலையை) அகற்றி தம்மோடு கரைத்துக் கலத்தலாகும் "இதுவே அருள்தல்"



உ

14. ஓர் ஞான சாதனையாளன் விஷயானந்தத்தை
அதாவது லௌகீகத்தை விடுவதற்கே கடும் முயற்சியெடுக்கி
றான். ஆரம்பம் சிறிது கஷ்டம், முடிவு பேரானந்தம்; இந்த பேரான
ந்தத்தில் அவன் மூழ்கும் போது நாம ஜபம், நாம கீர்த்தனை,
ஹரிபஜனை, திவ்ய நாம அகண்டபஜனை இவைகளினால் இந்த
உடல், உலகம், உறவு இவைகளை மறக்கிறான். (இறக்கிறான்)

15 அந்த பேரானந்த பஜனை மூலமாக தம் கற்பனையை
உறுதியாக்கி இறைவனுக்கு ஓர் வடிவம் கொடுத்து அதை
**தம் மன உறுதியினால்; "மனக் கண்ணால்"**
ஆனந்தமாக தமக்கு முன் **"சூட்சும தூல வடிவம்"**
(தானே) கொடுத்து (தானே) காண்கிறான், பேசுகிறான், விளையாடுகிறான்;
சந்தேகம் தெளிதலும் நடைபெறுகிறது.

சூட்சும தூல வடிவம் :- காணத்துடிக்கும் பக்தனின்
தூலம் பஞ்சீகிர்தம் செய்யப்பட்ட ஓர் மாமிஸ பிண்ட தூலம்.
வந்து பக்தனுக்காக அவன் காணக்கூடிய வகையில் தம்
தோற்றத்தை ஆக்கிக் கொள்வதால், அது சூட்சுமமாக இருந்தாலும்
அவன் காணும் வகையில் அது தூலம் தற்காலிகமாக
தாங்கிக்கொள்கிறது. காரணம் இவன் **"மனஉறுதி"**, (அதுமாயா வடிவமே.)
**"அசைக்கமுடியாத நம்பிக்கை",**
**"பொய்மையை தள்ளும் வைராக்யம்",**
**"தம் கற்பனையில் "பயமற்ற" மனோபலம்",**
இவை நான்கும் அதன் கிருபை (அருள்) இல்லாமல் சாத்திய
மாகாது. (சிரமத்திற்கு மன்னிக்கவும்)
இங்குதான் துவம்பதமும் தற்பதமும் இணைகின்றன. இதனால் இந்த
பக்தன் பேரானந்தத்தின் எல்லைக்கே போய் விடுகிறான்
இங்கு உடல் உலக இன்ப துன்ப உறவு அறுந்து போய் விடுகிறது.
இங்கு உண்மையின் உணர்வான உறவு ஆரம்பமாகிறது.



உ

16 சந்தேகம் தெளிதலும் நடைபெறுகிறது:—

இந்த ஸ்ரீ பகவத் சொரூபம் நம் மனமே கற்பனையாக இருந்தாலும் மனதின் சிருஷ்டி மனதிற்கே ஓர் சுகம் தருகிறது. இது அந்த காலாதீத ஒன்றின் அதன் அம்சமே. நீயும் அதன் அம்சமே; ஆனால் நீ தூலவடிவம் தாங்கி இருக்கிறாய், அது மாயா வடிவம் தாங்கி இருக்கிறது. உங்கள் இருவரையும் இணைப்பது அந்த மனோமாயையின் அம்சமான "**மனமாகும்**"! மனமே மலினம்! மனமே மறந்து!! அந்த மனம் என்ற நாமமும், மறந்து என்ற நாமமும், அற்றுப் போய் விட்டால் இருப்பது அந்த காலாதீத ஒன்றே.

17. சூட்சுமமான மனம் தெளிந்த அறிவாக இருந்து ஒளியாக உணர்த்துகிறது; சூட்சுமமான ஓர் மனம் கலங்கிய புத்தியாக இருந்து அந்த ஒளியை உணர்ந்து தெளிவடைகிறது. அந்த கலக்கம் நாமரூப ஜகத்தைக் கண்டு, தோஷ குணமான கற்பனையை மேற்கொண்டதால் வந்ததாகும். நாமரூபத்தை அதன் மூலத்தில் ஒடுக்கி, குண தோஷம் நம் மனமே என தீர்க்கமான முடிவெடுத்தால் சந்தேகம் அடிபட்டுப் போகும். அதனால் கலக்கமும் பயமும் அற்றுப் போகும்.

18. இதை இன்னமும் சற்று விளக்குவது என்றால் வேதாந்த சாஸ்திரங்களோ, புராண இதிகாசங்களோ, உபநிஷத் மற்றும் ஞான நூல்களோ நாமரூபம் இல்லவே இல்லை "வரிவடிவமும் அதன் ஒலிவடிவமும்" கொண்டதாகும்.

இதை

தீர்க்கமான "**அறிவு**" விளக்க, கலக்கமான **புத்தி** கேட்க

(இது குரு சிஷ்யபாவனை)

இதனால் சந்தேகமும் அதனால் வந்த கலக்கமும் பயமும் தெளிவடைந்து புத்தி அறிவாகிவிடுகிறது அறிவு அது ஆகிவிடுகிறது. அது தாம் தாமாய் இருக்கிறது. இதுவே இறைவனுடன் பக்தன் உறையாடி தெளிவு பெறுவதாகும்!



2

19. மனதின் கற்பனா சொரூபமே ஜீவ வடிவம்.
மாயையின் இருப்புத் தன்மை அற்ற ஒலி ஸ்வரூபமே தெய்வ வடிவம்.
அதனாலேயே இது பேரின்பம் என்றும் பேரானந்தம் என்றும் சொல்லப்படுகிறது. அதாவது பெயரளவில் ஆனந்தம் என்றும் அதாவது நாமஸ்மரணையிலேயே ஆனந்தம் என்றும் சொல்லலாம். ஆகவே கற்பனா சொரூபமான ஜீவ வடிவத்தையும் நாமஸ்மரணையால் கொடுக்கப்பட்ட தெய்வ வடிவத்தையும் ஒருமையாக விட்டால் நாம் அது ஆக முடியும்.

20. உலகமாகிய அவித்யா சொரூபமும்,
பிண்ட வடிவமான குணசம்பந்தம் உள்ள ஜீவ சொரூபமும், என்று உன்னை விட்டு அகல்கிறதோ அந்த க்ஷணமே நீ இறைநிலையை அடைகிறாய். நீயே ஈசன் ஆகிறாய். அதாவது தூல விருத்தியை கற்பனை பண்ணாமல் சாட்சியாக மட்டுமே நீ இருக்கக் கற்றுக் கொண்டால் அடுத்து அதிதுரிதமாகவே நீ அகண்ட விருத்தி ஆக முடியும். சாட்சி விருத்தியில் பேரானந்தமும், அகண்ட விருத்தியில் பிரம்மானந்தமும் சாத்தியமாகும்.

21. அதாவது தெய்வ நிலைக்கு (சாட்சி விருத்திக்கு) செல்லும் போது கலக்கமும், ஓர் மயக்கமும், ஓர் சந்தேகமும் உண்டாகும். அதாவது தெய்வம் மகத் சக்தி நாம் அல்ப சக்தி என ஓர் பிரட்சினை எழும் இதை உறுதி கொள்

தெய்வம்:- சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார நிமித்தமாக **தொழில் அதிபராக** இருப்பதால் மகத்தான சக்தி தேவைதான்

பக்குவ ஆன்மா:- அதற்கு முக்தி ஒன்றே லட்சியம் ஆகவே இதற்கு அப்படிப்பட்ட சக்தி தேவையில்லை.

தெய்வம்:- 48 சதுர்யுகமும் இருந்தே தொழில் ஆற்ற வேண்டும் அதற்காக மகத்தான சக்திகள் அவஸ்யம் வேண்டும்.

பக்குவ ஆன்மா:- எதையும் தொடுவதற்கோ அதை வைத்து வேலை பார்ப்பதற்கோ, மனமும் இல்லை, வினையும் இல்லை; ஆகவே அந்த மகத்தான சக்திகள் தேவையில்லை.



தெய்வம்:— கர்த்தாவே, தவிர அங்கு முக்திக்கு மார்க்கம் இல்லை, ஆகவே மஹத்தான சக்தி தேவை.
பக்குவ ஆன்மா:— தம் சாதனை முதிர்ச்சியினால் அடுத்தவினாடியே முக்தி கிட்டி விடும், ஆகவே அந்த சக்தி தேவையில்லை.
தெய்வம்:— ஜீவர்களுக்காகவும், பக்தர்களுக்காக அவர்கள் க்ஷேம லாபத்திற்காகவும் காத்திருக்க வேண்டும்; ஆகவே அங்கு மஹத்தான சக்தி தேவை.
பக்குவ ஆன்மா:— இவன் யாருக்காகவும் காத்திருக்கப் போவதில்லை (ஞானி = ஸ்வயநலமி அதாவது தன் நாட்டத்திலேயே கவனமாக இருக்கப்பட்டவன்) ஆகவே இவனுக்கு அந்த சக்திகள் தேவை இல்லை.

“தெய்வத்திற்கு அபார சக்திகளே உறுதுணை!”
“பக்குவ ஆன்மாவிற்கு சக்திகளே ஆபத்து”!!
அபார அற்புத சக்தி இருந்தால் “**தெய்வம்!**”
அபார அற்புத சக்தி இல்லாதிருந்தால் “**ஞானி!**”

௨௨. **உலக மயக்கத்தையும், தெய்வ பயத்தையும், விட்டவனே ஞானி**

௨௩. மனமே மாயை, மனமே மஹத்து, மனமே ஐம்பூதம்; மனமே ஈஸ்வராதிகள்; மனமே அனைத்து ஜீவ கோடிகளும்; மனமே முப்பத்தி முக்கோடி தேவர்கள், மனமே நாற்பத்தெண்ணாயிரம் மஹரிஷிகள், மனமே கோடானு கோடி கோள்களும் நட்சத்திராதிகளும் “**மனமே அனைத்தும்**”

**ஆனால் மனமே இல்லை ஆகவே**
**இவை அனைத்தும் இல்லவே இல்லை !!**
**ஒன்றுண்டு சொல்வதற்கில்லை!!!**

“அதுவே நாம்; நாமே அது”



உ

## 24. முடிவான விண்ணப்பம்

ஓம் சாதனையின் மழலையே! அன்பாகவும், கனிவாகவும், பணிவாகவும் கூறுகிறோம். இதை உணர்ந்து நடப்பாயாக எப்போதும் சொல்வது தான் இருந்தாலும் முடிவுரையாகக் கூறுவதை **"நிலைக்குத்தக்கபடி"** ஏற்றுக் கொள்வாயாக.

1. எண்ணம், சொல், செயலால், இறைநாமாவோடு நன்மை செய்.
2. மறந்தும் கடும் சுடும் சொல் பேசாதே!
3. பிறர் அறிந்தோ அறியாமலோ அப்படி பேசினால் வெகுளாதே!
4. எக்காரியத்திலும் நிலை கண்டு விட்டுக்கொடு!
5. பரஸ்திரீ கமனம் கூடவே கூடாது!
6. ஆண் பெண் உடலின்பத்திலும் குறைத்து நிறுத்தப்பழகு!
7. பொறாமையும், பேராசையும் கொடிய விஷமாகும்!
8. கண்டதையும் கேட்டதையும் அப்படியே விமர்சிக்காதே!
9. பிறர் அதுபற்றி உன்னிடம் சொன்னாலும் நம்பாதே!
10. எது நடந்தாலும் அது இறைவன் செயலென்று நம்பு!
11. பணிவும் கனிவும் உன் இரு கண்களாகும்!
12. இனம் மதம் வெறி வேண்டாம்; ஓர்மை வேண்டும்!
13. உறவுமுறைகளை சிறுகச் சிறுக விட்டு விலகு!
14. கூடுமானவரை வழியில் தலை குனிந்து செல்க!
15. இறைகுருநாம உணர்வுடன் ஓர் முடிவெடு அது நலமாக இருக்கும்!
17. முடிவைக் கண்டு கலக்கமோ பயமோ வேண்டாம்! முடிவு அவனுக்கே!
18. அதன் அடிப்படையே முன் பின் நிகழ்ச்சிகளுக்கு அஸ்திவாரமாகும்.
19. நன்மையும் தீமையும் பிறர் வார்த்தையிலோ செயலிலோ இல்லை!
20. அது உன் மன எண்ணத்தையும் காணும் காட்சியையும் பொறுத்திருக்கும்.
21. எதையும் இறை உணர்வோடும் இறை நாமாவோடும் ஏற்றுக்கொள்!
22. அந்த இறைவன் படத்திலோ பொம்மையிலோ இல்லவே இல்லை!
23. அவன் உன்னுள் நீயாக, நீயே அவனாக இருக்கிறான்
24. எம்மை உணர்ந்தால் உன்னை உணர்வாய்; உன்னை உணர்ந்தால் அந்த ஒன்றை உணர்வாய்; அந்த ஒன்றை உணர்ந்தால்

அது நீ ஆவாய்; நீயே அது ஆவாய்!!!





ஓ அன்பின் மாணிக்கங்களே!

இவ்விதமாக உங்களுக்கு ௨௪ தத்வங்களைச் சொன்னோம். தத்வங்களும் ௨௪ நிதிமொழிகளும் ௨௪ ஆகும். தத்வார்த்தங்கள் (ஆறை) எனச் சொல்வதும் ௨௪ ஆகும். அவைகள்

1. பஞ்சபூதங்கள் 5
2. ஞானேந்திரியங்கள் 5
3. கர்மேந்திரியங்கள் 5
4. கோசங்கள் (இணைப்பு) 5
5. அந்தக்கரணங்கள் 4

ஆக = ௨௪

**1.** பஞ்சபூதங்கள் :- ஆகாயம், காற்று, அக்கினி, ஜலம், பிருதிவி! ஆகுந்தாகும். இதில் ஆகாயமும் காற்றும் சூட்சும பூதங்களாகும். அக்கினி, ஜலம், பிருதிவி தூலபூதங்களாகும். இதில் தெய்வங்களை இணைப்பது என்றால், ஆகாயமும் காற்றும் சதாசிவமும் மகேசனும். இவை சூட்சுமம். இதை மகேசனை துரியமாகவும், சதாசிவனை துரியாதீதமாகவும் சொல்வார்கள். நம் தூலம் பஞ்சீகர்த்தம் பண்ணப்பட்டதாகும். இதில் ஆகாயமும் காற்றும் அளவில் மிகமிக குறைவு. ஆனால் வலிமையில் (ஆற்றலில்) மிகமிக அதிகம். அக்கினியும், ஜலமும் பிருதிவியும் முறையே ருத்ரன் (சிவன்) என்றும், விஷ்ணு என்றும், பிரம்மா என்றும் வரிசைப்படுத்தி சொல்லலாம். நம் தூலத்தில் அக்கினி மிக அளவோடுதான் இருக்கமுடியும். இருக்கக் கூடும். ஜலமும் பிருதிவியும் பாதிக்குமேல் இருக்கும்; அளவிலும் அதிக கூடுதலானது. மேலே சொன்ன ஐந்து பூதங்களும் இணைந்தே தூலங்களாகும் அதாவது உடல்களாகும். உலகில் ௮௪ லட்சம் ஜீவகோடிகளும் இந்த இணைப்பால் தான் ஆனது. இதில் குறிப்பாக ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஜலமும் பிருதிவியுமே புண்ணிய பாபத்திற்கு ஆதாரமாக இருப்பவை. இவை இரண்டும் சுரோணிதம், சுக்கிலம் எனச் சொல்வோம். இவை இரண்டும் இணைந்தே ஒரு மாமிச (பிண்டமாகும்) உடலாகும். இவை இரண்டும் வர்ணத்தில் சிகப்பும் வெள்ளையும் உடையதாகும். இவைகளின் இயக்கமாவது

**சிகப்பு கர்மா ; வெள்ளை** அதன் **இயக்கம்!**



2 பிரம்மா

பிருதிவியாகிய மண்ணை வைத்து பிண்டம் தயாரிக்கத் துவங்குவார். அதற்கு உறுதுணையாக ஜலத்தை வைத்து விஷ்ணு சேர்ந்து உருவாவதற்கும், அழகையும், கவர்ச்சியையும், வசீகரத்தையும், பொலிவையும் உண்டாவதற்கு உறுதுணையாக இருப்பார். அவை விலகிப்போக வேண்டுமே, அதாவது இயங்கி கர்மா நிகழ்வதற்கும் மேலும் மேலும் கர்மா பெருகுவதற்கும் அக்னியோடு ருத்ரன் (சிவன்) உறுதுணையாக இருப்பார். எப்படி என்றால் அங்கு நான் என்றும் என்னுடையது என்றும் அஹங்கார அபிமானங்களால் உலகை புசிக்க வைத்து ஜீவர்களை வழி நடத்துகிறார்.

இவர்கள் மூவராலேயே சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் உலகில் ஒழுங்காக நடைபெறுகிறது. சிவனுக்கு சம்ஹாரம் என்று சொல்கிறோம் என்றால் புண்ணிய பாப கர்மாக்களை நானே எனைப் புசித்து உடலை அழிக்கிறார். மறுபிறவிக்கு அனுகூலமாக இருந்து அங்கும் அழிவுக்கு ஆதாரமாக இருக்கிறார். ஒரு பக்குவ ஆன்மா நிஷ்காமிய கர்மாவும் உணர்ந்த பக்தியும் ஆழ்ந்த அனுபவ ஞானமும் பெற்று பிறவா நிலை பெறும் சமயம் "அகண்டாகார விருத்தி" என்ற நிலையில் மகேசன் இருந்து கொண்டு தற்போதம் (நான் இருக்கிறேன்) என்ற நிலையில் ஒரு திரைமறைவாக இருக்கிறார். அந்நிலை பரம பக்குவ ஆன்மாவை சதாசிவம் அத்திரையையும் விலக்கி தம்மோடு அந்த பக்குவ ஆன்மாவையும் இணைத்து கலந்து அவ்விரண்டும் அந்த காலாதீத ஒன்று ஆகிவிடுகிறது!

"காற்று அசைவின் ஓர் மாற்றம்"!!

"ஆகாயம் அணுக்களின் கூட்டம்"!!

திரை போடுவதும், திரையை விலக்குவதும் காற்றின் சுபாவம். ஆனால் ஆகாயம் எந்த செயலும் அற்றது ஆனால் அதன் ஒரே செயல், ஆனால் அது செயலல்ல ஆனால் விளக்கத்திற்காக செயல் என சொன்னோம். ஆகாயத்தின் செயலாவது!

அந்த அணுக்களின் கூட்டம் இல்லையானால் இந்த உலகமோ உயிரினங்களின் அனைத்து வடிவங்களோ எந்த நாமரூப வடிவங்களும் இல்லவே இல்லை!! ஆனால் நாம் இருக்கிறோம் என்ற தற்போதம் ஒன்றே

**"ஆனந்தவடிவாக இருக்கும்"!!**



## அந்த ஆனந்தமும் நிலைத்த ஆனந்தம் அல்ல!!

இதுவே அசைக்கும் மகேசனின் திறமும், விலக்கும் சதாசிவத்தின் நியமும் ஆகும்

## “இதுவே காற்று ஆகாயம் என்பதாகும்.”

பஞ்சபூதங்களின் விளக்கம் இவ்வளவு தான் இனி ஞானேந்திரியங்கள் ஐந்தையும் சற்று விளக்குவோம்.

2. ஞானேந்திரியங்கள் :— கண்கள் 1. காதுகள் 2. நாசி 3 ருசி 4. ஸ்பரிசம் 5. (இந்த கலியில் மட்டும் ஸ்பரிசம் எனக் குறிப்பிடுவது ஆண் பெண் இன சேர்க்கையை தான் குறிப்பிடுகிறார்கள்) இவை ஐந்தும் ஞானேந்திரியங்கள் என மட்டும் தான் சொல்லப்படுகிறது. ஆனால் இயக்கம் கர்மாவுக்காகத் தான் செயலாற்றுகிறது.

## “இவை ஐந்தும் ஓட்டைகளே” (பொறிகள்).

இந்த ஐந்து ஓட்டைகளும் இயக்கமற்ற தேகம், ஜடமே (ஜன்னல்கள்) இந்த (ஓட்டைகள்) ஜன்னல்கள் மூலமாகவே மனம் என்னும் மாறா ரூபாவன் போக்குவரவு செய்து கொண்டு

சொந்த, பந்த, உறவு என்ற “பாச” வலையை விரிக்கிறான். இதுவே இந்த அறியாமையின் ஜீவனுக்கு மரண வாசலாகும். இந்த ஐந்து ஓட்டைகளின் வழியாக சென்று மரண வாசலுக்கு கொண்டு செல்லும் “**மனதை மாற்றக்க**” வேண்டும்.

உங்களால் மனதை மாற்றக்க முடியும் !

இந்த ஐந்து ஓட்டைகளின் காரியம் காண்பது, கேட்பது, நுகர்வது, ருசிப்பது (சுவைப்பது) ஸ்பரிசம் (தொடுவதாகும்).

அன்பின் குழந்தாய்!

சந்தேகம் வேண்டாம், கவலை வேண்டாம், பயம் வேண்டாம், எந்த சஞ்சலமும் வேண்டாம், முடியுமா என திகைக்க வேண்டாம், நமக்கிது ஆகுமா என மயங்க வேண்டாம்.

## “உன்னால் முடியும்”

முடியாததை இந்த வைத்தியம் புலம் பாது

## “எம் அனுபவ வழி இதுவாகும்” !!!

எம் அனுபவத்தை சற்று விளக்குகிறோம் உணர்க ! இதன்படி நீ நடந்தால் முதலில் அவனாவாய். பின் அது ஆவாய் ! இதுவே முன்பு சொல்லியவை தான் } அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்: எறும்பு ஊர கல்லும் தேயும்.



உ

மேலே சொன்ன ஐந்திலும் எந்த நிகழ்ச்சி உன் விதியின்படி நடந்தாலும் பரவாயில்லை

1. நான் செய்கிறேன், என்னால் முடியும். நானே முடித்தேன். இது என்னுடையது என்ற இந்த அஹங்கார அபிமானங்களை முதலில் விடு.

2. கண்களால் சில காட்சிகளை கண்டாலும் காதுகளால் எந்த வார்த்தைகளை கேட்டாலும் முதலில் வேகத்தையும், அவசரத்தையும் அகற்றப் பழகு!

3. அதன் விபரீதத்தையும், விநோதத்தையும், விகாரத்தையும், "**அப்படியே கற்பனை**" பண்ணாதே அதன் முன் விளைவின் நிகழ்ச்சிகளை சற்று நிதானமாக அதிக பொறுமையாக "இறை நம்பிக்கை"யுடன் கவனிப்பாயாக!

4. அங்கு அதன் உண்மை அவசியம் உனக்கு விளங்கும். அதனால் நீயும் நிதானம் இழக்கமாட்டாய், பதட்டமடைய மாட்டாய் எந்த தவறும் செய்யமாட்டாய். நீ அவசரப்பட்டால் புல்லில் சிதறிய தானியமும் எனவாகி விடுவாய்.

5. இது திட்டமிட்டு நடக்கும் ஓர் காரியமாக உணர்வாயாக. அங்கு இயற்கையாகிய இறைவன் செயலென்று உணர்வாய் அதனால் உன் கண்கள் காதுகள் ஓட்டைகள் அடைபடும்!

6. நாசியில் கிரஹிக்கும் நறுமணம், துர்வாசனை இவைகள் மனதின் குணங்களாக உணர்வாயாக. அதைப் போலவே உன் நாவு சுவைப்பதில் ருசி, அருசி இரண்டும் அந்த பொருளில் இல்லை இது இதற்கு உண்டு என உன் கற்பனையை உறுதிபடுத்துகிறாய், உன் "**மேன்மைய கற்பனையின்**" "**குணங்கள்**" அப்பொருட்கள் மேல் ஆரோகணித்தன! அவை உனக்கு மணத்தையும் சுவையையும் கொடுத்தன! அவை அப்பொருட்களில் இல்லவே இல்லை.

7. அனைத்தையும் இறைவனுக்கு அர்ப்பணம் பண்ணி இறைவன் "**அருள் பிரசாதமாக**" உண்ணும்போது மணமும், சுவையும் அப்படியே அமையும் அத்துடன் அப்பொருட்களின் "**குணதோஷங்கள்**" அவசியம் உன் மனதை பற்றாது. அங்கு ஆகாரத்தை மிதமாகவும் இதமாகவும் ஏற்க முடியும். அதனால் மேலே சொன்ன குணதோஷங்கள் உன் மனதிற்கு அடங்கும்.



உ

4. சரீரஸ்பரிசத்தில் "அதிக எச்சரிக்கையாக"வே இருக்கவேண்டும். காரணம் ஸ்ருஷ்டியின் (பிறப்பின்) ஆரம்பமே அங்குதான். பின் பிறந்தால் இறக்கவேண்டும். இறந்தால் பிறக்க வேண்டும்.

"ஆகவே இது கூடவே கூடாது" என யாம் சொல்லவில்லை

"அதிகம் வேண்டாம். மயங்க வேண்டாம்"!!

ஆனால் "பயம்" வேண்டாம்!

இறைஸ்மரணை ஒன்றே உங்களை ரட்சிக்கும்.

மேலே சொன்ன 4 வித விதிப்படி உங்கள் ஞானேந்திரியங்களை பயன்படுத்துங்கள் நலம் பெறுவீர், சுகம் பெறுவீர்!

**3. கர்மேந்திரியம் :-** இந்த கர்மேந்திரியம் ஐந்தாகும். அவை கைகால்கள் 2. மலஜலத்துவாரம் 2. பேசும் வாக்காகிய நாவு 1 ஆக ஐந்தாகும்! இவை காலத்தின் பிராரப்த கர்மாவை முடிப்பதற்காக அமைந்தவை. இவைகள் கருவிகளே தவிர காரணம் இல்லவே இல்லை.

இவைகள் வந்த காரியத்தை மட்டும் முடிக்க வந்தவை. ஆனால் வஞ்சமாயா மனத்தால் இயக்கப்பட்டு சொந்த காரியத்திலும் இயங்குகிறது. ஆனாலும் இது கருவிகளே. இவைகளின் மூலமாக நான், எனது என்ற மனம் பாவனை பண்ணி அதை சொந்த காரியமாக ஆக்கி பிறவிக்கு ஏற்றுக் கொள்கிறது இந்த மனம்.

எப்படி என்றால்?

கால்கள், கைகள் :- இந்த இரண்டின் மூலமாக கர்மா சம்பந்த இடங்களுக்கு (காலால்) நடந்து சென்று கைகளால் கொடுத்தும் வாங்கியும் தம் கர்மாவை முடித்துக் கொள்கிறது. இங்கு நான் என்றும் என்னுடையது என்றும் இந்த மனம் பாவனை செய்து இக்கர்மாவை இயக்குவதால் மேலும் மேலும் கர்மா தொடர வாய்ப்பிருக்கிறது. இதனால் கர்மா முடிவதில்லை. இதை நடக்கும் போதும் இறைவா நீ என்னை நடப்பிக்கிறாய் என்றும், பொருள்களை கொடுக்கும் போதும் வாங்கும் போதும் இறைநாமத்தை சொல்லியே அக்காரியங்களைச் செய்தால் அவசியம் அக்கர்மா இச்ஜீவனைப் பற்றாது இது உறுதி!



2

மலஜலத் துவாரம் 2 :— இந்த இரண்டும் உடலின் கழிவுகளை வெளியேற்றும் நிலைக்காகவும், "ஜனனமே ஜனமாகிய கருவின் ஒரே துவாரமாகவும்" அமைந்திருக்கிறது. உடலின் கழிவுகள் எந்த ஒரு முயற்சியும் இல்லாமல் தாமாக இவைகள் வெளியேறி விடுவதால் இதற்கு எந்த சாதனையும் தேவை இல்லைதான். இருந்தாலும் கருவறை துவாரத்தை "குறிகள்" என சொல்வதுண்டு.

இங்குதான் சிருஷ்டியின் தவறும்;
வினைகளின் வலிமையும்;

**மெய்யுணர்வு கெடும் இடமாகவும்!!!**
**அமைந்திருக்கிறது!**

குழந்தைகளே!
இங்குதான் உங்கள் சாதனை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. உங்கள் ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும், அந்தக்கரணங்களும் அதிகமாக "**பாதிப்பது இங்குதான்**"

ஆகவே இங்கு சர்வ ஜாக்ரதையாக செயல்படுங்கள்.
இக்காலங்களில் ஆண்பெண் தாவதுலிங்கங்களை (உறுப்புகளை) காம நுகர்ச்சியாக நோக்காதீர்! கருத்தால் அவை ஒவ்வொன்றும் இறைவன் உங்களுக்கு அளித்த அருள் பிரசாதமாக எண்ணுவீர்களாக!

உங்கள் கண்களும், காதுகளும், வாக்காகிய நாவும் உங்கள் உபாசனமூர்த்தி எதுவோ
அந்த உறவாக, அந்த உணர்வாக, அந்த உணர்ச்சியாக, உங்கள் தாவ துன்பத்தை தொடங்குங்கள், அது அவசியம் "**கூடிய இன்பமாக**" முடியும்.

**அது "ஸத்கர்மாவாக" முடியும்.** [illegible]



௨

ஐந்தாவது கர்மேந்திரியமாக உங்கள் வாக்கு (நாவு) அமைகிறது. உங்கள் வாக்கே ஜகத்தாகவும், ஜீவனாகவும், ஈஸ்வராதிகளாகவும் அமைகிறது.

1. கடினமான, சுடுமான வார்த்தையை எந்நிலையிலும், எக்காலத்திலும், எந்த விதமும் பேசாதிருங்கள்.
2. ஆத்திரம், வேகம், அவசரம், விரோத குரோத, பழிபாவ, வார்த்தைகளையும் பேசாதிருங்கள்.
3. சொந்த, பந்த, பாச, உறவு வார்த்தைகளை நிலை கண்டு, இடம் கண்டு, செயல் கண்டு உணர்ந்து பேசுங்கள்.
4. கூடுமான வரை பேச்சைக் குறையுங்கள்.
5. எந்த வார்த்தை உங்கள் வாக்கிலிருந்து வந்தாலும் **இறை** நாம உச்சாரணத்துடன், உணர்வுடன், கலந்த "இன்சொல்லாக வர வேண்டும்."

இந்நிலையில் உங்கள் கர்மேந்திரியம் ஐந்தையும் முறைப்படி அடக்கி நீங்களும் இறைவனுள் அடங்கி நடந்து கொண்டீர்களானால் பிறப்பிறப்பிற்கும் உங்கள் கர்மேந்திரியங்கள் பயனற்றுப் போகும்!

4. பஞ்சகோசங்கள் (5) :- இவைகளை இணைப்புகள் எனச் சொல்வதுண்டு. அதாவது இவைகள் மனதையும், வினைகளையும் இணைப்பதாகும். இவை முறையே, அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என ஐந்தாகும். மயம் என்றுவே அதனதன் அம்ஸம் பொருந்தியவை எனப்பொருள். இனி அதன் விபரங்களை சற்று ஆராய்வோம்.

1. அன்னமயம் :- இது ஆகாரத்தின் மூலம் இயங்குவதாகும். ஆகவே இது அன்னமயம் எனப் பேர் பெறுகிறது. அன்னம் மிகமிக முக்கியம் காரணம் இந்த நாம் சாப்பிடும் அன்னமானது மூன்று நிலைகளில் நமக்கு உபகாரமாக இருக்கிறது. இந்த அன்னம் நம்முள் மூன்றாகப் பிரிகிறது; அதில் ஒன்று கழிவான மல மூத்திரங்களாகின்றன. ஒன்று நம் சக்தியின் நிமித்தம் தசை, தோல், கொழுப்பு, எலும்பு, மாம்ஸம் என இவைகளுக்கு ஊட்ட சக்தியைக் கொடுக்கிறது. மற்றொன்று இதுதான் முக்கிய காரணமாக மனமாகி வேலை செய்கிறது இந்த மனமே நமக்கு முக்கியமாகிறது.



2

ஆகவே சாப்பிடும் உணவு ஸுசவமாக இருக்க வேண்டும்.
அளவு கொள்ளும் அளவுக்கு சற்று மிதமாக (குறைவாக) இருக்க வேண்டும்.
எளிதில் ஜீரணிக்கக் கூடிய இதமான தாகவும் இருக்க வேண்டும்.
சாப்பிடும் உணவு இறை நாம உணர்வோடு அவன் பிரசாதமாக இருக்க வேண்டும்.
ஆகவே இந்த நான்கு நிலைகளிலும் உணவு பெற்றால்
கோப தாப குரூர எண்ணங்கள் குறையும்!
ஆத்திரம், வேகம், அவசரம் அடங்கும்!
மோக, காம எண்ணங்கள் குறைந்து குறைந்து மறையும்!
இதயத்தில் புகுந்த இறைபக்தி நிலைத்து நிற்கும்!
பொறுமை, அமைதி, சாந்தி, நிறைவு, அடக்கம் நிலைத்து நிற்கும்!
இந்நிலையில் உணவு ஏற்றுக் கொண்டால் அன்னமயம் சீராக
இயங்கும் மனம் மலினப்படாமல் மலர்ந்தாகும்!

2. பிராணமயம் :-(காற்று) இது சாதாரணமாக வெளியில்
சஞ்சாரம் செய்யும் போது காற்று (வாயு) என்று சொல்வார்கள்.
நமக்குள்ளே அது சுவாசமாக போக்குவரவு செய்யும் போது
அதை பிராணன் எனச் சொல்வதுண்டு! இந்த வாயு நமக்குள்
இயங்கும் போது பிராணன், அபானன், சமானன், வியானன்,
உதானன் என ஐந்தாக பிரிக்கப்படுகிறது. இதில் பிராணன்
ஒன்றே உயிர் மூச்சாக கருதப்படுகிறது மற்றும் இதயஸ்தானத்
தில் இருந்து கொண்டும், வயிற்றில் இருந்து கொண்டும் மற்றும் உடல்
எங்கும் பரவிக் கொண்டும், ரத்தத்தை சுத்தம் செய்வதும்,
போடும் ஆகாரத்தை எரித்தும், இது வெளியேறும் காலை வாய்
வழியாக கொட்டாவி என்றும், மலத்துவாரத்தின் வழியாக
வெளியேறும் அசுத்தக் காற்று என்றும், நாடியில் செல்லும்
போதுமட்டும் பிராணன் என்றும், அதுவே பிராணாயாம பயிற்சி
யினால் அதோ (கீழ்) முகமாகச் செல்லாமல், ஊர்த்வ (மேல்) முக
மாக செலுத்தப்படுகிறது அது வாசுதேவன் என்றும், அதுவே
சகஸ்ராரம் வரை சென்றடையும் போது அதற்கு பரவாசுதேவன்
என்றும் பற்பல நாமம் பெறுகிறது. ஆனால் இந்த பிராணன் நமக்குள்
(நாசியில்) போக்குவரவு செய்ய இல்லையானால் பிராணன் என்று
சொல்லக் கூடிய இந்த உயிர் இல்லாமல் சவம் ஆகிவிடுவோம்
இந்த பிராணனின் முக்கியம் என்னவென்றால்?



உ

நாம் ஆத்மாவே இது ஸத்யம்; ஆனாலும் இந்த ஆத்மாவை பந்தப்படுத்திக் கொண்டு, அந்த பந்தபாசமென்னும் போர்வையை இந்த ஆத்மாவின் மேல் சுமத்தி நீ ஆத்மா அல்ல நீ ஓர் ஜீவனே என பட்டயம் கட்டி வைத்திருக்கிறது இந்த மாயாமனம். இந்த மனதை நம் வழிக்கு கொண்டு வந்து அதை மறந்தாக்கும் பரியந்தம் நாம் ஜீவனே.

ஆத்மாவாகிய நாம் பந்தப்பட்டதால் ஜீவனே. இந்த ஜீவன் அறியாமையென்ற மேலே சொல்லிய திரையை நீக்கும்பரியந்தம் புண்ணியபாப வசத்தனாய் பற்பல பிறவி எடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. அந்த பிறவியின் காரணமாக ஓர் சரீரம் விட்டு இன்னோர் சரீரம் செல்ல

"வாகனமாக இருப்பது இந்த பிராணனே"

இந்த பிராணனே ஓர் சரீரம் விட்டு மற்றோர் சரீரம் செல்லும் வாகனமாக இருப்பதால் இந்த பிராணன் முக்யத்வம் பெறுகிறது. ஆகவே இந்த பிராணனை ஓர் கட்டுக்குள் அடக்கி வைக்க வேண்டும்! அதற்கு இருவழிகள் உள்ளன ஒன்று பிராணயாமம் செய்தும் பிராணனை அடக்கலாம். மற்றொன்று "தேவைகளையும் ஆசைகளையும் மனோ நிலையில்" குறைத்து குறைத்து குறைந்து இல்லாமல் குறைப்பதினாலும்

அதாவது!

"ஆசைகள் குறைத்து குறைத்து அழிப்பதனாலும்."

இந்த மனம் அடங்குவதோடல்லாமல் அழியவும் அதாவது மறந்தாக்குவதனாலும் ஆத்ம ஞான சாதனைக்கு உறுதுணை ஆகிறது!

ஆகவே எம் அன்பு மழலைகளே! உடைமைகளை பெருக்காதீர்! தேவைகளை பெருக்காதீர்! ஆசைகளை விரிவடைய செய்யாதீர்! சிறு சிறு கோபம் இருக்கலாம் குரோதம் வந்திடவும் வேண்டாம்! சின்ன சின்ன ஆசைகள் இருக்கலாம் மோகம், காமம், ஆவேசம் வெறி, அடாபிடித்தனம் வேண்டவே வேண்டாம்!!



2

பின் அந்த சின்ன சின்ன ஆசைகளையும் சின்ன சின்ன கோபங்களையும் நிலஅறிந்து அகற்ற பழகுங்கள். அவைகளை நச்சரவமாக எண்ணி விலகுங்கள்.

சின்ன சின்ன சர்ப்பம் தானே வளர்ந்து பெரிதாகிவிட்டால் எந்த நேரமும் விஷம் கக்கும் கொடியதாகிவிடுகிறது.

"சிறியபாம்பானாலும் பெரிய கம்பு கொண்டு அடி" என்பார்கள். ஆகவே தேவைகளிலும், ஆசைகளிலும் எச்சரிக்கையாக இருந்தால் அவஸ்யம் பிறாணன் உங்கள் வசப்படும் இது உறுதி!

3. மனோமயம்:- இதை வாஸனாமயம் எனச் சொல்லலாம் வாசனை என்றால் குணமயம். **குணமே மனம்; மனமே குணம்!!** இதைத்தான் எம் தாயுமானவர் அவர் பராபரக் கண்ணியில் அழகாகச் சொன்னார்

"சினம் இறக்கக் கற்றாலும், சித்தியெல்லாம்
பெற்றாலும், மனம் இறக்கக் கல்லார்க்கு,
வாயேன் பராபரமே" என்றார்! அதாவது

ஆசை கோபம் முதலிய கொடூர குணங்களை அழிக்கலாம்; !
அணிமாதி அஷ்டசித்திகளையும் எளிதில் கற்கலாம். !!
ஆனால்

**இந்த மனதை** (அடக்குவதல்ல) **அழிப்பது மஹா கஷ்டம்!!**

குழந்தைகளே!

இந்தமனதிற்கு வடிவம் இல்லை, இருப்பில்லை; அப்போதைக்கப்போது ஆங்காங்கே தோன்றுவதால் அதை இடம், நேரம், பக்குவம், அதன் இருப்பு, இவைகளை கண்டு அழிக்க முடியாதுதான்! ஆனால் சுலபமாய் முடியும்!

மனதிற்கு வடிவம் வாஸனையாகும் அதாவது குணங்களாகும். அக்குணம் தோன்றும் இடம் நாமரூப அசைவுகளாகும். அந்த நாமரூப அசைவானது நடப்பது போன்றும், கொடுத்து வாங்குவது போன்றும், விகாரத்தால் விவரிப்பது போன்றும், தொடும் ஸ்பரிசத்திலும்.



உ

பெரும்பாலும் குணம் தோன்றுகிறது இதை நன்றாக கவனித்தால்
இயற்கையை செயற்கையாக்கி அந்த செயற்கையை நான்
என்றும் என்னால் என்றும் என்னுடையது என்றும்,
சொந்த, பந்த, பாசப் பிணைப்பினால் இந்த மனம் தோன்றுகிறது.
இந்த பாசப் பிணைப்பான வார்த்தைகளை விட்டு,
எல்லாம் நீயே என்றும் எல்லாம் உனதே என்றும்,
உன் சுய அனுபவத்தால் "எல்லாம் நாமே" எனும் தன்மையாக
வும் "எல்லாம் நமதே" எனும் தன்மையாகவும்

**"வாக்கும், செயலும் மாற வேண்டும்"!!**

உலகம் வாக்கால் ஆனது; செயல் கர்மாவால் முடிவுறுவது!
இந்த இரண்டும் மௌனம் ஆனால் கர்மா இல்லவே இல்லை!
கர்மா இல்லாத இடத்தில் மனதிற்கு இடம் ஏது??
கர்மா குண சம்பந்தம்; குணம் மன சம்பந்தம்;

**மனம் வாக்கு சம்பந்தம்**

வாக்கை குறைத்து குறைத்து **நிறுத்தி நிறுத்தப்**
பழகிக்கொண்டால் மனம் உன் வசம் ஆகும் அதாவது
மனம் மறைந்தாகும். இந்த மனோமய கோசத்தை
இணைமை இந்த விதம் அகற்றுவாயாக!

4 விஞ்ஞானமயம்:- இதுவும் மனதின் வேலை தான்,
அதாவது உண்மை இன்மையைப் பிரித்தறிதலாகும். இங்கு
வைராக்யம் தான் செயல்படும். அதாவது உலகியல் மயக்கத்
தையும் தெய்வீக பயத்தையும் களைவதாகும்! என்னதான் முயற்சி
செய்து உலகை இல்லை இல்லை என தள்ளினாலும், உலகம் நான் இருக்
கிறேன் நான் இருக்கிறேன் என முன்னோடியாக வரும். காரணம் உல
கின் நாம ரூப குணம் சாமான்யமாக போகாது தான் ஆனாலும் முன்பு
மனோமயத்தில் சொல்லியபடி தீவிர வைராக்கியமாய் இருந்து



"பூஷணம் உண்மையல்ல பொன்னே உண்மை"
என்றும்
"பாண்டம் உண்மையல்ல மண்ணே உண்மை"
என்றும்
"வஸ்திரம் உண்மையல்ல பஞ்சே உண்மை"
என்றும்
"ஆயுதம் உண்மையல்ல இரும்பே உண்மை"
என்றும்
"லவணம் (உப்பு) உண்மையல்ல ஜலமே உண்மை"
என்றும்
இப்படி உண்மை இன்மையை பிரித்தறிவது போல் ஆரம்பத்தில் உலகமும், அதன் பொருளும், உறவு முறைகளும் உண்மையல்ல **"இறைவன் ஒருவனே உண்மை"**
என்றும்
பின் உன் அனுபவத்திறல் இறைவனும் அவன் மாயா காரியமும் உண்மையல்ல அதற்கு அதிஷ்டானமான **"பராபரம் ஒன்றே உண்மை"**
என்றும்
அந்த **பரமும்** இறைவனே அதுவே **"நாம்"**
என்றும்
சந்தேகமற உறுதி நிச்சயம் செய்யும் சாதனையே விஞ்ஞானமயமாகும்.

5. ஆனந்தமயம் :- மேலே சொன்ன அந்த முடிவை நாம் அடையும் முன்பு நாம் அடைந்துவிட்டோம். நாம் அந்த ஒன்றாகவே இருக்கிறோம்; அதுவும் நானும் ஒன்றே!
**"என்ற அந்த ஓர் உணர்வாக"!!**
இருப்பதுவே ஆனந்தமயமாகும். இதில் விஞ்ஞானமயம் மகேஸ்வரன் நிலையாகவும், ஆனந்தமயம் சதாசிவ நிலையாகவும் கொள்ளலாம்.



உ

ஆவலி?

இந்த ஆனந்தமயமும் உண்மையல்ல இதை பஞ்சபூத வடிவில் சொல்வது என்றால் காற்று விஞ்ஞான மயமாகவும் ஆகாயம் ஆனந்தமயமாகவும் சொல்லலாம்! காரணம் காற்று அதி சூட்சுமமானது யோகம், சித்திகள், வைராக்கியங்கள், கடும் முயற்சியும் முடிவும் வாயுமண்டலமாகும். இதுவே பிரித்தறிதலும் அந்த வைராக்கியம் சித்தி பெறும் இடமுமாகும்.

ஆகாயம் சூட்சுமத்திலும் சூட்சுமமானது அதி அணுக்களின் கூட்டங்கள் ஆவானதும். வாயுவில் பிரிவு உண்டு இங்கு பிரிவு இல்லையெனலாம். அதாவது அந்த **“ஒன்றை உண்டு என்றும்”** இருப்புத்தன்மையாகும்.

5. அந்தக்கரணங்கள்:- இவை நான்கு ஆகும்!

அதாவது **மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்.** என நான்காகும். இவைகள் அதி முக்கியமாகும்!

**மனம்**:- இதன் அதிஷ்டான தேவதை சந்திரனாகும். சந்திரன் சுய ஒளி இல்லாதவன், சூரியனின் ஒளியை வாங்கியே பிரகாசிக்கிறான். சந்திரனைப்போல ஓர் சாதகனானவன் இருக்க வேண்டும், எப்படி என்றால் சூரியனின் உக்ரமான கிரணங்களை தாம் ஏற்றாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் உலகின் ஜீவர்களுக்கு குளிர்ச்சியை மட்டுமே தருகிறான். அதேபோல் ஓர் சாதகன் உலகின் கோப தாப வேக உக்ர உணர்ச்சிகளால் தாம் தாக்கப்பட்டாலும், அவைகளை தாம் சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக்கொண்டு அதை தாம் ஜீரணித்துக் கொண்டு எந்நிலையிலும் அமைதி, சாந்தி, பொறுமை, கருவி அடக்கம், புலனடக்கம் இவைகளுடன் “திருப்தியை” மட்டுமே மற்றும் ஜீவர்களுக்கு கொடுக்க வேண்டும். சந்திரனின் கலை நிலையானதல்ல தேயும், வளரும் அதேபோன்று நம் மனமும் சிலசமயம் எண்குணமும் கொள்ளும். ஏகுணமும் கொள்ளும். சந்திரன் ஒளியைத்தவிர வேறு எதுவும் உபயோகமற்றவன், அதேபோல் சத்வ குணம் ஒன்றை மட்டுமே



உ

இந்த மனம் வைத்துக் கொண்டு எதற்குமே
உதவாத குணம் அனைத்தும் களைந்தெறிய வேண்டும்! இதை
எம்பெருமான் ஸ்ரீ கிருஷ்ணர் தம் வாழ்க்கையில் சொல்வார்:
ஸ்ரீராமா! சந்திரனைப் போல விமலமாகி குளிர்ந்த
சாந்தியில் இந்த மனமானது நின்றால்"
"**பழமையான ஆத்மானுபூதி**" அனைத்தும் சித்திக்கும்.
இதன் சாதனையாவது
உடல் உலகபாவனை கெடவும், வலிய ஆசை கெடவும்,
தமக்கு முன் வருவதை எல்லாம் மஹா சாந்தியாய் இருந்து
ஜயித்தவர்களே இந்த மனதை ஜயித்தவர்களாவர்!
என்றார். ஆகவே உங்கள் மனதை எந்த விதமும் பூரண சந்திரனை
போல் பிரகாசமாகவும், குளிர்ச்சியாகவும் வைத்திருக்க
முயலுங்கள் உங்களால் முடியும்!

உ **புத்தி**:— புத்தியின் அதிதேவதை பிரம்மா வாகும்.
அதாவது நான்கு (திசைகளை) சிரங்களை உடைய நான்முகனாகும்.
இவருடைய தொழில் சிருஷ்டியாகும். இவர் சிருஷ்டி மண், மலை,
மரம், செடி, கொடி, புல் பூண்டு முதலிய தாவர வர்க்கங்களும்
84 லட்சம் ஜீவ கோடிகளின் தூல சரீரங்களும் ஆகும்!
இவைகளை ஜடம், கடம், படம் என சொல்வார்கள்

"இதுவே மனமாகிய பிரம்மாவின்
கற்பனை சிருஷ்டியாகும்"

இந்த ஜட கட படாதிகள் இயற்கையாகவே இருக்கும்
போது இந்த மனவசப்பட்ட ஜீவனுக்கு உபாதைகள் இல்லை.
இவைகள் கற்பனை சொரூபங்களாக இருந்தாலும் மேலும் இதை விலை
யைச் செய்து குணசொரூபங்களாக்கும் போதுதான் மனதிற்கே
அவஸ்தையாகிய நான் என்ற அஹங்காரமும் என்னுடையது என்ற
அபிமானமும் "**பற்று**" என்று வடிவில் தோன்றியது. அதாவது
மண் மலை ஜலம் மரம் இவைகளை வைத்து வீடு என ஆக்கி கொண்டான்.
மற்றும் தம் உபகரணங்களாக பாத்திர பண்ட, தளவாடச் சாமான்க
ளாக்கினான். செடி கொடிகளை உணவாகவும், நவதானியமாகவும்,
புல் தாம் வளர்க்கும் மிருகங்களுக்கு உணவாகவும், பூண்டை
தமக்கு வியாதியின் மருந்தாகவும் ஆக்கிக் கொண்டான்.



உ

இப்போது இந்த மனதிற்கு,
"எதை எதிலிருந்து தோற்றுவித்துக் கொண்டோமோ
"**அந்த மூலம்**" (அதிஷ்டானம்) மறந்து விட்டது?"
ஆசையாக, சுவையாக, இனிமையாக, அத்யாவஸ்ய
உபயோகமாக மாறி எந்த
"**நாமரூபத்தை**" கொடுத்தோமோ அந்த "**ஆரோபத்தை**"
ஸ்திரமாக உண்மையாக, ஸத்யமாக பற்றிக் கொண்டோம்
இதனால் "**ஆதி**" மறைந்தது. "**வியாதி**" இந்த மனதை பற்றிக் கொண்டது.
இந்த வியாதி நீங்கினால்
மனோ அவஸ்தையும் இல்லை. அதனால் வினையும் இல்லை. அதனால்
பிறப்பிறப்பும் இல்லை. இந்த வியாதி உண்டாவதற்கு காரணமே
சித்தம் தான்!!

3. **சித்தம்** :— இந்த சித்தத்தின் அதிஷ்டான தேவதை விஷ்ணு.
இவன் அலங்காரப்பிரியன். மனதில் எண்ணம் உதித்து, அது
கற்பனையின் வடிவாக புத்தியில் வளர்ந்து, இந்த சித்தத்தின்
மூலம் தான் ஸ்திரப்படுத்தப்படுகிறது. அதாவது இதுதான் என்று
உறுதி செய்யப்படுகிறது. அதாவது,
மனதில் தோன்றி, புத்தியினால் கற்பனையில் விரிந்து பரந்து;
சித்தத்தினால் அழகு, கவர்ச்சி, வசீகரம், ஆடம்பரங்களால்
மிகைப்படுத்தப்பட்டு **இதுதான்** என நிச்சயிக்கப்படுகிறது.
இந்த சித்தம் தான் தம் கவர்ச்சியால் உணர்ச்சிகளை தூண்டி
சரீர உணர்வையும் அதனால் உறவுகளையும் வலுப்படுத்துவதாகும்.
மனதிலும் புத்தியிலும் கூட இந்த மலினமாயை அதிகம் விளை
யாடுவதில்லை. இந்த சித்தத்தில் தான்

**மலினமாயை புகுந்து விளையாடுகிறது.**



2

இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும்;
இதைப் பார்க்க வேண்டும்; அதைப் பார்க்க வேண்டும்;
இதை உண்ண வேண்டும்; அதை உண்ண வேண்டும்;
இதை அனுபவிக்க வேண்டும்; இப்படி அனுபவிக்க வேண்டும்;
இன்னாரைப் பார்க்க வேண்டும்; இன்னாருடன் பேச வேண்டும்;
இதை இப்படி முடிக்க வேண்டும்; அதை அப்படி முடிக்க வேண்டும்!

என **"எண்ணத்தை"** மட்டும் தோற்றுவிப்பது **"மனமாகும்"**

மேலே சொன்னபடி உருவாக்கப்பட்ட எண்ணங்களுக்கு அந்தந்த தளங்களில் அந்தந்த நிகழ்ச்சிகளில் தோற்றம் மாற்றம் உண்டாக்கவும் அவைகளுக்கு தக்கபடி **"கற்பனை சொரூப நாமங்களை"** கொடுப்பது **"புத்தியாகும்"**!

கற்பனையின் மனம் எப்படியெல்லாம் விவரிக்கிறதோ அப்படியெல்லாம் அங்கங்கே அப்போதைக்கப்போது, அக்காட்சிகளுக்குத் தக்கபடி எடுத்தாடும் நாமரூபங்களை **"நிலைக்கேற்ப குணதோஷங்களையும்"** வடிவ தோற்றத்தின் நிலைக்கேற்ப **"அழகு தோஷங்களையும்"** கொடுத்து ஆட வைத்து அவைகளை **"இது தான்"** என உறுதிப்படுத்தி வினைப் போகங்களை புகுத்துவது இந்த **"சித்தமாகும்"**!!!

4. **"அஹங்காரம்"**:– முன்பே சொன்னோம் மண், மலை, ஜலம், மரம், செடி, கொடி, புல், பூண்டு, மற்றும் ஜீவத சரீரங்கள் அனைத்தும் **"இயற்கை"** என்றும், இயற்கையே இறைவன் என்றும், 5. ஜலம் தவிர மற்றும் அனைத்து **"மண்ணே"** அதாவது பிருதிவியே; சொன்னோம். இவை அனைத்தையும் மண்மயமாகவே பார்க்கப் பழகிவிட்டால் நாமரூப பிரச்சனையும் வராது; அவைகளை ஆட்டிவைக்கும் குணதோஷ பிரச்சனைகளும் வராது; அதனால் வினையின் தொடர்பும் உண்டாகாது

இதையே உபநிஷத் சொல்வது

"மண்மய சிருஷ்டி மஹேசன் சிருஷ்டி" என்றும் மனோமய சிருஷ்டி ஜீவன் சிருஷ்டி என்றும் கூறுகிறது!



உ

பொன்னை ஆபரணமாகப் பார்த்தோம்; பொன்னை மறந்து விட்டோம்.
மண்ணை பாண்டமாகப் பார்த்தோம்; மண்ணை மறந்து விட்டோம்.
ஜலத்தை உப்பாகப் பார்த்தோம்; ஜலத்தை மறந்து விட்டோம்.
பஞ்சை வஸ்திரமாகப் பார்த்தோம்; பஞ்சை மறந்து விட்டோம்.
இரும்பை ஆயுதமாகப் பார்த்தோம்; இரும்பை மறந்து விட்டோம்.
இப்படி கோடானு கோடி
அதிஷ்டானத்தை விட்டு ஆரோபத்தில் இந்த மனம் மாட்டிக் கொண்டது.
இயற்கையை இயற்கையாகவே பார்ப்பதில் எந்த கஷ்டமும் இல்லை தான்
நாம் உண்டாக்கிய நாமரூபத்திற்கு ஆனாலும் மதிப்பு இல்லையே என்றும்,
அதை மாற்றினால் ஊர் உலகம் என்னென்ன பழி சொல்லும் என்றும்
நாலு பேர் நம்மை மதிக்கமாட்டார்களே என்றும் அபிமான
அஹங்காரத்தினால் உந்தப்பட்டு மயங்கி தயங்கி நிற்கிறீர்கள்.
இந்த அஹங்காரத்தின் அதி தேவதை ருத்ரன் (சிவன்) ஆகும்!
முன்பு சொன்னதுபோல் ஓர் எண்ணத்தை வகுத்தது "மனம்"!
அதை தம் கற்பனையால் விரிவடையச் செய்தது **புத்தி**!!
அதை அழகுபடுத்தி ஓர் ஈர்ப்பு சக்தியை கொடுத்தது **சித்தம்**!!!
அதை நான் செய்தேன், என்னால் முடியும் என அஹங்
ரித்தும் என்னுடையது என அபிமானித்தும் ஜீவனின்
கண் உண்டு பண்ணும் இந்த இல்லாத உலகை உண்டு
உண்டு, உண்டு, என உயிரூட்டியது இந்த **அகங்காரம்**!
இவைகளே தான் அந்தக்கரணங்களாகும்!

குழந்தைகளே!
பஞ்சபூதங்களால் உலகம் உண்டானது
வும், பஞ்சபூதங்களால் பஞ்சீகரணம் செய்யப்பட்ட அனைத்து ஜீவ
சரீரங்கள் உண்டானதும், பஞ்சப்பிராணனோடு பஞ்சகோசங்களோ
உண்டானதும் இந்த அந்தகரணங்கள் இல்லையானால் அனைத்தும்
ஜடமே! இந்த அந்தக்கரணங்களாலே தான் இயக்கமும், அதன் கர்மா
வும் அந்த கர்மாவினால் தோற்றம் இருப்பு மாற்றம் மறைவு அனைத்தும்
நடைபெறுகிறது இவை அனைத்தையும் ஒரே வார்த்தையில் சொல்வது
என்றால் அனைத்திற்கும் "**காரணகர்த்தா மனமே**"!!!



உ

இந்த மனம் இல்லையானால் எதுவும் இல்லவே இல்லை.
இந்த மனம் கீழ் இறங்காமல் அதாவது புத்தி சித்தம் அகங்காரம் என உடல், உலக, உறவு, சொந்த பந்த பாச, உணர்ச்சிகளுக்கு இறங்காமல் (இறங்கினால் துக்கம், பயம், கஷ்டம், கவலை தான்)

**மனம், அறிவு, ஆத்மா, பரமாத்மா, பராபரம்**

அதாவது "**பரம்பொருள்**" என மேல் நோக்கிச் சென்றால்,
விகாரமாக தோற்றும் மனமும் இல்லை; விவகரிக்கும் (விளக்கம் கொடுக்கும்) உலகமும் இல்லை; அதை சிருஷ்டிக்கும் கர்த்தாக்களாகிய ஈஸ்வராதிகளும் இல்லை; இவர்கள் தோன்றிய அந்த பராபரம் என்னும் பொருளும், வாக்கும் இல்லை

இவைகளின் நிழலாகிய மூலமாயையும் இல்லை

எதுவுமே இல்லை!

இல்லை, இல்லை; இல்லை, இல்லை; இல்லை, இல்லை, "**இல்லையே**"!

இல்லை என்றதில்லையில், இல்லை யென்பதும்,

**இல்லையே !!!**

ஆனால் ஒன்றுண்டு

குழந்தைகளே!

இந்த விதமாக 96 தத்வ விளக்கங்களும் தத்வ ஆய்வுகளும் சொன்னோம். மஹா மௌனத்தில் தான் மஹா சிந்தி சித்திக்கும்! இதன் உண்மை என்னவென்றால் **ஒருவரிடம்** இருந்தால் தான் அது மஹா மௌனமாய், மஹா ரகஸ்யமாய் அந்தரங்கமாய் காப்பாற்றப்பட்டு அது **பிரகாசிக்கும்**!

"**இருவர் என்றாலே அம்பலம்**" (அது அக்கிசை)

ஆகவே துவைதம் கூடாது என்பதற்கில்லை துவைதம் தான் இல்லவே இல்லையே! ஓர் ஆனந்தம் அனுபவிப்பது என்றால் ஆனந்தம் அனுபவ நிலை ஒன்று; அந்த ஆனந்தம் கொடுப்பவர் ஒருவர்; அந்த ஆனந்தம் அனுபவிப்பவர் ஒருவர் இப்படி இந்த இருவர் வேண்டும். வந்த ஆனந்தம் மறைந்தால் துன்பம் தானே?



உ

# முடிவுரை!

ஓம் அன்பின் ஞானக்குழந்தைகளே!

மேலும் இதை
உள்நோக்காக உணர்ந்து பார்த்தால் "**ஒருவர்**"
என இருந்தாலும், அந்த ஒருவர் யாருக்காக இருக்கிறார்? அவர் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்ய முடியும்? செய்வதற்கு என்ன இருக்கிறது? அப்படி ஒன்றுமில்லாத் தன்மையினில் அவர்தான் இருந்தென்ன? அவரால் எவருக்கும் லாபமோ நஷ்டமோ, இன்பமோ துன்பமோ, சுகமோ துக்கமோ, நன்மையோ தீமையோ உண்டா? மேலே சொன்னவைகளை ஏற்பவரும் இல்லை! மேலே சொன்னவைகளை உண்டுபண்ணும் பொருளும் இல்லை!

விகாரவிவகாரத்திற்கு (பிரச்சனைக்கு) உதவாதவன் ஒருவனாயிருந்தும் அவன் பிணம் தானே! அதாவது "சிறுதுரும்பும் பல் குத்த உதவும்" என்பார்கள் இங்கே **பல்லே இல்லையே!** பின் **துரும்பெதற்கு???**

அதாவது!!
**பல்லாகிய நீங்களே இல்லை** பின் உங்களை குத்தும் **துரும்பாகிய** (தாளியாகிய) **யாம் எதற்கு???**

காலாதீத அந்த ஒன்றாக யாம்
**இருந்தோம்! இருக்கின்றோம்!! இருப்போம்!!**

மாசிமாதம் 26 தேதி. – 10-3-2003. **பாபா.**
திங்கள்கிழமை. சுபமுகூர்த்தம்
காலை நல்ல நேரம் 9-30
அமுதபிரவாஹத்தை நிறுத்திக்கொண்டோம்!
**முடிவு இல்லை!!!**


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!